DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative, kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative, homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7, 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1, 905-794-4404
online service: www.remitbee.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1350 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 18, 2022

# கியூபெக் Dollar – Des – Ormeaux நகர பிதா Alex Bottausci அவர்களுக்கு கனடா உலகத் தமிழ் பண்பாட்டுக் இயக்கம் பாராட்டுப் கேடயம் வழங்கியது

கனடா-வாழ் தமிழர்கள் ஆண்டுதோறும் தைத்திங்கள், பொங்கல் நாளை "தமிழர் மரபு தினம்" எனக் கொண்டாடி வருவருகின்றனர். அத்துடன் தை மாதத்தை கனடாவில் உள்ள மத்திய அரசாங்கம் மற்றும் பல மாநில அரசாங்கங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கள் ஆகியன தமிழர் மரபு மாதமாக அங்கீகரித்தன.

கியூபெக் மாநில நகரங்களில் ஒன்றான **DDO** என்று சுருக்கமாகச் சொல்லப்படும் நகரமான **Dollar-des-Omeaux** நகர பிதாவான அலெக்ஸ் பொட்டாச்சி அவர்களது நகரசபை அங்கத்தினர்கள் அனைவரும் இந்நகரில் வாழும் தமிழர் சமூகத்தின் வேண்டுகோளை ஏற்று தமிழர் மரபு நாளை நகரசபை நிர்வாகம் அங்கீகரித்து தை மாதத்தை தமிழர் மரபுரிமை மாதமாகவும்ம் அங்கீகரித்துள்ளமை பெருமை தரும் நிகழ்வாகும்.

*(தொடர்ச்சி உள்ளே 21ம் பக்கத்தில்)*



RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance, First Mortgage, Second Mortgage, Commercial Mortgage, Equity Loan
ACCOUNTING
Personal Income Tax, Corporate Income Tax, HST Returns, Bookkeeping Service, Payroll Service, Audit preparation, Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

# தற்கொலைத் தடுப்பில் காவல்த்துறையின் பணி - வே பாலகிருஸ்ணன் இ.கா.ப

## மத்திய மண்டலம், திருச்சி, தமிழ்நாடு



உடலுக்கும் மனதுக்கும் உயிரியல் ரீதியாக இருக்கும் தொடர்பு உலகம் அறிந்ததே! உடலில் இருக்கும் உபாதைகள் மனநலத்தை பாதிப்பதும், மனதில் இருக்கும் இன்பத்துன்பங்கள் உடல் நலத்தை பாதிப்பதும் நாம் அறிவோம். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது தமிழ் பழமொழி. உலகம் முழுவதும் உள்ள எல்லா கலாச்சாரங்களிலும் இதுபோன்ற பழமொழிகள் இருப்பதிலிருந்து உலகம் முழுவதும் இந்தப் புரிதல் எல்லோருக்கும் இருப்பது தெரியவருகிறது.

அறிவியல் ரீதியாக மனிதன் மற்றும் விலங்குகளின் மூளையில் "லிம்பிக் சிஸ்டம்" எனப்படும் மூளையின் ஒரு புகுதி "கிப்போகேம்பஸ், ஹைபோதலாமஸ், பிட்யூட்டரி சுரப்பிகள், அமைக்டாலா ஆகிய சுரப்பிகளை உள்ளடக்கிமகிழ்ச்சி மற்றும் உற்சாகம் தரும் ஹார்மோன்களை சுரந்து அதன் மூலம் மனிதனை மகிழ்ச்சி தரும் செயல்கள் நோக்கி நகர செய்தும், வாழ்வியலுக்கான அடிப்படைத் தேவைகளை தேடிச் செல்லவும் வழிவகுக்கிறது.

*(தொடர்ச்சி உள்ளே 8ம் பக்கத்தில்)*

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
TEAM BLUE FORCE
RE/MAX REALTRON BLUE FORCE
416 2888882
கவாஸ். சோம சச்சிதானந்தன்

# DEBT FREE CREDIT SOLUTION

- **கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்**
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money

- **பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்**
  We shield you from your creditors and offer you a guranteed protection

- **கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு**
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares

- **உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்**
  We arrange a sensible Repayment Plan minimizing potential lossesand avoiding bankruptcy



DF CREDIT SOLUTION
SETTLEMENT | CONSUMER PROPOSAL | BANKRUPTCY

**Head Office**
10 Milner, Business court, Suite 334
Toronto, ON M1B 3C6

**416. 834. 7227**
www.dfcstoday.ca
info@dfcs.today

**Branches**
Mississauga | Vaughan

**ELANKEERAN THAN**
Certified Insolvency Counsellor

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### சாஸ்திரம்

மதுரை மீனாட்சி துணை
கடந்த 40 வருடத்திற்கு மேல் அனுபவமிக்க நந்தி வாக்கிய ஓலை சாஸ்திரம்
பிறந்த திகதி, வருடம், மாதம், நேரம் சொன்னால் போதும் நடக்கப்போவதை மிக துள்ளியமாக கணித்து சொல்லப்படும்.


தொடர்புகளுக்கு: கோ. காசிலிங்கம்
437-925-5643

### House for Rent

**Brimely/ Eglinton** சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றின் மேல்த் தளம் தனியாக வாடகைக்கு உண்டு. 3 படுக்கை அறைகள். 2 குளியல் அறைகள் அத்துடன் **Washer, Dryer** ஆகியன தனியாக உள்ளன. **2 Car Parking** வழங்கப்படும். கடைகள். பாடசாலை பஸ் வசதி, வங்கிகள் ஆகியன மிக அருகில். விபரங்களுக்கு:

**647-981-1997**

### CAR LOANS



Newcomers to Canada
Bankruptcy
Pandemic problems
Divorce
Limited credit/bruised credit
Collections
Not sure of your credit?

*Applying for a vehicle loan online is one of the quickest and easiest ways to apply.*



Our secure online application is easy to complete, just go to
gopal@driveautogroup.ca
Or call Gopal Pillai at:
**(647) 763-0210**

brimell

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### Basement for Rent

**Salem / Rossland (Ajax)**

**Brand new 2 bedroom basement available for rent.**

புதிதாக திருத்தப்பட்டுள்ள 2 அறை கொண்ட basement உடனடியாக வாடகைக்கு உண்டு.

**Call: 647-706-4969**

### Help Wanted

**Richmond Hill** நகரத்தில் வாரத்தில் இரண்டு தடவைகள் ஒருவருக்கு தமிழ் உணவை விநியோகம் செய்வதற்கு உடனடியாக ஆள் தேவை. வாரத்திற்கு கட்டணமாக 100 டாலர்கள் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு **Frank** என்பவரை அழைக்க வேண்டிய இலக்கம்:

**416-543-9349**

### நேரலை வீடியோ ஒளிபரப்பு சேவை

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்திலும் கியுபெக் மாகாணத்திலும் தமிழ் மக்கள் மத்தியில் இடம்பெறும் சுப வைபவங்கள் மற்றும் இறுதிக்கிரிகையகள் ஆகியவற்றை நேரடியாக வீடியோ ஒளிப்பதிவு செய்வது மாத்திரமன்றி. அந்த நிகழ்வுகளை நேரடியாக முகநூல் மற்றும் இணையத் தளங்களில் நேரலையாக ஒளிபரப்பவும் எம்மை அழையுங்கள். குறைந்த கட்டணமே அறவிடப்படும் அழையுங்கள்

**சிவா 647 891 7725**

# உதயன் கதிரோட்டம்

## இராஜபக்ச ஆட்சியின் மீதான மக்களின் அதிருப்தி கருத்துக்கணிப்பு ஒன்றின் மூலமாக நிரூபணமாகியுள்ளது

தற்போது இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் உள்ள ராஜபக்ச சகோதரர்களின் நிர்வாகத்தில் பல 'ஓட்டைகள்' ஏற்பட்டுள்ளதால் அந்த ஆட்சி ஆட்டம் காண்பதாக கொழும்பிலிருந்து கிடைக்கப்பெற்ற செய்திக் குறிப்பு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளுத.

இலங்கையின் ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர், இளைஞர் விவகார அமைச்சர் என அனைத்து முக்கியமான அரச பதவிகளில் அமர்ந்த வண்ணம் சலுகைகளையும் சுகபோகங்களையும் அனுபவிக்கும் இந்த சகோதரர்களின் ஆட்சியான இராஜபக்ச ஆட்சியின் மீதான மக்களின் அதிருப்தி கருத்துக்கணிப்பு ஒன்றின் மூலமாக நிருபணமாகியுள்ளது

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உட்பட ராஜபக்ச குடும்பத்தின் முக்கியஸ்தர்கள் வழிநடத்தி வரும் தற்போதைய அரசாங்கம் தொடர்பான புதிய கருத்து கணிப்பு முடிவு ஒன்று வெளியாகியுள்ளது.

இந்த கருத்து கணிப்பின் முடிவுகளுக்கு அமைய பெரும்பாலான மக்கள் அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கொள்கைகள் தொடர்பான கற்கை கேந்திர நிலையம் இந்த கருத்து கணிப்பை நடத்தியுள்ளது. சில துறைகள் உள்ளடங்கும் வகையில் இந்த கருத்து கணிப்பு நடத்தப்பட்டுள்ளது.

மக்கள் தற்போது எதிர்நோக்கி வரும் பிரதான பிரச்சினைகள் என்ன?.தற்போதைய அரசாங்கத்தின் இரண்டு ஆண்டு ஆட்சிக்காலத்தில் மக்களின் வருமானத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா?

நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய பிரச்சினைகளில் இருந்து நாட்டை அரசாங்கத்தினால், கட்டியெழுப்ப முடியுமா? ஆகியன முக்கிய விடயங்களாக முன்வைக்கப்பட்டு கருத்து கணிப்பு நடத்தப்பட்டுள்ளது.

இந்த கருத்து கணிப்பில் மக்கள் வழங்கியுள்ள பதில்கள் அரசாங்கம் பாதாளத்தை நோக்கிச் செல்வதைக் காட்டுவதாகவும் அறியப்படுகின்றுத. கருத்துக்கணிப்பில் கேட்கப்பெற்ற பல கேள்விகள் கோட்டாபாயவின் நிர்வாகத்தையும் பிரதமர் மகிந்தாவின் செயற்பாடுகள் போதாமல் உள்ளதையும் காட்டுவதாகவும் அறியப்படுகின்றுத

இந்த கருத்துக்கணிப்பின் முடிவுகளையும் தற்போதைய பொருளாதார வீழ்ச்சியையும் கவனிக்கின்றபோது இலங்கையின் ஆட்சி பீடத்தில் ராஜபக்ச சகோதரர்கள் எத்தனை நாட்கள் இருப்பார்கள் என்பதை கணக்கிட முடியாமல் இருப்பதாக கருத்துக் கணிப்பை நடத்திய நண்பர்கள் குழுவினர் பத்திரிகையாளர்களுக்கு அறியத்தந்துள்ளதாகவும் கூறப்படுகின்றுத. எனவே ராஜபக்சாக்களின் முடிவு எப்படியிருக்கப் போகின்றது என்பதை பொறுத்திருந்து பார்க்கத்தான் வேண்டும்.




பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## பிரதமர் மோடியைச் சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ள ஆர் சம்பந்தன் எம். பி



மார்ச் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரம் ஒதுக்கித்தருமாறு கோரியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் ஆர். சம்பந்தன் தெரிவித்தார்.

பிரதமர் மோடியின் வருகை குறித்து இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராலயம் இதுவரையில் தமது கட்சிக்கு அறிவிக்கவில்லை என்று குறிப்பிட்ட அவர்,

எவ்வாறாயினும், வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு இந்தியா பெரும் பொறுப்பு வகிக்கும் நிலையில், அதனைத் தீர்ப்பதற்கு தலையிடுமாறு கோரி பல தமிழ் கட்சிகள் மற்றும் முஸ்லிம் கட்சிகள் பிரதமர் மோடிக்கு முன்னர் கடிதம் அனுப்பியிருந்ததை சம்பந்தன் நினைவு கூர்ந்தார். இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களும் இந்தியப் பிரதமருடன் விசேட கலந்துரையாடல் ஒன்றையும் அவர் கோரியுள்ளார்.

இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு முன்னுரிமை அளித்து வடக்கு, கிழக்கில் உள்ள ஏனைய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு இந்த சந்திப்பு வாய்ப்பாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

## நோர்வே நாட்டின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு விஜயம்



நோர்வே நாட்டின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி டிரைன் ஜோரான்லி எஸ்கெடல் **(Trine Joranli Eskedal)** நேற்று வியாழக்கிழமை 17ம் திகதி மன்னாருக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

மன்னாருக்கான விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்த நோர்வே நாட்டின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி வியாழக்கிழமை (17) காலை 8.45 மணி அளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு விஜயம் செய்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெல் அவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன் போது தூதுவர் வரவேற்கப்பட்டு மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் மற்றும் சந்திப்பு இடம் பெற்றது.

மன்னாருக்கு வருகை தந்த நோர்வே தூதுவர் மன்னாரில் இடம் பெறும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தார்.

தொடர்ந்து மன்னாரில் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவைகள் குறித்தும் அரசாங்க அதிபரிடம் கேட்டறிந்து கொண்டார். மன்னார் மாவட்டத்தில் பெண்கள் அபிவிருத்தி தொடர்பாக தான் கவனம் செலுத்துவதாகவும் மாவட்ட பெண்களின் நிலை குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

மேலும் மன்னார் பகுதிகளில் இந்திய மீனவர்களின் பிரச்சனை , பறவைகள் சரணாலயம் , காற்றாலை மின்சாரம் , கழிவு மீன் திரவ உரம் தயாரிப்பு, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் அரசாங்க அதிபரிடம் கலந்துரையாடி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அரசியல் செல்வாக்கு உள்ளவர்களை கருவிகளாக பாவித்து மன்னாரில் கனிய மணல் அகழ்வு



## மன்னார் சுற்றாடலை பாதுகாப்போம்;' அமைப்பினர் குற்றச்சாட்டு

உயர் அரச மற்றும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களை கருவிகளாக பாவித்து உரிமங்களை பெற்று கனிய மணல் அகழ்வு நடவடிக்கையை அவுஸ்திரேலிய கம்பெனி தொடர்வதாக நாங்கள் அறிகிறோம். இந்த மணல் அகழ்வினால் இலங்கையில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு எந்த ஒரு நன்மைகளும் இல்லை என "மன்னார் சுற்றாடலை பாதுகாப்போம்" அமைப்பினர் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளனர்.

திங்கட்கிழமை காலை மன்னாரில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது "மன்னார் சுற்றாடலை பாதுகாப்போம்" அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், மன்னாரில் சுமார் 5 வருடங்களுக்கு மேலாக கனிய மணல் ஆய்வுகள் மிகவும் இரகசியமான முறையில் அவுஸ்திரேலிய நிறுவனத்தினால் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மன்னாரிலுள்ள சுற்றாடலை பாதுகாப்போம் அமைப்பு பெற்றுக்கொண்ட தகவல்கள் அடிப்படையில் மதத் தலைவர்கள் பிரஜைகள் குழு பொதுமக்கள் இணைந்து எமது எதிர்ப்பை வெளியிட்டு ஜனாதிபதி வரை தெரிவித்திருக்கிறோம்.

அண்மையில் எங்களோடு கலந்துரையாடிய பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் எங்களுடைய ஆதங்கங்களை கேட்டு இந்த மாதத்தின் இறுதியில் அவுஸ்திரேலிய தூதருடன் மன்னாரில் உள்ள எமது குழுக்களையும் இணைத்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

மன்னார் மாவட்டத்திலுள்ள சனத் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மன்னார் தீவுக்குள் வசிக்கிறார்கள்.

இரண்டு கிலோ மீட்டர் அகலமும் 30 கிலோ மீட்டர் நீளமும் கொண்ட ஒரு குறுகிய தீவு பகுதி முற்று முழுதாக குறுகிய காலத்தில் கடலில் மூழ்கும் நிலை ஏற்படும்.

1980 ஆம் ஆண்டுகளில் மன்னார் நகர செயற்பாடுகளை உயிலங்குளத்தில் அமைப்பது தொடர்பாக ஒரு திட்டம் அரசிடம் இருந்தது. ஒரு சில அரசியல் காரணங்களால் அவை தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

இந்த மன்னார் தீவுக்குள் மாவட்ட செயலகம், பொது வைத்தியசாலை, வங்கிகள் நான்கு தேசிய பாடசாலைகள் என முக்கியமான அனைத்து செயற்பாடுகளும் இந்த தீவுக்குள் தான் இருக்கிறது.



இந்த மணல் அகழ்வுகள் தொடருமாக இருந்தால் கடலுக்குள் மூழ்கி மன்னார் மாவட்டம் செயலிழந்து சூனியப் பிரதேசமாக மாறிவிடும்.

ஆகவே எங்களால் முடிந்த அளவு மக்களை திரட்டி அரசு அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி வரை எங்களுடைய ஆதங்கத்தை தெரியப்படுத்துகிறோம். தொடர்ந்து தெரியப்படுத்துவோம்.

ஆனால் தாங்கள் எந்த அளவுக்கு எதிர்ப்புகளை தெரிவிக்கின்றோமோ அந்த அளவிற்கு அவுஸ்திரேலிய நிறுவனம் இதை ஆய்வு செய்வதில் முனைப்புக் காட்டி வருகிறார்கள்.

எமது எதிர்ப்புகளால் புவிச்சரிதவியல் திணைக்களம் இதற்கான உரிமத்தை நிறுத்தி இருந்தது ஆனால் தற்போது ஆராய்ச்சி செய்வதற்கு புவிச்சரிதவியல் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

அது எவ்வாறு நடைபெற்றது என்பதை எங்களால் அறிய முடியாமல் இருக்கிறது. இதில் மிகவும் வேதனையான விடயம் என்னவென்றால் இந்த கனிய மணல் அகழ்வு தொடர்பாக மன்னார் மாவட்டத்தில் இருக்கின்ற உயர் அரச அதிகாரிகளுக்கு எதுவும் தெரியாது என்று கை விரிக்கின்றார்கள்.

எது எப்படி இருந்தாலும் உயர் அரச மற்றும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களை கருவிகளாக பாவித்து தான் இந்த உரிமங்களை பெற்று கனிய மணல் அகழ்வு நடவடிக்கையை அவுஸ்திரேலிய கம்பெனி தொடர்வதாக நாங்கள் அறிகிறோம். இந்த மணல் அகழ்வினால் இலங்கையில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு எந்த ஒரு நன்மைகளும் இல்லை.

இதனால் ஆதாயம் பெற போவது அந்நிய நாடுகளும் அவர்களோடு சேர்ந்த இயங்குகின்ற சில முகவர்களும் தான் என்றனர்.

**(மன்னார் நிருபர்)**

# பாடசாலை பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசியை கொண்டு சென்று பரீட்சை எழுதிய அதிபரின் மகன்




## கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட ஆசிரியரிடம் மாட்டிய சம்பவம்

மன்னார் - மடு கல்வி வலயத்திற்கு உட்பட்ட அடம்பன் மத்திய மகா வித்தியாலய பாடசாலையில் இடம் பெற்று வரும் உயர் தரப் பரீட்சையின் போது அண்மையில் இடம் பெற்ற கணித பாட பரீட்சையின் போது குறித்த பாடசாலை அதிபரின் மகன் குறித்த பாடசாலை பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசியை கொண்டு சென்று பிரிதொரு ஆசிரியரின் உதவியுடன் பரீட்சை எழுதிய போது கையும் மெய்யுமாக மாட்டிக் கொண்ட சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், தற்போது கா.பொ.த. உயர் தர பரீட்சை ஆரம்பமாகிய நிலையில் மன்னார் மாவட்டம் மடு கல்வி வலயத்தின் அடம்பன் மத்திய மகா வித்தியாலய பாடசாலையில் உயர் தர பரீட்சைகள் இடம் பெற்று வருகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன் உயர் தரப் பரீட்சையில் கணித பாடத்தில் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை இடம் பெற்றது. இதன் போது அடம்பன் மத்திய மகா வித்தியாலய பாடசாலை அதிபரின் மகன் குறித்த பாடசாலையிலேயே உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றி வருகின்றார்.

இந்த நிலையில் குறித்த பாடசாலை அதிபரின் மகனான மாணவன் கணித பாட பரீட்சையின் போது குறித்த பரீட்சை மண்டபத்தினுள் மறை முகமான முறையில் கையடக்கத் தொலைபேசி ஒன்றை கொண்டு சென்றுள்ளார்.

இந்த நிலையில் பிரிதொரு பாடசாலையின் பரீட்சை மண்டபத்தில் கடமையில் இருந்ததாகக் கூறப்படும் ஆசிரியர் ஒருவர் கணித பாடத்திற்கான பரீட்சை வினாத்தாளை கையடக்கத் தொலைபேசியில் புகைப்படம் எடுத்து அதனை ஒரு ஆசிரியருக்கு அனுப்பி அதற்கான விடையை குறித்த ஆசிரியர் மீள பெற்று குறித்த மாணவனுக்கு கையடக்கத் தொலைபேசிக்கு வாட்ஸ்அப் மூலம் அனுப்பியுள்ளார்.

குறித்த மாணவன் கையடக்கத் தொலைபேசியின் வாட்ஸ்அப் மூலம் வந்ததாக கூறப்படும் குறித்த வினாக்களுக்கான விடையை தொலைபேசியை பார்த்து பரீட்சை வினாத்தாளுக்கு விடை எழுதிக் கொண்டிருந்தார்.

இதன் போது குறித்த பரீட்சை மண்டபத்தில் பரீட்சை கடமையில் ஈடு பட்டிருந்த ஆசிரியர் ஒருவர் குறித்த மாணவன் கையடக்கத் தொலைபேசியை பார்த்து விடை எழுதிக் கொண்டு இருப்பதை அவதானித்துள்ளார். உடனடியாக குறித்த ஆசிரியர் குறித்த மாணவனை கையும் மெய்யுமாகப் பிடித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள், வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகள், மற்றும் அடம்பன் பொலிஸ் ஆகியோருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது. உடனடியாக குறித்த பரீட்சை மண்டபத்திற்கு வருகை வந்த அதிகாரிகள் மற்றும் போலீசார் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

குறித்த சம்பவத்துடன் ஈடுபட்டதாக கூறப்படுகின்ற ஆசிரியர்கள் மற்றும் பரீட்சை நிலைய கண்காணிப்பாளர்கள் கடமையில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை உரிய அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருவில் வான் பகுதியில் புதையல் தோண்டிய ஒருவர் கைது

## 06 சந்தேக நபர்கள் தப்பியோட்டம்



அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருவில் வான் பகுதியில் புதையல் தோண்டிய சந்தேகத்தின் பெயரில் ஒருவர் செவ்வாய்க்கிழமை (15) மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் இராணுவ புலனாய்வுத் துறையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து இராணுவம் மற்றும் அடம்பன் பொலிஸார் இணைந்து குருவில் வான் பகுதியில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன் போது குறித்த பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு மேலும் ஆறு சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.





புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு தொகுதி பொருட்கள் இராணுவம் மற்றும் பொலிஸார் மீட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தற்போது அடம்பன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதோடு புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட பொருட்கள் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தப்பியோடிய சந்தேக நபர்கள் 6 பேரை பொலிசார் தேடி வருகின்றனர்.

மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரி கையெழுத்து வேட்டை





பயங்கரவாத தடைச் சட்டத்தினை முழுமையாக நீக்க கோரி கையெழுத்துப் போராட்டம் ஒன்று இன்று கொழும்பு புறக்கோட்டையில் முன்னெடுக்கப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்குதவற்கான கையெழுத்துப் போராட்டம் முதலாவது முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

மேலும் குறித்த போராட்டம் வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டிருந்ததோடு கிழக்கு மாகாணத்திற்கும் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் கொழும்பு புறக்கோட்டையில் இன்று காலையிலிருந்து இந்தக் கையெழுத்து பெறும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அத்துடன், குறித்த கையெழுத்துப் போராட்டம் செவ்வாய்கிழமை (15) காலை 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நடத்தப்படும் என சர்வஜன நீதி அமைப்பு தெரிவித்துள்ளது.

# இலங்கையில் கைதான தமிழக மீனவர்களை மீட்க பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்



தமிழக மீனவர்கள் 41 பேரை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். இதுகுறித்து அவர் எழுதியுள்ள கடிதத்தில், இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் மீண்டும் மீண்டும் அச்சுறுத்தப்படுவதும் தாக்கப்படுவதுமான நிகழ்வுகள் தொடர்ந்து வரும் நிலையில், ஞாயிற்றுக்கிழமை (13-2-2022) மேலும் ஒரு நிகழ்வாக 12 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்ளக் கோரி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஞாயிற்றுக்கிழமை பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் மீண்டும் மீண்டும் அச்சுறுத்தப்படுவதும் தாக்கப்படுவதுமான நிலையில், அதுகுறித்து பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவதாகவும், ஞாயிற்றுக்கிழமை (13-2-2022) மற்றுமொரு நிகழ்வாகத் தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த பன்னிரண்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், இத்தகைய அச்சமூட்டும் சம்பவங்கள் தொடர்ந்து நிகழ்வது தமிழ்நாட்டு மக்களுக்கு ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்துகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

12.02.2022 அன்று, IND-TN-10-MM-612 மற்றும் IND-TN-10-MM-328 ஆகிய பதிவெண்களைத் தாங்கிய இரண்டு இயந்திர மீன்பிடிப் படகுகளில் மீனவர்கள் ராமேஸ்வரம் தளத்திலிருந்து மீன்பிடிக்கக் கடலுக்குள் சென்ற நிலையில், 13.02.2022 அதிகாலையில் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு தலைமன்னாருக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்று தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். கடந்த இரண்டு வாரங்களில் இவ்வாறு நடந்துள்ள மூன்றாவது சம்பவம் இது என்பதையும், தற்போது வரை, தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் 41 பேரும் 6 மீன்பிடிப் படகுகளும் இலங்கைக் கடற்படையின் வசம் உள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர், இதுபோன்று மீனவர்கள் மீண்டும் மீண்டும் கைது செய்யப்படுவதும் துன்புறுத்தப்படுவதுமான நிகழ்வுகள் தமிழ்நாட்டின் மீனவர் சமூகத்திடையே, குறிப்பாக பாக் வளைகுடாப் பகுதியில் பாதுகாப்பின்மை உணர்வை ஏற்படுத்தியுள்ளதுடன் மீனவர்களின் வாழ்வாதாரங்களை மோசமாகப் பாதித்துள்ளதாகவும் தனது கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முயற்சிகளின் வாயிலாக, நீண்ட காலமாகத் தொடர்ந்து வரும் இந்த எரிச்சலூட்டும் சிக்கலுக்கு நிலையான தீர்வைக் காண வேண்டியது மிகவும் இன்றியமையாதது என்றும், அதன் தொடக்கமாக இருதரப்புப் பேச்சுவார்த்தைகளைக் கூட்டுவதற்கான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், கரோனா தீவிரம் குறைந்துள்ள தற்போதைய நிலையில், கூட்டுச் செயற்குழுக் கூட்டம் (JWG) மூலம் பேச்சுவார்த்தைகளை உடனடியாக மீண்டும் தொடங்க வலியுறுத்துமாறும் பிரதமரைக் கேட்டுக்கொள்வதாக முதலமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அப்பகுதியில் பதற்றத்தைக் குறைக்கும் வகையில் இரு நாட்டு மீனவர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தைக்கும் வழிவகை செய்திட வேண்டுமெனக் கோரியுள்ள முதல்வர், தமிழ்நாட்டைச் சேர்ந்த 41 மீனவர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறும் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்த வேண்டாம் – ஜனாதிபதி பணிப்புரை!



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்த வேண்டாம் என்றும் பயங்கரவாதத்துடன் தெளிவான தொடர்புகள் இருந்தால் மாத்திரம் பயன்படுத்துமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‘ பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் விசாரணைகளை கைவிடுவதற்கு பயங்கரவாத தடைச்சட்டத்தை தவறாக பயன்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி பொலிஸாரிடம் கூறியதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாக பொறுப்பற்ற பயன்பாடு நிறுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகவும் அது நடக்கிறதா இல்லையா என்று ஒரு வாய்ப்பு கொடுத்துப் பார்ப்போம் என்றும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com



ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# CORNWALL நகரில் வாழும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளோடு ஊடகவியலாளர் நடத்திய சந்திப்பு

















கியுபெக் மாநிலத்தையும் ஒன்றாரியோ மாநிலத்தையும் பிரிக்கும் எல்லையில் ஒன்றாரியோ மாகாணத்தில் அமைந்திருக்கும் கோர்ன்வால் நகரத்தில் பல்வேறு சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர். கனடாவின் மூத்த குடிகளான பழங்குடி சமூகத்தினரும் பெருமளவில் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் புலம் பெயர்ந்த தமிழ் மக்களும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் இங்கு வாழ்ந்த வண்ணம் ஏனைய சமூக மக்களோடு தொடர்புகளைக் கொண்டு வாழ்ந்தாலும் தனித்துவமான தமிழர் பண்பாடு கல்வி மற்றும் கலைகளில் ஈடுபாடு கொண்டு அவற்றையும் பின்பற்றி வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு தமிழ் அமைப்புக்களையும் நடத்திய வண்ணம் கல்வி நிறுவனங்களையும் வர்த்தக நிலையங்களையும் நடத்துகின்றவர்களாக எமது தமிழ் மக்கள் கோர்ன்வால் நகரில் வாழ்ந்து வருகின்றனர். அவர் அந்த நகரில் வாழும் சிறார்களின் தமிழ்க் கல்விக மற்றும் நுண்கலைகள் ஆகியவற்றிலும். ஈடுபாடு கொண்டு தமிழ்ச் சமூகத்திற்கு பங்காற்றி வருகின்றனர்.

அங்கு வாழும் மக்களைச் சந்தித்து உரையாடி அவர்களின் செயற்பாடுகள் தொடர்பாக உரையாடி தகவல்களைச் சேகரிப்பதற்காக 'உதயன்' செய்தியாளர்கள் குழு மற்றும் 'ரூபம்' இணைய ஊடகத்தின் செய்தியாளர்கள் குழு ஆகியவை இணைந்து கடந்த சனிக்கிழமையன்று கோர்ன்வால் நகருக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டனர்.

அங்குள்ள தமிழ் மக்களையும் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் இந்த சந்திப்பிற்காக அழைக்கவும் இணைக்கவும் சிலர் உதவியாக இருந்தனர். அவர்களில் கோர்ன்வால் நகரில் நீண்ட காலமாக வாழ்ந்து வரும் நந்தகுமார் அவர்களும் அங்கு **UCMAS** கல்வி நிறுவனத்தை நடத்திவரும் வஜீதன் அவர்களும் உதவியாக செயற்பட்டார்கள்.

வஜீதன் அவர்கள் நடத்திவரும் கல்வி நிலையமான **UCMAS** இன் மண்டபத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பு நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர்.

சந்திப்பு வைபவத்தை கலாச்சார ரீதியாக ஆரம்பித்து வைக்கும் வகையில் செல்வன் இளவேந்தன் ஜெகனழகன் மற்றும் வெண்ணிலா ஜெகனழகன் ஆகியோர் தமிழ்த் தாய் வாழ்த்தை இசைத்தார்கள். தொடர்ந்து கனடிய தேசிய கீதத்தை செல்வன் வெற்றியழகன் ஜெகனழகன் இசைத்தார். அவர் புல்லாங்குழல் இசையையும் வழங்கினார். தொடர்ந்து பலர் தங்கள் கருத்துக்களைக் கூறினார்கள்.

**Journalists meet with Tamil people's representatives living in CORNWALL**

The Town of Cornwall, located in the province of Ontario on the border between Quebec and Ontario, is home to a diverse community. Aboriginal communities, Canada's oldest inhabitants, also live in large numbers. As well as a significant number of Tamil Diaspora living here in connection with other communities. And the unique Tamil culture is involved in education and the arts followed by them.

பின்னர் நடைபெற்ற கலந்துரையாடலில் உதயன் செய்தியாளர்கள் மற்றும் ரூபம் செய்தியாளர்கள் ஆகியோர் தங்கள் விஜயத்தின் நோக்கங்களை எடுத்துரைத்தார்கள்.

பின்னர் அங்குள்ள தமிழர் அமைப்புக்கள் தங்கள் சேவைகளை சிறப்பான முறையில் வழங்குவதற்காக ஒன்றாரியோ அரசின் நிதி உதவிகளைப் பெறும் வழி வகைகள் குறித்து ஆராயப்பட்டது.

அன்றைய சந்திப்பில் மொன்றியால் வாழ் தமிழ் மக்கள் எவ்வாறு தங்கள் தொழில் கல்வி மற்றும் வர்த்தக முயற்சிகளில் வெற்றிகரமாக ஈடுபட்டு வருகின்றார்கள் என்பதை நன்கு புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

*-Reporting from Cornwall Ganesh and ARJUNE*



கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவின் தலைநகரில் தொடரும் "சுதந்திரன் ஊர்வலம்" ஆர்ப்பாட்டம் முதலில் எதிர்க்கட்சித் தலைவரையும் தற்போது நகரத்தின் காவல்துறைத் தலைவரையும் "காலி" செய்கின்றது

கனடாவின் தலைநகரில் கடந்த மூன்று வாரங்களாகத் தொடரும் "சுதந்திர ஊர்வலம்" என்னும் பெயர் கொண்ட கனரக வாகன சாரதிகள் மற்றும் கனரக போக்குவரத்து நிறுவன உரிமையாளர்களின் ஆர்ப்பாட்டம் கனடாவின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் ஒரு முக்கிய காரணியாக கருதப்படும் இந்த நாட்களில் அரசியல் ரீதியாக முதலில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் கொன்சர்வேர்ட்டிவ் கடசியின் தலைவருமான எரின் ஓ டுல் அவர்களை "காலி" செய்தது. இவ்வாறாக மூன்று வாரங்களாகத் தொடரும் இந்த "சுதந்திர ஊர்வலம்" என்னும் பெயர் கொண்ட கனரக வாகன சாரதிகள் மற்றும் கனரக போக்குவரத்து நிறுவன உரிமையாளர்களின் ஆர்ப்பாட்டம் ஒட்டாவா நகரத்தின் காவல்துறைத் தலைவரையும் "காலி" செய்கின்றது என்ற செய்தி தற்போது வெளியாகின்றது.

55 வயதான திரு ஸ்லோலி, ஓட்டாவா காவல்துறைத் தலைவராகப் பதவியேற்பதற்கு முன்பாக ரொறன்ரோ நகரத்தின் காவல்துறையின் உதவித் தலைவராகவும் விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



இவர் கடந்த 19 நாட்களாக கனடாவின் தலைநகரின் மையப்பகுதியை முடக்கிய வண்ணம் உள்ள "சுதந்திர ஊர்வலம்" என்னும் பெயர் கொண்டதடுப்பூசி எதிர்ப்பு ஆணை எதிர்ப்புக்களைக் கையாண்டதற்காக பெருமளவு விமர்சனங்களை எதிர்கொண்டார்.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நேற்று எதிர்ப்புகளுக்கு பதிலளிக்கும் விதமாக "கடைசி முயற்சியாக" அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்திய இந்த வேளையில் காவல்துறை தலைமை அதிகாரியின் பதவி விலகல் இடம்பெறவுள்ளது.

திரு ஸ்லோலி ஒட்டாவா போலீஸ் ஆணைக்குழு கூட்டத்திற்குப் பிறகு தனது பதவி விலகல் தொடர்பான முடிவை உறுதிப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



முன்னாள் கனேடிய ஆண்கள் உதைப்பந்தாட்ட வீரரான திரு ஸ்லோலி, டொராண்டோ காவல்துறையில் இணைந்து மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக பணியாற்றி பின்னர் 2019 ஆம் ஆண்டு ஒட்டாவா பொலிஸ் சேவையில் பொறுப்பேற்றார். ஒட்டாவாவில் அவரது ஒப்பந்தம் 2024 இல் முடிவடைய இருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அவரது வாழ்க்கை முழுவதும், அவர் ஒரு முற்போக்கான சீர்திருத்தவாதியாக நற்பெயரைப் பெற்றார், போலீஸ் - சமூக உறவுகளை மேம்படுத்துவதற்கு அர்ப்பணித்தார்.

இருப்பினும், "சுதந்திர ஊர்வலம்" எதிர்ப்புக்களின் காரணமாக ஒட்டவா நகர் வாழ் மக்களின் எதிர்ப்புக்களைச் சந்தித்தார். பின்னர் அவர் கடுமையாக விமர்சிக்கப்பட்டார். போராட்டத்தை அடக்கும் முயற்சியாக ஒட்டாவா நகர சபையும் ஒரு வாரத்திற்கு முன்பு அவசர நிலையை பிரகடனப்படுத்தியது.

கடந்த வாரம் திரு ஸ்லோலி தனது பதவியை தொடர்வதில் உறுதியாக இருந்தார், என்றும் அவர் பதவி விலகும் எண்ணம் "முற்றிலும் இல்லை" என்றும் அவரது நெருங்கிய நண்பர் ஒருவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

"நான் இங்கு ஒரு வேலை செய்ய வந்தேன், அந்த வேலையை நான் முழுவதுமாக முடிக்கப் போகிறேன்," என்று அவர் கூறினார்.

இவ்வாறான நிலையில் ஒட்டாவா நகரின் காவல்துறை தலைமை அதிகாரி பதவிக்கு நியமனம் செய்ய ஒருவரும் முன்வரமாட்டார்கள் என நகரத்தின் மேயர் அவர்கள் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார்.



இந்தியா செய்திகள்
India News

# 2 தொழிலதிபர்களுக்காகவே நாட்டின் கொள்கைகளை வகுக்குகிறார் பிரதமர் மோடி

## பிரியங்கா குற்றம் சாட்டுகிறார்

பிரதமர் மோடியின் நண்பர்களான இரண்டு தொழிலதிபர்களுக்காகவே ஒட்டுமொத்த நாட்டின் கொள்கைகளும் வகுக்கப்படுகின்றன என காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி குற்றம்சாட்டினார். உத்தராகண்ட் மாநிலத்தில் பாஜக ஆட்சி நடைபெற்று வருகிறது. அந்த மாநிலத்தில் மொத்தமுள்ள 70 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக வரும் பிப்ரவரி 14-ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் ஆளும் பாஜக, காங்கிரஸ் இடையே கடும் போட்டி நிலவுகிறது. ஆம் ஆத்மி கட்சியும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறது. முன்னணி ஊடகங்கள் நடத்திய கருத்துக் கணிப்பில் பாஜக, காங்கிரஸ் சமபலத்துடன் உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. இந்த தேர்தலில் காங்கிரஸ் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறது. உத்தரகாண்ட் மாநிலத்தின் காதிமா நகரில் நடைபெற்ற பேரணியில் காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது: நாட்டில் கரோனா வைரஸ் பரவுவதற்கு பாஜகவினர் காங்கிரஸை குற்றம்சாட்டுகின்றனர். கரோனா கொடுமையின்போது புலம் பெயர்ந்த மக்கள் சாலைகளில் நடந்து கொண்டிருந்தார்கள், அவர்களுக்கு எந்த வசதியும் இல்லை. அவர்களை அப்படியே விட்டுவிட வேண்டுமா? நாங்கள் அரசியல் செய்கிறோமா? நாங்கள் எங்கள் கடமையைச் செய்கிறோம். காவி முகாமில் (பாஜக) அனைத்து தலைவர்களும் முதல்வர் முதல் பிரதமர் வரை தங்கள் வளர்ச்சியைப் பற்றி சிந்திக்கிறார்கள். யாரும் மக்களைப் பற்றி சிந்திக்கவில்லை. பிரதமரும், பாஜகவினரும் தனது கட்சியின் தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் மட்டுமே கடமையை செய்கிறார். மக்களை பற்றி அவர்களுக்கு எந்த கவலையும் இல்லை. வேலை வாய்ப்புகள் இல்லாததால் உத்தரகாண்ட் மாநிலத்தில் அதிக மக்கள் புலம்பெயர்ந்து செல்லும் அவலம் உள்ளது. இந்த மாநிலத்தில் இமயமலை, இயற்கை, சுற்றுலா வாய்ப்புகள் அனைத்தும் உள்ளன. ஆனால் வேலைவாய்ப்பு இல்லை. மக்கள் வேலைக்காக இங்கிருந்து இடம்பெயர்கின்றனர். மத்திய பட்ஜெட்டில் நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் ஏழைகள், விவசாயிகள், நடுத்தர வர்க்கம், சிறு மற்றும் நடுத்தர வணிகர்களுக்கு எதுவும் வழங்கப்படவில்லை. பிரதமரின் நண்பர்களான இரண்டு தொழிலதிபர்களுக்காகவே ஒட்டுமொத்த நாட்டின் கொள்கைகளும் வகுக்கப்படுகின்றன.

இவ்வாறு அவர் பேசினார்.

# தண்டவாளத்தில் ஒய்யாரமாக நின்றுகொண்டு: "செல்பி" எடுத்த 4 இளைஞர்கள் ரயில் மோதி பலி: டெல்லியில் சோகம்

டெல்லியில் ரயில் தண்டவாளப் பகுதியில் நின்று கொண்டு செல்பி எடுத்த 4 இளைஞர்கள் அவ்வழியாக சென்ற ரயில் மோதி சம்பவ இடத்திலேயே பலியாகினர். தலைநகர் டெல்லியின் புறநகர்ப் பகுதியான குர்கிராமில் ரயில்வே மேம்பாலம் அருகே நின்று கொண்டிருந்த நான்கு இளைஞர்கள், அவ்வழியாக ரயில் சென்ற போது தங்களது மொபைல் போனில் "செல்பி" எடுத்துக் கொண்டிருந்தனர். அப்போது அவ்வழியாக சென்ற ரயில் மோதி, 4 பேரும் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

இதுகுறித்து ரயில்வே போலீசார் கூறுகையில், "டெல்லியின் சராய் ரோஹில்லாவிலிருந்து, அஜ்மீர் நோக்கிச் சென்ற ஜன் சதாப்தி எக்ஸ்பிரஸ் ரயிலானது, குர்கான் ரயில் நிலையத்திலிருந்து பாசாய் ரயில் நிலையம் நோக்கிச் சென்றது. அப்போது 18 முதல் 21 வயதுக்குட்பட்ட நான்கு இளைஞர்கள், ரயில் சென்ற வழியில் நின்று கொண்டு அருகே இருந்த தண்டவாளத்தில் செல்பி எடுத்தனர். அவர்களுக்கு வெகு அருகே ரயில் வந்தும், அலட்சியமாக செல்பி எடுத்துக் கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் மீது ரயில் மோதியதில், நான்கு பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். விசாரணையில் இவர்கள் தேவிலால் காலனியில் வசிக்கும் சமீர் (19), முகமது அனஸ் (20), யூசுப் என்கிற போலா (21), யுவராஜ் கோகியா (18) என்பது தெரியவந்தது. சம்பவம் குறித்து தொடர் விசாரணை நடைபெற்று வருகிறது" என்றனர்.



# தமிழக போலீஸ் டிஜிபி திடீர் அதிரடியில் திருநங்கைகள் மகிழ்ச்சி



கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கோயம்புத்தூர் அம்மன்குளம் பகுதியை சேர்ந்த திருநங்கை உமாஸ்ரீ (30) தனது செல்போன் தொலைந்துவிட்டதாக பந்தயசாலை காவல் நிலையத்தில் புகார் அளித்து இருந்தார். இதையடுத்து புகாரளித்த திருநங்கை உமாஶ்ரீ வீட்டுக்கு சென்ற போலீஸ்காரர் மூவேந்தன் வேல்பாரி என்பவர் விசாரணை மேற்கொண்டார். அப்போது உமாஶ்ரீயிடம் போலீஸ்காரர் மூவேந்தன் அத்துமீறியதாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக விசாரணைக்கு வந்த போலீஸ்காரர் மூவேந்தன் வேல்பாரி குடிபோதையில் இருந்ததாகவும், தனக்கு பாலியல் தொல்லை அளித்ததாகவும் திருநங்கை உமாஶ்ரீ மீண்டும் பந்தயசாலை காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இதுகுறித்து போலீஸ்காரர் மூவேந்தன் வேல்பாரி மீது பந்தயசாலை காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்தனர். இதன் தொடர்ச்சியாக தமிழகம் முழுவதும் திருநங்கைகளை போலீசார் விசாரணை என்ற பெயரில் துன்புறுத்தி வருவதாக புகார் எழுந்தது.

இதுதொடர்பாக திருநங்கைகள் மற்றும் சமூக ஆர்வலர்களுக்கு தமிழக போலீஸ் டிஜிபி சைலேந்திர பாபுவுக்கு கோரிக்கை விடுத்து திருநங்கைகளுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என கேட்டு வந்தனர். இந்நிலையில் காவல் துறை அதிகாரிகளுக்கான நடைமுறை சட்ட விதிகளில் தமிழக அரசு புதிய சட்ட திருத்தம் செய்து உள்ளது. அதன்படி தமிழ்நாடு காவல் துறை அதிகாரிகள் நடைமுறை விதிகள் தொடர்பான நடத்தை விதி 24 சி என்ற பிரிவு சேர்க்கப்பட்டு அமல்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் மூன்றாம் பாலினத்தவர்கள், தன்பாலின ஈர்ப்பாளர்கள் ஆகியோரை விசாரணை என்கிற பெயரில், போலீசார் தேவை இல்லாமல் தொந்தரவு செய்யகூடாது என, தமிழக காவல் துறையில் புதிய நடத்தை விதி சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழக காவல்துறையில் புதிய விதி சேர்க்கப்பட்டு இருப்பது திருநங்கைகள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது. இதற்கு முழு காரணமும் தமிழக போலீஸ் டி.ஜி.பி சைலேந்திர பாபு என்பதால் அவரை திருநங்கைகள் பாராட்டி மகிழ்கின்றனர்.



# தற்கொலைத் தடுப்பில் காவல் பணி

வே. பாலகிருஷ்ணன் இ.கா.ப
மணடல காவல்துறைத் தலைவர், மத்திய மண்டலம், திருச்சி, தமிழ்நாடு

உடலுக்கும் மனதுக்கும் உயிரியல் ரீதியாக இருக்கும் தொடர்பு உலகம் அறிந்ததே! உடலில் இருக்கும் உபாதைகள் மனநலத்தை பாதிப்பதும், மனதில் இருக்கும் இன்பத் துன்பங்கள் உடல் நலத்தை பாதிப்பதும் நாம் அறிவோம். “அகத்தின் அழகு முகத்தில் தெரியும்” என்பது தமிழ் பழமொழி. உலகம் முழுவதும் உள்ள எல்லா கலாச்சாரங்களிலும் இதுபோன்ற பழமொழிகள் இருப்பதிலிருந்து உலகம் முழுவதும் இந்தப் புரிதல் எல்லோருக்கும் இருப்பது தெரியவருகிறது.

அறிவியல் ரீதியாக மனிதன் மற்றும் விலங்குகளின் மூளையில் “லிம்பிக் சிஸ்டம்” எனப்படும் மூளையின் ஒரு பகுதி “கிப்போகேம்பஸ், ஹைபோதலாமஸ், பிட்யூட்டரி சுரப்பிகள், அமைக்டாலா ஆகிய சுரப்பிகளை உள்ளடக்கி மகிழ்ச்சி மற்றும் உற்சாகம் தரும் ஹார்மோன்களை சுரந்து அதன் மூலம் மனிதனை மகிழ்ச்சி தரும் செயல்கள் நோக்கி நகர செய்தும், வாழ்வியலுக்கான அடிப்படைத் தேவைகளை தேடிச் செல்லவும் வழிவகுக்கிறது. இருந்தாலும் இதைச் சுற்றியுள்ள கார்டெக்ஸ் என்ற பகுதி மனிதன் பிறந்தது முதல் இன்று வரை கிடைத்த அனுபவங்களின் வாயிலாக படித்தப் பாடங்களை பதிய வைத்து மேற்கூறிய சுரப்பிகளால் சுரக்கப்படும் ஹார்மோன்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது.

இயற்கையாகவே சுரக்கும் மேற்கூறிய ஹார்மோன்கள் மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு மற்றும் இனப்பெருக்கத்திற்கு இருக்கும் வாய்ப்புகளைத் தேடி செல்வதற்கும் வழிவகுக்கும். நாம் பழகிய அனுபவங்கள் நம்முடைய சுய மதிப்பீட்டைக் குறைத்தல் மற்றும் எதிர்மறையான எண்ணங்களை உருவாக்கும் வகையில் பழகியிருந்தால் அந்த உணர்வுகள் மேலோங்கும் பொழுது தவறான முடிவுகளை எடுப்பதற்குத் தூண்டப்படுகிறோம். எடுத்துக்காட்டாக குடும்பத்தில் யாரேனும் தற்கொலை செய்து கொண்டால் அந்தக் குடும்பத்தில் உள்ள குழந்தைகள் மற்றும் அவர்களுக்கு நெருக்கமானவர்களுக்கு தற்கொலை செய்து கொள்வது இயற்கையான முடிவுதான் என்ற உணர்வை ஏற்படுத்தி எத்தனையோ பேர் தங்களின் வாழ்க்கையை விபரீதமாக முடித்துக் கொள்வதற்கு காரணமாகிறது.

தற்கொலையைப் பற்றி எழுத வினையும் போது ஒருமுக்கியமான கேள்வி மனதில் எழுந்தது. தற்கொலைகள் பற்றியப் புள்ளிவிபரம் கொடுக்க வேண்டுமா என்று. அந்தப் புள்ளி விபரத்தைப் பார்த்து தற்கொலை செய்து கொள்வது இயல்பான ஒரு முடிவுதான் என்ற எண்ணம் வந்துவிடக்கூடாது. அதேநேரம் புள்ளிவிபரம் கொடுத்தால் தற்கொலைப் பிரச்சனையின் தீவிரத்தை உணர்த்த உதவும். இருந்தாலும் அந்த எண்ணிக்கையைக் கொடுக்க வேண்டாம் என்று முடிவெடுத்து இக்கட்டுரையை எழுதுகிறேன்.

## குழந்தைகளின் தற்கொலைகள்:

18 வயதுக்குட்பட்ட ஆண் மற்றும் பெண் குழந்தைகள் படிப்பில் நாட்டம் இல்லாமையாலோ அல்லது மதிப்பெண்கள் எதிர்பார்த்த அளவு கிடைக்கவில்லை என்பதாலோ பெற்றோர்கள் அல்லது ஆசிரியர்கள் கண்டிக்கும் போதும், யாரேனும் ஏதாவது காரணத்திற்காகவோ கடும் சொற்களையும், பயமுறுத்தும் வார்த்தைகளையும் பயன்படுத்தும் போதும் அதன் விளைவுகளை பற்றி அளவுக்கு அதிகமாக எதிர்மறை கற்பனை செய்து கொள்வதாலோ, வேறு சில காரணங்களாலோ தங்களுடைய வாழ்வை முடித்துக் கொள்கிறார்கள். புலம் பெயர்ந்த மக்கள் இதுகுறித்தக் கவனம் அதிகமாகவே கொள்ளவேண்டும். குழந்தைகளின் எதிர்காலம் பற்றி அதீதக் கவலை கொண்டு அவர்களின் படிப்பிற்கு அதிக அழுத்தம் கொடுக்கும்போது எதிர்காலமே கேள்விக்குறி ஆக வாய்ப்புண்டு. வாழ்க்கை ஆரம்பிக்கும் முன்பே முடிவைத் தேடுவதுதான் குழ்ந்தைகள் தற்கொலையின் வினோதம்.

பெற்றோர்கள் யாரேனும் தற்கொலை செய்து கொண்டால் அந்த குடும்பத்தில் உள்ள குழந்தைகள், பிரச்சனைகளுக்கு முடிவு தற்கொலைதான் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ள வாய்ப்புள்ளது. தமிழகக் காவல்துறை சார்பாக மத்திய மண்டலத்தில் யாரேனும் பெற்றோர்கள் தற்கொலை செய்து கொண்டால் அந்த குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்கு உரிய மன நல ஆலோசனை வழங்குவதற்காக ஒன்பது மாவட்டங்களில் உள்ள உளவியல் துறைக்கல்வி உள்ள கல்லூரிகளைத் தேர்ந்தெடுத்து அங்குள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை உரிய பயிற்சிக்குப் பின் பயன்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டு அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்கொலையை தடுப்பதற்கான உதவி எண் 104 இருந்த போதிலும் தற்கொலை எண்ணம் கொண்ட நபர்கள் அந்த எண்ணை அழைத்து மனநல ஆலோசனை பெற வேண்டும் என்று முடிவு எடுக்காமல் இருக்கும்வரை அதனால் பயனில்லை. ஆகவே குறைந்தபட்சம் ஏற்கனவே தற்கொலை நடந்த குடும்பங்களில் உள்ளக் குடும்ப உறுப்பினர்களுக்கு அந்த எண்ணம் வராதவாறு தடுப்பதற்கான முயற்சியே இது.

பெற்றோர்கள் குழந்தைகளிடம் தினமும் ஒரு சில நிமிடங்களாவது குழந்தைகள் சொல்வதை கவனமாகக் கேட்க வேண்டும். ஒரு சிலப் பெற்றோர்கள் குழந்தைகளிடம் செலவிடும் நேரத்தில் குழந்தைகள் மனதில் உள்ளதைக் கேட்காமல் அறிவுரை மழையாகப் பொழிவதால் குழந்தைகள் பெற்றோர்களிடம் பேசும் பழக்கத்தையே குறைத்துக் கொள்கின்றனர். அப்படி நேரம் செலவிடும் பொழுது குழந்தையின் மனதில் ஏதேனும் மன அழுத்தம் இருந்தால் அதனை வெளிக்கொணர்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அதேபோன்ற வாய்ப்புப் பள்ளிகளிலும் கொடுக்கவேண்டும். ஆசிரியர்களும் குழந்தைகள் பள்ளி மற்றும் படிப்பைச் சார்ந்த என்னென்ன காரணங்களுக்காக தற்கொலை முடிவை எடுப்பதற்கு



வாய்ப்புள்ளது என்ற பட்டியலின் அடிப்படையில் அந்தந்த பிரச்சினைகளை எப்படி கையாள்வது என்ற பயிற்சி பெற வேண்டும். முக்கியமாக தற்கொலை செய்து கொள்வதைப் பற்றி ஏதேனும் தருணத்தில் பேசியிருந்தாலோ அல்லது எங்கேனும் எழுதி இருந்தாலோ அதை எளிதாக எடுத்துவிடக் கூடாது.

## முதியோர் தற்கொலைகள்:

முதியோர் பாதுகாப்பு சட்டம் நடைமுறையில் இருந்தும் கூட ஒரு சில நேரம் தனித்துவிடப்பட்டத் தனிமை உணர்வாலும், சரியான மருத்துவ முறைகளைக் கடைப்பிடிக்காமல் தீராத நோய் என்று நினைத்து சரியான மருத்துவம் மேற்கொள்ளாமலோ அல்லது மருத்துவம் செய்வதற்கு வசதி இல்லாமலோ ஒரு சில மூத்த குடிமக்கள் தற்கொலை செய்துகொள்கிறார்கள்.


இதனைத் தவிர்க்க காவல் துறை சார்பாக தனிமையில் இருக்கும் மூத்த குடிமக்களை கண்டறிந்து அவர்கள் வீட்டில் பட்டா புத்தகம் அல்லது மின்னணு ரோந்து புள்ளியை (E.Beat Points) குறித்தும், ரோந்து காவலர்கள் தொடர்ந்து சென்று அவர்களுடைய தேவைகளை கண்டறிந்து அதை நிவர்த்தி செய்வதோடு அவர்களுக்கு பாதுகாப்பு உணர்வையும் வழங்கி வருகிறார்கள். நான் மயிலாப்பூர் காவல் துணை ஆணையராக 2016-இல் பணிபுரிந்த போது மூத்த குடிமக்களையும், சிறுவர்களையும் ஒன்றிணைத்து அவர்கள் அளவளாவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தோம். இது மனிதனின் ஆரம்பத்தையும், முடிவையும் ஒன்றிணைத்து வாழ்வை மேம்படுத்துவதற்கான முயற்சி. இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் தற்கொலைக்கானக் காரணங்கள் என்பது மிகப்பெரிய விரிவாகப் படிக்கவேண்டிய பொருள். அதை இங்கேக் கூற விளையவில்லை. சில நேரம் காவல்துறையிலும் தற்கொலைகள் நடக்கின்றன. குடும்ப மற்றும் பணிச்சூழலில் எழும் மன அழுத்தத்தை சமாளிக்க முடியாமல் விபரீத முடிவுகளை எடுக்கும் தவறான உதாரணங்கள் உள்ளன. அது முன்னுதாரணமாக ஆகிவிடக் கூடாது என்பதற்காக காவல்துறையில் மனநல மேம்பாட்டிற்காக தமிழ்நாடு முழுவதும் காவலர் நல்வாழ்வு திட்டம் நடத்தப்பட்டு வருகிறது.



தற்கொலை செய்வது ஒரு கணநேர முடிவாக இருந்தாலும் அதன் பின்னால் இருக்கும் எண்ண அடிப்படைகளும், நம்பிக்கைகளும், ஓட்டங்களும் உடனடியாக வருவதில்லை. அதற்கு ஒரு பின்னணியும் காரணங்களும் உண்டு. அதற்கானப் பின்னணிகள் தீடீரென வருவதில்லை. ஆகவே நண்பர்கள், உறவினர்கள் தங்கள் உடனிருப்பவர்கள் அதுபோன்ற அறிகுறிகளை வெளிப்படுத்துகிறார்கள் எனத் தெரிந்து மனநல ஆலோசனைப் பெற வழிவகை செய்வது நலம். தன்னம்பிக்கையை ஊட்டுவது தான் தற்கொலைக்கு மிகச் சிறந்த மருந்து. எல்லாப் பிரச்சனைகளுக்கும் ஒரு முடிவு உண்டு என்பது, (இதுவும் கடந்து போகும்” என்ற எண்ணமும் கண்டிப்பாகத் தற்கொலை எண்ணங்களைத் தடுக்க உதவும் மந்திரச்சொற்கள்.

## "ஆன்மீகக் குரு" மேல்மருவத்தூர் "அருள்மிகு அடிகளார்" அவர்களின் 82வது அவதாரப் பெருவிழா




தமிழ்நாட்டின் மேல்மருவத்தூர் ஸ்ரீ ஆதிபராசக்தி ஆலயத்தை நிறுவி சக்தி வழிபாட்டின் பெருமைகளை உலகெங்கும் பரப்பி வருகின்ற “ஆன்மீகக் குரு” அருள்மிகு அடிகளார் அவர்களின் 82வது அவதாரப் பெருவிழா எதிர்வரும் 03-03-2022 அன்று தமிழ்நாட்டின் மேல்மருவத்தூர் ஸ்ரீ ஆதிபராசக்தி ஆலயத்திலும் மற்றும் உலகெங்கும் உள்ள வழிபாட்டு மன்றங்களிலும் நடைபெறும் என்ற செய்தியை கனடாவில் உள்ள மேல்மருவத்தூர் ஸ்ரீ ஆதிபராசக்தி அலயம் சார்பான சக்திகள் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

# கோவையில் திமுகவுக்காக பிரச்சாரம் செய்த ருமேனியா நாட்டு தொழிலதிபர்!

கோவையில் திமுகவுக்காக பிரச்சாரம் செய்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளார் ருமேனியா நாட்டு தொழிலதிபர் ஒருவர்.நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலுக்கு இறுதிக்கட்டப் பிரச்சாரம் சூடுபிடித்துள்ளது. இன்று மாலை 6 மணியுடன் பிரச்சாரம் ஓய்கிறது. இதனையடுத்து கட்சிகள் பரபரத்துக் கொண்டிருக்கின்றன.இந்நிலையில், இருச்சக்கர வாகனத்தில் கழுத்தில் திமுக துண்டு, கையில் ஸ்டாலின் படத்துடன் திமுகவுக்கு வாக்கு சேகரித்துக் கொண்டிருக்கிறார் ஸ்டீஃபன் நெகொய்டா.ருமேனியா நாட்டைச் சேர்ந்த ஸ்டீபன், கோவையில் உள்ள கோகுல் கிருபா சங்கருடன் இணைந்து ஸ்வெட்டர் தொழில் செய்து வருகிறார்.



அண்மையில் அவர் கோவைக்கு தொழில்ரீதியாக வந்துள்ளார். அப்போது தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து தொழிற்சாலைக்கு அரசுப் பேருந்தில் சென்றுள்ளார். பேருந்தில் பெண்களுக்கு டிக்கெட் வாங்காததைக் கண்டு ஆச்சர்யபட்டு நண்பரிடம் கேட்டுள்ளார்.நண்பர் கோகுல் கிருபா சங்கர், திமுகவின் பெண்களுக்கு இலவச பேருந்து பயணம் திட்டம் பற்றி கூறியுள்ளார். தற்போது நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடப்பது பற்றியும் கூறியுள்ளார். உடனே திமுகவுக்கு பிரச்சாரம் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளார்.

கிருபா சங்கரின் தொழிற்சாலையில் இருந்த பெண் தொழிலாளர்கள் இலவச பேருந்து பயணத்தால் தங்களால் சிறு தொகையை சேமிக்க முடிகிறது என்று கூறியுள்ளனர். இவற்றால் ஈர்க்கப்பட்டே தனது நண்பர் திமுகவுக்காக பிரச்சாரம் செய்வதாகக் கூறினார். அவர் பிரச்சாரம் செய்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

# 'நியூட்ரினோ திட்டத்திற்கு இடம் இல்லை' தமிழக அரசின் நிலைப்பாட்டுக்கு வைகோ பாராட்டு



“தமிழ்நாட்டிற்குக் கேடு விளைவிக்கும் நியூட்ரினோ திட்டத்திற்கு இடம் அளிப்பது இல்லை என்ற உறுதியான நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ள முதல்வர் ஸ்டாலினை பாராட்டுகின்றேன்” என மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.இது குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தேனி மாவட்டம் தேவாரம் பொட்டிப்புரம் அம்பரப்பர் மலையில், பல்லாயிரக்கணக்கான டன் வெடி மருந்துகளைப் பயன்படுத்தி, லட்சக்கணக்கான டன் பாறைகளை வெட்டி எடுத்து, தரைக்கு உள்ளே 1.5 கி.மீ ஆழத்தில் நீளவாட்டிலும், குறுக்குவாட்டிலும், சுமார் 3 கி.மீ நீளம் உள்ள இரண்டு குகைகளைக் குடைந்து, அங்கே நியூட்ரினோ ஆய்வு மையம் அமைக்க, மத்திய பாஜக அரசு முயற்சித்து வருகின்றது.

உலகின் மறுபக்கத்தில் உள்ள அமெரிக்காவின் சிகாகோவில் உள்ள செர்பி ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து, நியூட்ரான் துகள்கள், சுமார் 13,000 கிலோ மீட்டர்களைக் கடந்து, பொட்டிப்புரத்தில் அமைக்கத் திட்டமிடும் நியூட்ரினோ ஆய்வகத்திற்கு அனுப்பப்படும்.அங்கே, 50 ஆயிரம் டன் எடையுள்ள காந்தக் கல்லைப் பதித்து ஆய்வு நடத்தும் திட்டம் இது. அதற்காக, வெடி மருந்து வைத்து பாறைகளை உடைப்பதால் ஏற்படும் அதிர்வுகளால், 30 கி.மீ தொலைவில் உள்ள இடுக்கி அணை, 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள முல்லைப் பெரியாறு அணையில் விரிசல் ஏற்படும். நிலம், நீர், காற்று மண்டலத்துக்கும் பெரும் தீங்கு ஏற்படும். விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு ஆளாவார்கள். வெளியாகும் தூசுப் படலத்தால் சுவாச நோய்கள் ஏற்படும்.

மேலும், இந்தச் சுரங்கங்களில் அணுக்கழிவுகளைக் கொட்டுவதற்கும் திட்டமிட்டு இருக்கின்றார்கள். முதலில் இந்தத் திட்டத்தை அசாம் மாநிலத்தில் அமைக்க முற்பட்டார்கள். அங்கே எதிர்ப்பு ஏற்பட்டதால், தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் அமைக்க முயன்றார்கள். அங்கேயும் மக்கள் எதிர்த்ததால், தேவாரம் பொட்டிப்புரத்தில் அமைக்க மத்திய அரசு முடிவு எடுத்தது.ஆனால், தமிழ்நாடு அரசின் மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஒப்புதல் அளிக்கவில்லை. அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் கருத்தைக் கேட்கவும் இல்லை; இரண்டு கிலோ மீட்டர் அருகாமையில் கேரள எல்லை தொடங்குகின்றது; கேரள மாநில அரசின் ஒப்புதலையும் மத்திய அரசு கேட்கவில்லை. இங்கே வெட்டி எடுக்கப்படுகின்ற கிரானைட் கற்கள் மூலம் சில நிறுவனங்கள் கோடி கோடியாகக் கொள்ளையடிக்க வாய்ப்பு உள்ளது.

அமெரிக்க அரசாங்கத்தைத் திருப்திப்படுத்த இந்தியப் பிரதமர் மோடி இத்திட்டத்திற்கு 1,500 கோடி அனுமதி வழங்கி உள்ளார். இமயமலைப் பாறைகள் உறுதித் தன்மை அற்றவை. எனவேதான், அங்கே அடிக்கடி நிலச்சரிவுகள் ஏற்படுகின்றன. ஆனால், மேற்குத் தொடர்ச்சி மலைப் பாறைகள் உறுதியான கருங்கற்கள் ஆகும், அதனால்தான், மேற்குத் தொடர்ச்சி மலைகளை, உலகின் பழமையான வரலாற்றுச் சின்னங்களுள் ஒன்றாக, ஐ.நா.மன்றம் அறிவித்துள்ளது. அதனால், இம்மலைத் தொடரில் எந்தச் சேதத்தையும் ஏற்படுத்தக் கூடாது என்பது யுனெஸ்கோ விதி ஆகும்.எனவே, நியூட்ரினோ திட்டத்திற்கு தடை விதிக்க வேண்டும் எனக் கோரி, நான் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்த வழக்கில், 2015, மார்ச் 26ம் தேதி, உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.

பூவுலகின் நண்பர்கள் சுற்றுச்சூழல் அமைப்பு, நியூட்ரினோ திட்டத்திற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு, இன்று(17.02.2022) விசாரணைக்கு வந்த போது, நியூட்ரினோ ஆய்வகம் அமைக்கும் திட்டத்தை ரத்துச் செய்யுமாறு தமிழக அரசு சார்பில் மனு தாக்கல் செய்து இருப்பது வரவேற்கத்தக்கது.

தமிழ்நாட்டிற்குக் கேடு விளைவிக்கும் நியூட்ரினோ திட்டத்திற்கு இடம் அளிப்பது இல்லை என்ற உறுதியான நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ள முதல்வர் ஸ்டாலினைப் பாராட்டுகின்றேன்” என்று வைகோ கூறியுள்ளார்.

# பாஜகவை எதிர்த்து நாம் தமிழர் கட்சிதான் போட்டியிடுகிறது: சீமான் விளக்கம்



“தமிழகத்தில் மாற்றத்துக்கான கட்சி இல்லை. திமுகவை விட்டால் அதிமுக, அதிமுகவை விட்டால் திமுகதான் எனப் பேசுவது ஏற்புடையது அல்ல” என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

சென்னை பத்திரிக்கையாளர் மன்றத்தில் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறியது: “நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த 60 வேட்பாளர்களை கடத்தி, முன்மொழிந்தவரை மிரட்டுவது, அவர் உறுதியாக இருந்தால், வேட்பாளர்களை மிரட்டுவது என ஆளுங்கட்சியினர், நாம் தமிழர் கட்சியினரை பின்வாங்க செய்துவிட்டனர்.

பிறகு பணம் கொடுப்பது, பரிசுப் பொருட்கள் கொடுப்பதுபோக, வாக்குச்சாவடி மையத்தைக் கைப்பற்றி வாக்குச் செலுத்திவிடுவது, சென்னை மாநகராட்சியில் 200 இடங்களிலும் திமுகதான் வெல்லப்போகிறது, கவலைகொள்ளாமல் இருங்கள் என்று அமைச்சர்கள், தொண்டர்கள் மற்றும் உறுப்பினர்களிடம் பேசியிருப்பது தெரியவருகிறது.திமுக ஆட்சிக்கு வந்தால் இதைத்தான் செய்வார்கள். ஆனாலும் ஊடகங்களுக்கு மிகப் பெரிய பொறுப்பும் கடமையும் இருப்பதாக நான் கருதுகிறேன். உண்மையான நேர்மையான அரசியல் உருவாக வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள் இதற்கான தொடக்கத்தை செய்ய வேண்டும்.பணம் இருப்பவர்கள்தான் அதிகாரத்துக்கு வரமுடியும், அதிகாரத்தைச் செலுத்தமுடியும் என்றால், முதலாளிகளுக்கான அதிகாரம் கட்டமைக்கப்படுமே தவிர, உழைக்கும் அடித்தட்டு மக்களுக்கான அதிகாரம் எங்கிருக்கும், பிறகு எப்படி இதை மக்களாட்சி என்று கூறுவது.

ஓட்டுக்கு பணம் கொடுப்பது தொடர்பாக ஊடகங்கள் விவாதிப்பது இல்லை. அப்படியென்றால், இந்த நிலை எப்போது ஒழியும். கள்ள ஒட்டு செலுத்துவது, ஆட்களை கடத்துவது, மிரட்டுவது இதற்கு ஏன் ஜனநாயகம் என்று பெயர் வைத்தனர். இதற்காகவா நம் முன்னோர்கள் சிறையில் அடைபட்டு வாடினர்.தமிழகத்தில் மாற்றத்துக்கான கட்சி இல்லை. திமுகவை விட்டால் அதிமுக, அதிமுகவை விட்டால் திமுகதான் எனப் பேசுவது ஏற்புடையது அல்ல.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் பல இடங்களில் திமுகவுக்கு வாக்களியுங்கள் என வாக்கு சேகரித்ததைவிட, சீமானுக்கும், நாம் தமிழருக்கும் வாக்களித்துவிட வேண்டாம் என திமுகவினர் கூறியதுதான் அதிகம். இது எந்தமாதிரியான அணுகுமுறை என்று பாருங்கள்.பல இடங்களில் பாஜகவை எதிர்த்து திமுக போட்டியிடவே இல்லை. நாகர்கோயில், குளச்சலில் போட்டியிடவில்லை. அதிமுகவும் போட்டியிடவில்லை, திமுகவும் போட்டியிடவில்லை, பாஜகவுக்கு எதிராக நாம் தமிழர் கட்சிதான் போட்டியிடுகிறது. அப்படி என்றால், பாஜகவை திமுக எங்கே எதிர்க்கிறது?” என்று சீமான் கூறினார்.

# பாஜக வென்றால் இலவச மொபைல் போன்: மதுரை மாவட்ட தலைவர் சரவணன் அறிவிப்பு


மதுரை மாநகராட்சி தேர்தலில் போட்டியிடும் பாஜக வேட்பாளர்களை ஆதரித்து இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் மதுரை மாநகர் மாவட்ட தலைவர் பா.சரவணன் பேசியதாவது: திமுக ஆட்சிக்கு வந்ததும் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய், கல்லூரி மாணவர்கள் கல்விக் கடன் தள்ளுபடி, மகளிர் சுய உதவிக் குழு கடன் தள்ளுபடி, மகப்பேறு உதவித் தொகை அதிகரிப்பு என ஏராளமான வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. இந்த வாக்குறுதிகள் எதையும் திமுக நிறைவேற்றவில்லை. இதற்கு மாறாக பொதுமக்களுக்கு தரமற்ற பொங்கல் பரிசுகளை வழங்கியுள்ளனர். இதில் பல கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றுள்ளது.

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு மதுரைக்கு ஸ்மார்ட் சிட்டி திட்டம் அளித்தது. மக்கள் அனைவருக்கும் இலவசமாக கரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு இலவச சமையல் கேஸ், இலவச வீடு, பெண் குழந்தைகளுக்கு செல்வ மகள் சேமிப்புத் திட்டம், இலவச மருத்துவக் காப்பீடு எனப் பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி உள்ளது.

மதுரை மக்கள் பாஜக வேட்பாளர்களுக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்தால் வீடுதோறும் இலவச ஆன்ட்ராய்டு மொபைல் போன் வழங்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

# ஆறு கட்சிகளுக்கும் இந்தியாவின் பதில் என்ன?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



அடுத்த மாதம் நடுப்பகுதியளவில் இந்திய பிரதமர் மோடி கொழும்பில் நடக்கவிருக்கும் பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கைக்கு வர இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கட்டுரை எழுதப்படும் இந்நாள் வரையிலும் இந்திய அரசாங்கம் அதனை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தி இருக்கவில்லை.

அவ்வாறு நரேந்திர மோடி இலங்கைக்கு வருவாராக இருந்தால் இங்கே, அவர் தனக்கு ஒரு கூட்டுக் கோரிக்கையை முன்வைத்த ஆறு கட்சிகளையும் சந்திப்பாரா?

அவ்வாறு அவர் சந்தித்தால்தான் அந்த ஆறு கட்சிகளும் இந்தியாவை நோக்கி முன்வைத்த கோரிக்கைக்கு ஒரு பொருள் இருக்கும். இல்லையென்றால் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கூறுவதுபோல அந்த ஆறு கட்சிகளும் தன்மானத்தை இழந்து இந்தியாவை சரணடைந்து விட்டன என்ற குற்றச்சாட்டு சரியாகிவிடும். அந்த ஆறு கட்சிகளும் இந்தியாவுக்கு அனுப்பிய கூட்டுக் கோரிக்கை தொடர்பில் எனக்கு கேள்விகள் உண்டு. அந்த ஆவணம் வேறுவிதமாக வடிவமைக்கப்பட்டு இருக்க வேண்டும் என்பதே என்னுடைய நோக்கு நிலையாகும். ஆனால் தமிழ்த் தரப்பில் உள்ள ஒப்பீட்டளவில் அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட ஆறு கட்சிகள் இணைந்து அவ்வாறு ஒரு கோரிக்கையை முன் வைத்திருப்பது என்பது ஈழத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளை பொறுத்தவரையிலும் மூலோபாய முக்கியத்துவம் மிக்கது. ஏன் அவ்வாறு மூலோபாய முக்கியத்துவம் என்று கூற வேண்டியுள்ளது?

ஏனெனில் ஈழப்போரின் முதலாவது கட்டத்தில் இந்தியா ஈழத் தமிழர்களுக்கு பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கியது. பின்தள வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது. சிறிய கெரில்லாப் போராட்டமாக இருந்த ஈழப்போர் முழு அளவிலான ஒரு போராக வளர்ச்சி அடைவதற்கு இந்தியாவின் உதவியே பிரதான காரணமாகும். ஆனால் இந்திய இலங்கை உடன்படிக்கையானது இந்தியாவுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான உறவில் கசப்பான இரத்தம் சிந்தும் இடைவெளிகளை ஏற்படுத்தியது. இந்திய அமைதிகாக்கும் படையை நாட்டைவிட்டு அகற்றும் நோக்கத்தோடு புலிகள் இயக்கத்துக்கும் அப்போதிருந்த ஜனாதிபதி பிரேமதாசவுக்கும் இடையில் ஒரு தந்திரோபாய கூட்டு உருவாகியது. அதன் விளைவாக இரண்டு தரப்பும் இணைந்து இந்திய அமைதிகாக்கும் படையை நாட்டை விட்டு வெளியேறுமாறு கேட்டன. எந்த இரண்டு தரப்புக்கும் இடையிலான மோதல்களை சமாதானம் செய்வதற்காக இந்திய அமைதி காக்கும் படை இலங்கைககுள் இறங்கியதோ அந்த இரண்டு தரப்புக்களும் ஒற்றுமைப்பட்டு அமைதிகாக்கும் படையை வெளியே போ என்று கேட்டபொழுது இந்திய அமைதி காக்கும் படை பின்வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இது இந்தியாவை பொறுத்த வரையிலும் அவமானகரமான ஒரு வெளியேற்றம்.

இது நடந்தது 1989 ஆம் ஆண்டு. இது நடந்து கிட்டத்தட்ட முப்பத்தி மூன்று ஆண்டுகளின் பின் எந்த ஒரு தமிழ்த் தரப்பு இந்திய அமைதிகாக்கும் படையை வெளியேறுமாறு கேட்டதோ அதே தமிழ்த் தரப்பிலிருந்து மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மொத்தம் 11 பிரதிநிதிகள் அடங்கிய மொத்தம் 6 கட்சிகளின் கூட்டு இந்தியாவை நோக்கி ஒரு கூட்டு கோரிக்கையை முன் வைத்திருக்கிறது. அக்கோரிக்கையானது இந்தியாவை மறுபடியும் ஈழத் தமிழர்களுக்கு சார்பாக தலையிடுமாறு அழைக்கும் நோக்கிலானது என்று அக்கட்சிகள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தரப்பிடமிருந்து அவ்வாறு ஒரு கூட்டுக் கோரிக்கை வருவதை இந்தியப் பேரரசின் ஈகோ விரும்புகிறது என்றும் எடுத்துக் கொள்ளலாம். அதன்மூலம் அவமானகரமான விதத்தில் தனது படையினர் வெளியேற்றப்பட்டமைக்கு மூன்று தசாப்தங்களின் பின்னராவது பரிகாரம் கண்ட திருப்தி இந்தியாவுக்கு ஏற்படும். இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் மேற்படி கட்சிகளின் கூட்டுக் கோரிக்கையானது இந்தியாவுக்கு பின்வரும் அனுகூலமான வழிகளைத் திறந்து விட்டிருக்கிறது.

முதலாவது இலங்கைத் தீவின் அரசியலில் இனப்பிரச்சினையின் பெயரால் முன்னரை விட அதிகமாக தலையிடுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஏனெனில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் பிரதிநிதிகளில் அதிகமானவர்கள் கூட்டாக இந்தியாவை அழைத்திருக்கிறார்கள். இரண்டாவது அவ்வாறு தமிழர்களின் பேரால் தலையிடுவதன் மூலம் இலங்கைத் தீவில் சீனாவின் செல்வாக்கை கட்டுப்படுத்தலாம்.. இத்தகைய பொருள்படக் கூறின் இந்தியாவைப் பொறுத்தவரை மேற்படி கூட்டு கோரிக்கைக்கு ஒரு மூலோபாய முக்கியத்துவம் உண்டு எனலாம். ஆனால் அக்கோரிக்கையை இந்தியா எவ்வாறு கௌரவிக்கப் போகிறது என்பதில்தான் மேற்படி 6 கட்சிகளின் அரசியல் எதிர்காலம் தங்கியிருக்கிறது. அது மட்டுமல்ல, இந்தியாவின் தெற்கு மூலையை சீன விரிவாக்கத்தில் இருந்து பாதுகாப்பதற்கான புதிய வியூகங்களுக்கான புதிய வாய்ப்புகளும் தங்கியிருக்கின்றன.

எனவே இந்த அடிப்படையில் சிந்தித்தால் இந்திய பிரதமர் கொழும்புக்கு வருவாராக இருந்தால், மேற்படி ஆறு கட்சிகளையும் சந்திக்க வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் உண்டு. இந்தியா தனது பிராந்தியப் நலன்களை முன்னிறுத்தித்தான் ஈழத் தமிழர்களின் விவகாரத்தை கையாண்டு வருகிறது என்று பெரும்பாலான படித்த ஈழத்தமிழர்கள் நம்புகிறார்கள். இதுவிடயத்தில் ஈழத்தமிழர்களின் நம்பிக்கைகளை வென்றெடுக்கும் விதத்தில் புதிய பிரகாசமான சமிக்கைகளை காட்ட வேண்டிய ஒரு பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு. கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்தியா கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தைத்தான் கையாண்டு வருகிறது. அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்பு சார் உறவின் அடிப்படையிலான உலகப் பொதுவான ஒரு ராஜிய வழமை அது. ஆனால் இவ்வாறு கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தை கையாள முடியாது போ-கும் பொழுது ஈழத்தமிழர்களை ஒரு கருவியாகக் கையாண்டு இந்தியா கொழும்பை பணிய வைக்கிறது என்பதும் கடந்த நான்கு தசாப்தங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்தியா தங்களை ஒரு கறிவேப்பிலையாக அல்லது பலியாடா-க பயன்படுத்துகிறது என்ற ஈழத்தமிழர்களின் சந்தேகத்தையும் குற்றச்சாட்டுகளையும் கவனத்தில் எடுத்து ஈழத் தமிழர்களுக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு.

இந்தியா ஈழத்தமிழர்களின் கூட்டு உரிமைகளைப் பாதுகாப்பதில் அக்கறையோடு இருக்கிறது என்பதனை வெளிப்படுத்தும் புதிய சமிக்ஞைகள் அவசியம். பிரதமர் மோடி அடுத்த மாதம் இலங்கைக்கு நடுப்பகுதியளவில் அவ்வாறான சமிக்கைகளை வெளிப்படுத்துவாரா?

மேலும், யாழ்ப்பாணத்தில் இந்தியாவால் கட்டப்பட்டிருக்கும் கலாச்சார மையம், பலாலி விமான நிலையத்தின் அடுத்தகட்ட அபிவிருத்தி, கா ங் கே ச ன் து றை க் கு ம் காரைக்காலுக்கும் இடையிலான படகுப் போக்குவரத்து போன்ற விடயங்களிலும் நிச்சயமற்ற நிலைமைகள் காணப்படுகின்றன. மோடி வருவாராக இருந்தால் இத்திட்டங்கள் அவற்றின் அடுத்த கட்டத்துக்கு விரிவுபடுத்தப்படுமா?

தமிழ் பகுதிகளில் உள்ள மிக உயரமான பொதுக் கட்டிடமாகவும், கட்டி முடிக்கப்பட்ட பின்னரும் நீண்ட நாட்களுக்கு திறக்கப்படாத ஒரு கட்டிடமாகவும் காணப்படும் மேற்படி கலாச்சார மையத்தை திறப்பதில் உள்ள தடைகள் யாவும் கொழும்புக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் உள்ள நெருக்கமி ன்மையைத்தான் வெ ளி ப் ப டு த் து கி ன் ற ன . அதுபோலவே பலாலி விமான நிலையத்தின் அடுத்தகட்ட அபிவிருத்தியும் இதோ தொடங்குகிறது என்று பலதடவைகள் திகதி அறிவிக்கப்பட்ட போதிலும் எதுவும் நடக்கவில்லை. கடந்த ஆண்டு மார்ச் முதலாம் திகதி தமிழக சட்டமன்ற உறுப்பினரும் பாரதிய ஜனதாவின் தமிழ்ப் பிரமுகருமான வானதி சீனிவாசன் ஒரு ட்விட்டர் செய்தியை வெளியிட்டிருந்தார். அதிலவர் காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்கு இடையிலான படகுப் போக்குவரத்துக்கான வர்த்தக உடன்படிக்கை வெற்றிகரமாக எழுதப்பட்டுவிட்டது என்று குறிப்பிட்டிருந்தார். இப்பொழுது கிட்டத்தட்ட ஓராண்டு ஆகிவிட்டது. ஆனால் அந்தப் படகுப் பயணம் மறவன்புலவு சச்சிதானந்தம் மற்றும் வானதி சீனிவாசன் ஆகியோரின் கனவுகளாகவே தொடர்ந்தும் காணப்படுகிறது.

மேற்கண்ட திட்டங்கள் யாவும் ஈழத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கனெக்றிவிற்றியைப் பலப்படுத்தும் நோக்கிலானவை. ஆனால் இத்திட்டங்கள் அவற்றின் தொடக்க நிலையிலேயே உள்ளன. அவை அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிகளுக்கு போகமுடியவில்லை. அதற்கு காரணம் இலங்கை அரசாங்கம்தான். எனவே இதுவிடயத்தில் இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டியது இலங்கை அரசாங்கத்தைத்தான். மேற்படி திட்டங்களை வெற்றிகரமாக அடுத்தடுத்த கட்டங்களுக்கு விரிவுபடுத்துவதன் மூலம் இந்தியா தனது பலத்தை நிரூபிக்குமா?

எனவே தொகுத்துகூறின் தமிழ்த் தரப்பிலிருந்து இப்பொழுது ஒரு கூட்டு கோரிக்கை - அக்கோரிக்கை தொடர்பாக விமர்சனங்கள் உண்டென்ற போதிலும் - இந்தியாவை நோக்கி முன் வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்த் தரப்பு அவ்வாறு கூட்டாகக் கேட்டிருக்கும் ஒரு பின்னணியில், இந்தியா தமிழ்த் தரப்பை நோக்கி எப்படிப்பட்ட சமிக்கைகளை காட்டப் போகிறது என்பது முக்கியத்துவம் உடையது. அதாவது இப்பொழுது பந்து இந்தியாவின் கைகளில்தான் உள்ளது.

## வீணாவின் கவிக்கணை

உன்னை விலகி இருப்பது
உன்னை துன்புறுத்தவோ,
துடிக்க வைக்கவோ அல்ல,
சிலவேளைகளில் மௌனம்
கூட ஆயிரம் அர்த்ங்களை
ஒரு நொடியில் மொழிபெயர்த்து
விடுகிறது உன்முன்னே,
உன்னவள் உள்ளம் என்றும்
உன்னுடையது மட்டுமே
என்று உணர்த்த, அவள்
விழி போசும் மொழியறியாதவனோ நீ ?
இருள் சூழ்நத இடத்திலும்,
பகலவன் மின்னும் பொழுதிலும்
நீ தேடும் இதயம் அவளுடையது
என்பறியாதவளோ அவள் ?

# இலங்கைப் பொருளாதாரம்: எத்தை தின்றால் பித்தம் தெளியும்?

- சிவா பரமேஸ்வரன் & கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி



இலங்கை, பர்மா, தாய்லாந்து, வியட்நாம், கம்போடியா, பூட்டான் போன்ற நாடுகளில் சமூகத்தில் பிக்குமார்களுக்கு உயர்ந்த இடம் அளிக்கப்படுவதும், அவர்கள் புத்த பிரானின் அறிவுரைகளைப் பின்பற்றி தானம் பெறும் பாத்திரத்தை வீதி வழியாக எடுத்துச் சென்று அளிக்கப்படும் உணவை பெற்றுக் கொண்டு வாழ்க்கையை நடத்துவது அறியப்பட்ட ஒன்று. ஆனால் கடுமையான பௌத்த நிலைப்பாட்டைக் கொண்டுள்ள இலங்கை அரசு, பிக்குமார்களைப் போலவே தான பாத்திரத்தை எடுத்துக் கொண்டு நாடு நாடாக, அமைப்பு அமைப்பாக, ஐயா சாமி தருமம் செய்யுங்கள், முடிந்தளவுக்கு தானமோ அல்லது கடனோ அளித்து எமக்கு உதவுங்கள் என்று கோரி உலா வந்துகொண்டிருக்கிறது.

தற்போது இலங்கையிலிருந்து கடன் கேட்டு வருகிறார்கள் என்றாலே, நாடுகளும் பன்னாட்டு நிதி நிறுவனங்களும் கதவைப் பூட்டிவிட்டு காணாமல் போகும் நிலையை கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளன. அதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. முதலாவது, வாங்கிய கடன்களை குறித்த நேரத்திற்கு திருப்பியளிப்பதற்கான நிதியாரங்கள் இலங்கையில்லை. இரண்டாவது, போர் முடிந்து 12 ஆண்டுகளுக்கு பிறகும் பன்னாட்டுச் சமூகம் மற்று நிதி வழங்கும் அமைப்புகளுக்கு இலங்கை தொடர்ச்சியாகக் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றவில்லை. அதிலும் குறிப்பாக மனித உரிமைகள் தொடர்பான விஷயங்கள், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குதல், கோவிட் பெருந்தொற்று காலத்தில் உயிரிழந்த இஸ்லாமியர்களின் உடல்களை எரித்தது போன்ற பல விஷயங்களில் பன்னாட்டுச் சமூகம் இலங்கை மீது மிகவும் கடுப்பில் உள்ளது என்பது உண்மை.

அடிப்படையில், இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி விவேகபூர்வமற்ற பேரினப்பொரளாதாரக் கொள்கைத் தெரிவுகளால் விளைந்த ஒன்றாகும். மாறாக பொருளாதாரத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் (சகடோட்டங்கள் - Business cycle) காரணமாகவோ அல்லது கோரோனா பெருந்தொற்று காரணமாகவோ விளைந்த ஒன்றல்ல.

வெளிநாட்டுக் கடன்களைப் பெற்று பொருளாதார விருத்திக்கு பங்களிக்கவல்ல உட்கட்டுமான திட்டங்களில் முதலீடு செய்வது உள்நாட்டில் நிதிவசதிகள் குன்றிய நாடுகள் கைக்கொள்ளும் பொதுவான உபாயம் தான். ஆனால் பெரும் பொருட் செலவில் உருவாக்கப்படும் உட்கட்டுமானங்கள் - அவை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் உற்பத்திப் பெருக்கத்திற்குப் பங்களித்து அந்நியச் செலாவணியைப் பெற பங்களிப்பதன் ஊடாக நீண்டகால ரீதியில் ஒரு நாட்டின் பொருளாதார விரிவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

## வெள்ளை யானைகள்

அது மட்டுமன்றி ஒரு அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டக் குறைநிலையை இட்டு நிரப்பவும் வெளிநாடுகளிலிருந்து கடன்கள் பெறப்படும். மேலும் அவ்வப்போது ஏற்படும் அந்நியச் செலாவணி பற்றாக்குறைகளைப் பூர்த்தி செய்யவும் கடன்கள் வாங்கப்படுகின்றன. இலங்கையைப் பொருத்தமட்டில் 2009இல் உள்நாட்டு யுத்த முடிவின் பின்னர் மாபெரும் உட்கட்டுமான திட்டங்களுக்கு ஏராளமான கடன்கள் வாங்கப்பட்டன. குறிப்பாக மாகம்புர துறைமுகம், மத்தளை ராஜபக்ச விமான நிலையம் தாமரை கோபுரம், தெற்கு அதிவேக வீதி, விமான நிலைய வீதி என்பன மிகப்பெரும் பொருட் செலவில் உருவாக்கப்பட்டன. ஆனால் அவை வெள்ளையானைகளாக மாறி பெரும் பொருளாதார சுமையை உருவாக்கியுள்ளன. அதிவேக வீதிகளில் மக்கள் பயணிப்பதால் வருவாய் கிடைத்தாலும் டொலர் உள்வருகைக்கான மூலாதாரம் அதில் கிடையாது.



மாகம்புர துறைமுகத்தை நிர்வகிக்க முடியாது சீனாவுக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டது. மத்தளை விமான நிலையத்தில் விமான இயக்கங்கள் நடைபெறுவது இல்லை. அது தானியக் களஞ்சியமாகப் பயன்படுத்தப்படும் நிலை உருவாகி பெரும் நகைப்பிற்கிடமளித்தது. அதுமட்டுமின்றி பெரியளவில் பேசப்பட்ட தாமரை கோபுரம் இயக்கமின்றிக் கிடக்கிறது. ஆனால் இவை போன்ற திட்டங்களுக்கு பெறப்பட்ட கடன்கள் நீண்டகால ரீதியில் செலுத்தப்படவேண்டியுள்ளன. இவற்றிற்கும் மேலாக இலங்கையரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட நிதிப்படுத்தலுக்காகவே ஏராளமான சர்வதேச இறைமைக் கடன் முறிகள் (Sovereign bonds - அரச கடன் பத்திரங்கள்) ஊடாகக் கடன்கள் பெறப்பட்டன. இவை எதிர்வரும் காலங்களில் வருடாந்தம் சுமார் 4 - 5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மீளச் செலுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளன. கடந்த காலங்களிலே இவ்வாறு கடன் தவணைகள் முதிர்ச்சியடையும் போது அவற்றை இலங்கை இன்னொரு புதிய கடனைப்பெற்று மீளச் செலுத்தியிருக்கிறது.

மறுபுறம் ஏற்றுமதிகள் ஊடாகவும் இலங்கையர்கள் வெளிநாடுகளிலிருந்து டொலர்களாக உழைத்தனுப்பம் பணம் மூலமாகவும், சுற்றுலாப் பயணிகள் வருகை காரணமாகவம் இலங்கைக்குள் அந்நியச் செலாவணி வந்துகொண்டிருந்தது. இலங்கையின் பணச்சந்தையிலும் கணிசமான குறுங்கால வெளிநாட்டு முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கொரோனாவுக்கு முன்பிருந்தே இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மந்தமாக இருந்துவந்த நிலையில் இலங்கை அரசாங்கம் தேசியப்பொருளாதாரத்தை வலுப்படுத்தி வளர்த்தெடுக்கும் கனவுத்திட்டத்தில் ஏற்றுமதிகளின் ஊக்குவிப்புக்கு அக்கறை காட்டாத நிலையில் இறக்குமதிகளைக்கட்டுப்படுத்தி டொலர்களின் வெளிச் செல்கையை தடுக்க முனைந்தது.

## இறக்குமதி செய்ய இயலாத நிலை

இலங்கையின் ஏற்றுமதிகளில் விவசாய விளைபொருள்கள் தவிர்ந்த ஏனையவற்றின் இறக்குமதி உள்ளடக்கம் மிக அதிகமாகும் அதாவது கைத்தொழில் உற்பத்திக்கு அவசியமான மூலப்பொருள்கள், இடைநிலைப்பொருள்கள் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படவேண்டும் இதனால் இறக்குமதிகள் இல்லாமல் ஏற்றுமதி செய்ய இயலாது. இது மிகவும் முக்கியமானது. இதை அரசு ஏன் கவனத்தில் எடுக்கவில்லை அல்லது "அனைத்தும் யாம் அறிவோம்" என்கிற எண்ணத்தில் உள்ளதா என்பது தெரியவில்லை.

இலங்கை ரூபாயின் பெறுமதி ஊசலாட ஆரம்பித்த உடன் இலங்கையின் பணச்சந்தையில் முதலீடு செய்திருந்த வெளிநாட்டவர்கள் தமது முதலீடுகளை பெருமளவில் மீளப்பெற்றுக் கொண்டனர். பங்குச் சந்தையிலும் அதே போக்கு அவதானிக்கப்பட்டது. நாணயமாற்றுவீத வீழ்ச்சியைக் கட்டுப்படுத்த மத்திய வங்கி அதனை நிலையான ஒரு பெறுமதியில் (198 ரூபாய்) நிறுத்தி அந்த நிலையான வீதத்தில் கொடுக்கல் - வாங்கல்களை செய்ய வங்கிகளையும் நிதி நிறுவனங்களையும் நிர்ப்பந்தித்தது. ஆனால் மத்தியவங்கி அந்த வீதத்தில் வணிக வங்கிகளுக்கு டொலரை வழங்குவதையும் நிறுத்திக்கொண்டது. இதனால் நாட்டின் இறக்குமதியாளர்கள் மிகப்பெரிய நெருக்கடிளை எதிர்கொள்ள நேர்ந்தது. இதுவும் இறக்குமதிப்பொருள்களின் விலைகள் நாட்டில் துரிதமாக அதிகரிக்கவும் பாரிய தட்டுப்பாடுகள் ஏற்படவும் காரண-மாகியது.

வெளிச் சந்தையில் 240 ரூபாய்க்கு டொலர் விற்பனை செய்யும் நிலையில் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ கொள்வனவு வீதமாகிய 198 ரூபாய்க்கு வங்கிகளூடாக தங்களது உழைப்பை நாட்டுக்குள் கொண்டுவர எவரும் விரும்பவில்லை. இதனால் நாட்டில் முறைசாராத வழிகள் ஊடாக டொலர் வரவுகள் ஏற்பட்டன. இதனைத்தடுக்க அரசாங்கம் சட்டங்களைக் கொண்டுவந்த போதிலும் நாட்டுக்குள் வரும் டொலர்களை அதிகரிக்க அவற்றால் இயலவில்லை.

## சத்திரசிகிச்சைக்கு களிம்பு பூசும் வேலை



இப்போதைய உடனடி டொலர் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவசியமான உள்வருகையை அதிகரிக்க வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் உதவியை நாடுவது குறித்தும் அவ்வாறு கொண்டுவருபவர்களுக்கு சலுகைகளை வழங்கி ஊக்குவிப்பது குறித்தும் நாட்டின் நகர்ப்புறங்களில் உள்ள முக்கிய நிலப்பகுதிகளில் மாடிமனைத்திட்டங்களை உருவாக்கி விற்பதன் மூலம் நாட்டுக்குள் டொலரை வரவழைப்பது பற்றியும் இப்போது பேசப்பட்டு வருகி-றது.

இவை அனைத்தும் சத்திரசிகிச்சை தேவைப்படும் ஒரு நாட்பட்ட நோயை களிம்பு தடவி சரிசெய்ய முடியும் ஒரு முயற்சியாகவே அமையும். நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த அத்தியாவசியமாகத் தேவைப்படும் கொள்கைத்தீர்மானங்களை மேற்கொள்ளாமலும் ஏற்றுமதியை நோக்கிய பொருளாதாரக் கொள்கையொன்றை முன்னெடுக்காமலும் இலங்கையினால் இப்போதைய நெருக்கடியிலிருந்து தப்பிக்க முடியாது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு துறைசார்ந்த நிபுணர்களும் கூறுகின்ற போதிலும் அது "செவிடன் காதில் ஊதிய சங்காகவே" உள்ளது. அதுமட்டுமன்றி நாட்டில் எடுக்கப்பட்டுள்ள வேறு சில நடவடிக்கைகளும் பொருளாதாரத்தை கணிசமாகப் பாதித்துள்ளன.

அண்மைக்காலங்களில் இலங்கை மத்திய வங்கி பெருந்தொகைப் பணத்தை அச்சிட்டு வெளியிடுவதன் மூலம் அரசாங்கத்தின் நிதித்தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது அதனால் நாட்டின் பணவீக்கம் அண்மைய மாதங்களில் அதிகரித்தது மேலும் இறக்குமதிக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதனால் ஏற்பட்ட தட்டுப்பாடுகள் காரணமாக அனைத்து பொருள்களின் விலைகளும் சடுதியாக உயர்வடைந்துள்ளன. இறக்குமதி உணவுப் பொருள்களின் விலைகள் மாத்திரமன்றி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விலைகளும் அதிகரித்துள்ளன. இரசாயன உரங்களின் பயன்பாடு தடைசெய்யப்பட்டமை விவசாயத்துறை பற்றிய கேள்வியறிவுபடைத்த சாதாரண மனிதராலும் சரியென ஏற்றுக்கொள்ள முடியாது.

மக்களின் உணவுத்தேவைக்கான உற்பத்தியில் வீழ்ச்சி, அதனால் ஏற்படக் கூடிய அரசியல் பொருளாதார விளைவுகள் பற்றிய கரிசனை சிறிதளவுமின்றி தான்தோன்றித்தனமான எடுக்கப்பட்ட அந்த முடிவின் தீவிரத்தன்மை வெளிப்பட ஆரம்பித்தபோது அரசு வாலைச் சுருட்டிக்கொண்டு பின்னோக்கி நகர நேரிட்டது. இடைப்பட்ட அந்த சமயத்தில் உணவு உற்பத்தித்துறையில் கணிசமானளவு பாதிப்புகள் ஏற்பட்டுவிட்டன. அப்போது அதிகரித்த உணவுப் பொருட்களின் விலைகள் இன்னமும் குறையவில்லை. இத்தனை பிரச்சினைகளும் நெருக்கடிகளும் ஏற்பட்டுள்ள நிலையிலும் பொதுமக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு குறித்த கரிசனைகள் பெரிதாக உரிய தரப்பினரால் வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் சில எதிர்க்கட்சி தலைவர்கள் தமது தரப்பிலிருந்து அரசிற்கு சில கருத்துக்களை முன்வைத்துள்ளனர். அதில் முக்கியமானதாக அரசு வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த கால அவகாசம் கோருவதாகும். இதன் மூலம் அரசிற்கு சுவாசிக்க சிறிது இடைவெளி கிடைக்கலாம், ஆனால் இதற்கு கடன் வழங்கிய நாடுகளும் நிறுவனங்களும் ஒருமித்து ஒப்புக் கொள்ள வேண்டும் அது கடினம் ஆனால் இயலாதது அல்ல.

பலவீனமானவர்கள் விளிம்பு நிலையிலுள்ள மக்களுக்கு உதவ வேண்டும் என்கிற எண்ணம் அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாது என்பதை அரசு உணர வேண்டும். அதேவேளை இறக்குமதிகளுக்கு தேவையான டாலர்கள் கையிருப்பு இல்லை. இருந்த டாலர்களை சவரின் பாண்டுகளுக்கு திருப்பியளிக்க அரசு பயன்படுத்தியது.



தற்போது மருந்துகளைக் கூட இறக்குமதி செய்ய முடியாத நிலையில் நாடு உள்ளது.

சீனாவை மட்டுமே நம்பி காலத்தை ஓட்டிவிடலாம் என்று அரசு நினைத்தால், ஆப்ரிக்க நாடுகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் மற்றும் அரபு வசந்தம் ஏற்படுத்திய தாக்கம் ஆகியவை இலங்கையிலும் எதிரொலிக்கலாம்.

**சிவா பரமேஸ்வரன் - மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்**
**கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி - மூத்த விரிவுரையாளர், பொருளாதார பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்**

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

+ தமிழ் பேசும் வைத்தியர்கள்
+ ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
+ குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
+ அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
+ அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
+ நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**

LOOKING FOR YOUR Dream House?



Call SEYON CHANDRAKUMAR

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING



இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாக கால்பதிக்கும்

கனடா உதயனின் 'இலங்கைச் சிறப்பிதழ்'

நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களில் பெருமளவு தாயகப் படைப்பாளிகளின் எழுத்துக்களை தாங்கி 2022, மே மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியாகின்றது.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள், விமர்சனங்கள் ஆகிய படைப்புக்கள் 2022, ஏப்ரல் மாதம் 22ம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்புக்களை தபால் மூலமாகவோ அன்றி மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.

சிறிய படைப்புக்களை 416 732 1608 என்னும் WHATSAPP இலக்கத்திற்கும் அனுப்பலாம்.

www.uthayannews.ca UTHAYAN உதயன்

இலங்கைச் சிறப்பிதழில் பிரசுரமாகும் படைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் சிலவற்றுக்கு சன்மானமும் சிறப்பிதழின் பிரதியொன்றும் அனுப்பி வைக்கப்பெறும்.



தபால் முகவரி:-
Managing Editor, Uthayan Publishers
4062. Ellesmere Road, Scarborough,
Ontario. CANADA. M1C 1J2
மின்னஞ்சல் முகவரி:- uthayannews@yahoo.com



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமீடலாம்
Pre-Arranging – A Wise Choise

FINANCIAL BENEFITS
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

EMOTIONAL BENEFITS
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
Tasty தமிழா
Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோவில் கிடைக்கும்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
ABC
123
Mini Library
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# மட்டக்களப்பில் இரண்டு இளம் சாதனைப் பெண்களை பாராட்டி கௌரவித்த விழித்தெழு பெண்ணே – கனடா சர்வதேச மகளிர் அமைப்பின் தலைவி சசிகலா நரேன்



இலங்கை மட்டக்களப்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த இரண்டு இளம் சாதனைப் பெண்களை பாராட்டி கௌரவிக்கும் வைபவத்தை விழித்தெழு பெண்ணே - கனடா சர்வதேச மகளிர் அமைப்பின் தலைவி சசிகலா நரேன் நடத்தினார்.

விழித்தெழு பெண்ணே - கனடா சர்வதேச மகளிர் அமைப்பினால் சாதனைப் பெண்களை கௌரவிக்கும் நிகழ்வொன்று 15ம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 5.00 மணியளவில் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

விழித்தெழு பெண்ணே - கனடா சர்வதேச மகளிர் அமைப்பின் தலைவி திருமதி.சசிகலா நரேந்திரன் தலைமையில் மட்டக்களப்பு வாடிவீட்டு விடுதியில் இடம்பெற்ற சாதனைப் பெண்களை கௌரவிக்கும் நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்ஜினி முகுந்தன் கலந்து சிறப்பித்ததுடன், சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் திருமதி. இந்திராவதி மோகன் கலந்து சிறப்பித்திருந்தார்.

இதன்போது சம கால கட்டத்தில் சாதனைப் பெண்களாக திகழ்ந்து கொண்டிருக்கும் கிழக்கு மாகாணம் அக்கரைப்பற்றைச் சேர்ந்த மருத்துவத் துறையில் சாதனை படைத்து 13 தங்கப் பதக்கங்களைப் பெற்று கிழக்கு மாகாணத்திற்கு பெருமை சேர்த்த மருத்துவர் செல்வி. த.தர்ஷிகா மற்றும் பாகிஸ்தானில் இடம்பெற்ற சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில் பங்குகொண்டு தங்கப்பதக்கம் வென்று விளையாட்டு துறையில் நாட்டிற்கும் வட மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்த முல்லைத்தீவு - மாங்குளத்தேச் சேர்ந்த யுவதியான கணேஷ் இந்துகாதேவி ஆகிய இருவரையும் பாராட்டி கௌவிக்கும் வண்ணம் இருவருக்கும் பொன்னாடை போர்த்தப்பட்டு, கனடிய பாராளுமன்ற உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்ட சான்றிதழ்கள், பணப்பரிசில் மற்றும் நினைவுச்சின்னங்களும் இதன்போது வழங்கிவைக்கப்பட்டன.



இலைமறை காயாக இருக்கும் திறமையான சாதனைப் பெண்களை கௌரவிப்பதை நோக்காகக் கொண்டு கடந்த 2013 ஆண்டு கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட விழித்தெழு பெண்ணே எனும் இவ் அமைப்பானது கனடாவில் சாதனைப் பெண்களை கௌரவிப்பது மட்டுமல்லாது இலங்கையிலும் சாதனை புரிந்துவரும் பெண்களை கௌரவித்துவருவதுடன், அண்மையில் கொழும்பில் மிகவும் பிரமாண்டமான முறையில் 100 சாதனைப் பெண்களை கௌரவிக்கும் நிகழ்வொன்றினை நடாத்தி சாதனைப் பெண்களை கௌரவித்திருந்தது மட்டுமல்லாமல் மட்டக்களப்பிலும் சாதனைப் பெண்களை பாராட்டி கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதுடன், இவ்வாறான சாதனைப் பெண்கள் வெளிநாட்டு போட்டிகளில் பங்குபெற நிதி உதவிகள் தேவைப்படுமிடத்து தமது அமைப்பு அதனை வழங்குவதற்கு எப்போதும் தயாராக இருப்பதாக விழித்தெழு பெண்ணே - கனடா சர்வதேச மகளிர் அமைப்பின் தலைவி திருமதி. சசிகலா நரேந்திரன் இதன்போது தெரிவித்திருந்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட தகவல் அதிகாரி வ.ஜீவானந்தன், மட்டக்களப்பு மாவட்ட சாரணர் ஆணையாளர் வீ.பிரதீபன், தொழில் அதிபர் அண்ணாச்சி, விழித்தெழு பெண்ணே அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதிகள் உட்பட சாதனைப் பெண்களின் உறவினர்கள் என பலரும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.

# "கணக்கியதுறையில் ஆழமான அறிவும் அளவற்ற செல்வமும் கொண்டிருந்தாலும் ஆர்ப்பாட்டம் இல்லாத வாழ்வை மேற்கொண்டவர் ஷீலா சுகுமார் அவர்கள்"


## 31ம் நாள் நினைவஞ்சலி நிகழ்வில் பலரும் புகழாரம்

"கனடாவில் நன்கு அறியப்பெற்ற வர்த்தகப் பிரமுகராகவும் மனிதநேயம் கொண்டவராகவும் அரசியல் ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கிவரும் கணேசன் சுகுமார் அவர்களின் துணைவியார் ஷீலா சுகுமார் அவர்கள், கணக்கியதுறையில் ஆழமான அறிவும் அளவற்ற செல்வமும் அடுத்தவர்களுக்கு உதவிடும் பண்பையும் கொண்டிருந்தாலும் ஆர்ப்பாட்டம் இல்லாத வாழ்வை மேற்கொண்டவர் அவரது அற்புதமான வாழ்வின் காலம் ஈடு செய்ய முடியாதது".

இவ்வாறு கடந்த சனிக்கிழமையன்று ஸ்காபுறோவில் நடைபெற்ற ஷீலா சுகுமார் அவர்களது 31ம் நாள் நினைவஞ்சலி நிகழ்வில் பலரும் அஞ்சலி உரையாற்றியபோது புகழாரம் சூட்டினார்கள்.

ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்களின் ஆரம்ப அஞ்சலி உரையொடு ஆரம்பமான இந்த நிகழ்வை வர்த்தகப் பிரமுகரும் கணேசன் சுகுமார் அவர்களின் நெருங்கிய நண்பருமான குலா செல்லத்துரை அவர்கள் உணர்வுபூர்வமாகத் தொகுத்து வழங்கினார்.

அங்கு உரையாற்றிய அரசியல் பிரமுகர்கள், சமூகத் தலைவர்கள், வர்த்தக துறை சார்ந்த நண்பர்கள் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் றைந்த ஷீலா சுகுமார் அவர்களது மனித நேயப் பண்புகளையும் தனது கணவரின் வர்த்தக முயற்சிகளுக்கு பக்க பலமாக இருந்து பணியாற்றி ஆர்வத்தையும் எடுத்துரைத்தார்கள்.



இறுதியாக கணேசன் சுகுமார் அவர்களின் வர்த்தக நிறுவனங்களின் முக்கிய பணியாளராக விளங்குபவரும் திருமதி. ஷீலா சுகுமார் அவர்களின் இறுதி நாட்களில் அவருக்கு ஒத்தாசையாக இருந்து கவனித்தும் தேற்றியும் அத்துடன் கணேசன் சுகுமார் அவர்களின் குடும்பத்தினருக்கு ஒரு ஆதரவுக் கரமாக விளங்கியவருமான திரு கணேஸ் உருக்கமான உரை ஒன்றை வழங்கினார்.

அன்றைய தினம் மறைந்த தமது அன்புக்குரிய அன்னையின் நினைவாக அவரது புத்திரச் செல்வங்கள் யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு ஐந்து மில்லியன் ரூபாய்களை வழங்கும் அறிவிப்பை செய்து ஸ்காபுறோ வைத்தியசாலைகளுக்கும் நிதி அன்பளிப்புக்களை வழங்கினார்கள்.











# கஜேந்திரகுமார் புதரில் இருக்கும் இரண்டு பறவைகளைப் (இணைப்பாட்சி) பிடிக்கும் ஆசையில் கையில் உள்ள ஒரு பறவையைப் (13 ஏ) பறக்க விடச் சொல்கிறார்!


*- கனடா நக்கீரன்*

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

அதிகாரப் பகிர்வுகான அலகு.

அதிகாரப் பகிர்வுக் குழு பல்வேறு விருப்பங்கள் மற்றும் விருப்பங்களின் பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவான விவாதங்களை நடத்தியது.

”அதிகாரப்பகிர்வுக்கான ஒரு அலகு நடைமுறைக்கு இயன்றவரை புவியியல் ரீதியில் இணைந்த பிரதேசத்தை உள்ளடக்கியதாகவும், சமச்சீர் பிராந்திய மேம்பாட்டுக்கு உகந்ததாகவும் நிர்வாகத் திறனை மேம்படுத்தும் வகையிலும் வடிவமைக்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் கருதுகிறோம். ஒவ்வொரு அணிகளுக்கு இடையே வெவ்வேறான வேறுபாடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இந்தச் சூழலில் அதிகாரப்




பகிர்வுக்கான பொருத்தமான அலகு மாகாணமாக இருக்கும் என்ற கருத்தில் உள்ளது.

வழக்கறிஞர்கள், கல்வியாளர்கள் மற்றும் நீதித்துறை மற்றும் நிர்வாகத் துறையில் அனுபவம் வாய்ந்த உறுப்பினர்கள் அடங்கிய நிபுணர் குழுவில் எந்தவொரு அரசியல் கட்சியையும் சேர்ந்தவர்கள் இருக்கவில்லை என்பதையும், விவாதங்கள் உண்மை மற்றும் இடஞ்சார்ந்த கருத்தாக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மாகாண சபைகள் வெள்ளை யானைகளைப் போன்றது என்றும், அவற்றை இயங்க வைப்பதில் அரசு கூடுதல் செலவினங்களைச் செய்யும் போது மக்களுக்குச் சேவைகளை வழங்குவதில் அவை திறம்படச் செயல்படவில்லை என மற்றொரு விமர்சனம் எழுந்துள்ளது.

இந்த விமர்சனத்தில் சிறிது பொருள் உண்டு. அதை வழங்க இயலாமைக்கான காரணங்களை மற்ற நாடுகளில் உள்ள ஒத்த அமைப்புகளுடன் ஒப்பிட்டு ஆராய வேண்டும். ஐக்கிய இராச்சியம் ஒரு ஒற்றையாட்சி முறைமை நாடு. அதில் இதே போன்ற அதிகாரங்கள் வெவ்வேறு இனப் பிராந்திய அலகுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன, அதாவது. ஸ்கொட்லாந்து, வேல்ஸ் மற்றும் வடக்கு அயர்லாந்து, (இது அல்ஸ்டர் மாகாணம்).

இந்த அலகுகள் அனைத்தும் அவற்றின் சொந்த சட்டமன்றங்களைக் கொண்டுள்ளதுடன், ஸ்கொட்லாந்து நாட்டைப் பொறுத்தவரை ஒரு நாடாளுமன்றம் உள்ளது, அதே நேரத்தில் அவை **West Minster** இல் உள்ள நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கின்றன. அரை - கூட்டாட்சி **(quasi-federal)** அரசியலமைப்பைக் கொண்ட இந்தியாவிலும், மாநிலங்களுக்கு ஆளுநர் மற்றும் சட்டப் பேரவைகள் இருக்கின்றன. இவற்றின் அதிகாரங்கள் 13 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களிலிருந்து மிகவும் வேறுபட்டதல்ல.

மேற்கூறிய அனைத்து நிகழ்வுகளிலும் அதிகாரப்பகிர்வு மிகவும் திறமையாகச் செயல்பட்டுள்ளதோடு பிராந்திய/ மாகாண அலகுகள் திறமையாகச் செயல்பட்டு மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்க முடிந்துள்ளது. அப்படியானால் இலங்கையில் மாகாண-சபைகள் ஏன் இந்தளவு சிறப்பாக செயல்படவில்லை என்பதை நாம் பார்க்க வேண்டும்.

முதலில் திறமையாக வினை செய்ய போதுமான நிதி தேவைப்படுகிறது. மாகாண சபையின் சட்டத்தின்



விதிகளின் கீழ், மாகாண ஆளுநருக்கு ஒரு மாகாணத்தின் நிதி மீதான கட்டுப்பாட்டு அதிகா-ரம் வழங்கப்பட்டுள்ளது. ஆளுநரின் சம்மதமின்றி எந்தவொரு வரி விதிக்கும் அல்லது ஒழிக்கும் சட்டத்தையும் மாகாண சபை நிறைவேற்ற முடியாது. இது தொடர்பாக ஆளுநர்கள் ஒத்துழைக்கவில்லை.

இதனால் சபைகள் பெருமளவில் மத்திய மானியங்களிலேயே தங்கியிருக்க வேண்டியுள்ளது. நொவம்பர் 2016, மத்திய - சுற்றியல் உறவுகளுக்கான நாடாளுமன்றத் துணைக் குழுவின் அறிக்கை, மாகாணங்களுக்கு வழங்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட வரி உயர்த்தும் அதிகாரத்திற்குக் கூடுதலாக கடன்கள் மற்றும் முதலீடுகளைப் பெறுவதற்கும், தேடுவதற்கும் அல்லது குறைந்த பட்சம் நிர்வகிப்பதற்கும் விதிக்கப்பட்டுள்ள வரையறைகளாகும். வெளிநாட்டு உதவி மற்றும் முதலீடுகள் மூலம் நிதியளிக்கப்படும் திட்டங்கள். “போதிய அல்லது கொள்கையற்ற நிதி ஏற்பாடுகளின் அரிக்கும் விளைவு என்னவென்றால், அவை மாகாண மற்றும் உள்ளூர் சேவை வழங்குதலை இடை நிறுத்துவதுடன் அரசியலமைப்பு ரீதியாக நிறுவப்பட்ட சனநாயக நிறுவனங்களின் மீ-தான நம்பிக்கை இழப்புக்கு வழிவகுக்கிறது” என்று குழு முடிவுரையாகக் கூறியுள்ளது.

மாகாணச் சபைகள் சட்டம் மாகாண அரச சேவை மற்றும் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டை ஆளுநருக்கு வழங்குகிறது. இந்த அதிகாரங்கள் தேசிய அரச சேவையின் மீது சனாதிபதி கூட பயன்படுத்தாத அதிகாரங்கள் ஆகும். மத்திய அரசும் மாகாண சபையும் ஆளும் கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில், ஆளுநர்கள் தங்கள் தனிச் சிறப்புரிமைகளை குறைவாகவே வலியுறுத்தும் நிலை-யில் இருப்பதோடு முதலமைச்சர்கள் சிறந்த முறை-யில் செயல்பட முடியும். எவ்வாறாயினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் மிகவும் குறை-வாகவே செயல்படுகின்றன. மறுபுறம் இந்தியாவில் மாநிலங்களின் ஆளுநர்கள் அரசியலமைப்புத் தலைவர்கள் போல் செயல்படுகின்றார்கள். நிறைவேற்று செயல்பாடுகளையும் அவர்கள் எடுத்துக் கொள்வதில்லை.

மறுசீரமைப்பு தேவைப்படும் மற்றொரு பகுதி மாகாணத்தின் நிர்வாக சேவை ஆகும். வல்லுனர்கள் குழுவின் 2006 பெரும்பான்மை அறிக்கை, அதிகா-ரப் பகிர்வு பலனளிக்க அது இருமை அற்றதாக இருக்க வேண்டும் என்றும் மாகாண நிர்வாகத்தில் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. கவலைக்குரிய மற்றொரு விடயம் விடயங்டகளின் ஒதுக்கீடு. 13 ஆவது திருத்தம் மாகாணத்திற்கும் மத்திக்கும் இடையில் விடயங்களை இரண்டு பட்டியல்களிலும் மூன்றாவது ஒருக்கியல் **(concurrent)** பட்டியலிலும் ஒதுக்கீடு செய்தாலும், ஒன்றுடன் ஒன்று அதிகாரங்கள் மாகாண சபையின் வினைத்திறனை மட்டுப்படுத்தி விட்டது.

மாகாண சபை வினைத்திறனோடு செயல்பட, விடயங்களை ஒதுக்குவதில் தெளிவு இருக்க வேண்டும். இதுவும் கவனிக்கப்பட வேண்டிய விடயம். மாகாண சபை முறையின் வினைத்திறனான செயற்பாடுகளுக்கு இடையூறாக உள்ள குறைபாடுகளை நான் கோடிட்டுக் காட்டியுள்ளேன். இவற்றில் பெரும்பாலானவை மா-காண சபைகள் சட்டத்தில் இருந்து வந்தவை.

இந்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் திருத்த முடியும். மாகாணத்தில் நிர்வாக மாற்றங்கள் மற்றும் நிர்வாக சேவை-களை மறுசீரமைப்புச் செய்வது 13 ஆவது திருத்தச் சட்டத்திலேயே வழங்கப்பட்டுள்ளவாறு சன-ாதிபதியினால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேற்கொள்ள முடியும். இதற்குப் பெரிய அரசியலமைப்பு மாற்றங்கள் தேவைப்படாது.

குறைபாடுகள் இருந்தபோதிலும், மத்திய அரசின் கட்டுப்பாடுகள் மற்றும் அத்துமீறல்கள் இருந்தபோதிலும், மாகாண சபை முறையானது நாட்டில் வேரூன்றியுள்ளது. இது மாகா-ண மட்டத்தில் மக்கள் அரசி-யல் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கிறது. உள்ளூர் மட்டத்தில் அரசியல் பிரச்சினைகளில் அனுபவம் பெற்றவர்கள் அதன் பின்னர் தேசிய அளவில் ஈர்க்கப் படலாம்.

மாகாண மட்டத்தில் சிறுபான்மையினரான தமிழ் மற்றும் முஸ்லீம் மக்கள் தங்கள் சொந்த விவகாரங்களை நிர்வகிப்பதில் தங்களுக்குச் சில உரிமை இருப்பதை அவர்களால் உணரமுடிகிறது. ஸ்கொட்ஸ், வெல்ஷ் மற்றும் வடக்கு ஐரிஷ் இனத்தவர்கள் தங்கள் உள்ளூர் பகுதிகளுக்கு அதிகாரப் பகிர்வைக் கொண்டிருக்கும் ஐக்கிய இராச்சியத்தில் **(UK)** நாம் பார்ப்பது போல், எந்தவொரு பல்லின அரசுக்கும் இது அவசியமானதா-கும். மாகாண சபை முறையை இல்லாதொழிக்க முயற்சிக்காமல், திருத்தங்கள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளின் மூலம் தேவையான மாற்றங்களைச் செய்து, அவர்களின் பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு சேவைகளை வழங்குவதில் அவற்றை மிகவும் திறமையானதாக மாற்றும் வகையில் அது முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

மாகாண சபைகள் 30 ஆண்டுகளுக்கும் மேலா-க இலங்கை அரசியலமைப்பின் ஒரு கூறாக இருந்து வருகின்றன. கொழும்பில் உள்ள அதிகாரவர்க்கத்தினரும் அரசாங்க அமைச்சர்களும் அவர்களை ஐயத்திற்கோ வெறுப்புடனோ பார்ப்பதை விட்டுவிட்டு, நாட்டின் ஆளுகையில் ஆதரவான நிறுவனங்களாகக் கருதி, முழு நாட்டிற்கும் மிகவும் திறமையான நிர்வாகத்தையும் சனநாயக ஆட்சி வடிவத்தையும் உருவாக்குவதற்கான நேரம் இதுவா-கும்.

தமிழ் கட்சிகள், அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் மேலும் அதிகாரமளிக்கும் முறை-களை நோக்கிச் செயற்படுவதன் மூலம், தமிழ் பேசும் மக்களின் வேட்கைகள் மற்றும் நலன்களைப் பேணிக்காக்கும் அதே வேளை தேசிய நலனுக்கான செயற்பாட்டில் ஈடுபடவும் முடியும். மாகாண சபைத் தேர்தல்கள் எதிர்வரும் ஆண்டுத் தொடக்கத்தில் நடத்தப்பட்டு, தற்போதுள்ள அரசியல் அமைப்பின் தொடர்ச்சி நீடிக்கும் என நம்பலாம். *முற்றும்.*

**(Chandrahasan defends the Provincial Council System. The Island, 28 December 2020)**

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# கனடாவின் கியூபெக் மாநிலத்தில் அமைந்துள்ள திரிவேணிசங்கமம் – Trois – Rivieres















கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று 'உதயன்' வார, இதழின் செய்தியாளர்கள் குழுவினருடன் 'ரூபம்' இணைய ஊடகத்தின் செய்தியாளர்களும் இணைந்து கியூபெக் மாநிலத்தின் முக்கிய வரலாற்று நகரங்களில் ஒன்றான **Trois – Rivieres** நகருக்குப் பயணம் செய்யும் வாய்ப்புக் கிட்டியது. அன்று ஒரு ஞாயிறுதினம். விடுமுறைநாளாக இருந்தது

ஆனால் உல்லாசமாகவோ – உற்சாகமாகவோ பயணிப்பதற்குக் கவர்த்தியநிலை சாதகமாக அமையவில்லை. காற்று வீச்சுடன் 27ºC அல்லது 30ºC குளிர் வெப்ப நிலையை உணர்ந்தோம். சுமார் இரண்டு மணிநேரப் பயணத்தின் பின் கியூபெக் மாநில **(Maurice Region) Reginal** தலைநகரமாகிய **Trois -Rivieres** (தமிழில் "மூன்று நதிகள்" கூடும் இடம் என்று பொருளாகும் நகரைச் சென்றடைந்தோம்.

இந்தியாவில் அலகாயத் மாநிலத்தில் ஓடுகின்ற புனித கங்கா -ஜமுனா – சரஸ்வதி நதிகள் மூன்றும் சங்கமிப்பது போன்று நமது கியூபெக் மாநில நகரமாகிய "துரு – ரிவரெஸ்" (மூன்று நதிகள்) கூடும் "திரிவேணிசங்கமம்" என்று மொழிபெயர்ந்து நினைவு கொள்வோம். **Trois – Rivieres** நகரின் வரலாற்றுச் சிறப்புக்களையும் முக்கியத்துவத்தையும் சிறிது கவனித்தோமானால்...

கியூபெக் மாநிலமேற்குக் கரைவாயிலில் ஓடும் **Maurice** நதிக்கும் -மொன்றியல், கியூபெக் நகர்களுக்கிடையே அமைந்திருக்கும் துறைமுகநகரமாகும். 1760ஆம் ஆண்டு 586 பிரஞ்சுக் குடிமக்களுடன் உதயமான இந்நகரம் (கனேடிய) கியூபெக் மாநிலத்தில் இயற்கை வளங்களை உள்ளடக்கியும் பொருளாதார வளர்ச்சிக்கும் – ஏற்றுமதிக்கும் முக்கிய பங்கு வகித்த துறைமுக நகராகும். இங்கு ஓடிச் செல்லும் சென்ற் – லோரன்ஸ் நதி வர்த்தகக் கப்பலை போக்குவரத்துக்கு பெரும்பங்கு வகித்து வருகிறது.

1850 ஆரம்பகாலங்களில் **Trois – Rivieres** நதி நகரம் (கனடா) கியூபெக் மாநில நிர்வாக தலைமையகமாகவும், பலமரம் அரியும் பாரிய **(Saw mills)** தொழிற்சாலைகளையும் – பெரு மரப்பலகை – மரங்களை ஏற்றுமதி செய்யும்இடமாகவும் விளங்கியது.

மரங்களை மூலப் பொருளாகக் கொண்டு காகித உற்பத்தி தொழிற்சாலைகள் கனடிய பொருளாதார வளத்தைப் பலப்படுத்தின.

நீர் மின்சார உற்பத்தியிலும் **(Hydro electric Power)** முன்னிலை வகித்தது. 1908ல் ஏற்பட்ட பெருந்தீ விபத்தில் பலத்த சேதம் உண்டாகி தீயினால் நகரம் அழிந்தது. 1816இல் கட்டபெற்ற சிறைச்சாலை 19ஆம் நூற்றாண்டின் கலையம்சம் மிகுந்த கட்டிடங்கள் 1856ஆம் ஆண்டு கட்டப்பெற்ற பழைய தேவாலயம் ஆகியன தீயிலிருந்து தப்பியது.

இன்றும் இந்நகரம்பழைக்கும் – புதுமைக்கும் பாலம் அமைக்கும் கலை – கலாச்சார – சங்கீத இசை அரங்குகள் – விளையாட்டு கேளிக்கைகள்- **Grand Prix** எனப்படும் விரைவு மோட்டார் வண்டிப் பந்தயங்கள் இரவு நேர உல்லாச நடன விடுதிகள் என சுற்றுலாப் பயணிகளை ஆண்டுதோறும் கவர்ந்திழுக்கும் தேனிலவு நகரமாகும்.

**Trois -Rivieres** நகர் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதியாகும் குரச எனப்படும் விலையுயர்ந்த மிருகங்களின் தோலினாலான பெண்களுக்கான ஆடம்பர குளிராடைகள் – உலகின் பல்வேறு நாட்டு சீமாட்டிகளின் – ஹலிவூட் நடிகைகளின் மேனியில் தவழ்வது யாவரும் அறிந்த **Fashion** உலக செய்தியாகும்.

வருகின்ற **Corona-free** கோடைகால விடுமுறையில் மீண்டும் "திரிவேணி" சங்க நகருக்குப் பயணம் செய்து சில இரவுகளை உல்லாசமாகவும் – உற்சாகமாகவும் கழிக்கலாம் எனக் கணவு காண்கின்றேன் கனவு மெய்ப்பட வேண்டும்.

## A Visit to Trois – Rivieres, A City of Tourisim; located in the Province of Quebec

Last week we had the opportunity to visit Trois - Rivieres, one of the most important historical cities in the state of Quebec, with the press team of 'Uthayan' Weekly magazine. On a Sunday. Holiday.

But charisma is not conducive to traveling for fun or excitement. We felt a cool temperature of 27oC or 30.C with wind gusts. After a two-hour drive, we reached Trois-Rivieres, the regional capital of Quebec (Maurice Region), which means "the confluence of three rivers" in Tamil.

***Journalist :Veenai Mainthan and Ganesh***




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை. வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
ᵉroted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# திருக்குறளுக்கு மரபுக் கவிதையால் பாமாலை அணிவித்த உலக சாதனை நிகழ்வு

ஓர் அதிகாரம், ஒரு கவிஞர் ஓர் மரபுக்கவி படைத்து 133 அதிகாரம், 133 கவிஞர், 133 மரபுக் கவிதை என்ற தலைப்பிட்ட சாதனை நிகழ்வு 12-02-2022 அன்று இலங்கை, இந்திய நேரப்படி காலை 10:00 மணிக்கு ஆரம்பமாகித், தொடர்ந்து மறுநாள் வரை உலகிலுள்ள பன்னாட்டுத் தமிழ்ப் புலவர்கள், பாவலர்கள், கவிஞர்கள் ஒன்று கூடி ஐயன் வள்ளுவப் பெருந்தகைக்கு மரபுக் கவிதை கொண்டு இரவு பகலாயத் தேம்பா மாலையாம் பா மாலை சூட்டி மகிழ்ந்த நாள். மோத்தம் 15 மணி நேரம் தொடர்ச்சியான கவியரங்கம்.

இந்த உலகச் சாதனை நிகழ்வை உலக சாதனையாளர், பேரா. சே. பானு ரேகா. தமிழ்நாடு, பாடலாசிரியர், அகணி சுரேஸ், கனடா ஆகிய இருவரும் இணைந்து மேற்கொண்டனர். அவர்கள் இருவரும் இந்நிகழ்வின் நிகழச்சி ஒருங்கிணைப்பாளர்களாக இருந்து திறம்பட நடத்தி முடித்தனர்.

பன்னாட்டு திருக்குறள் மரபுக் கவிதை அமைப்பு, தமிழ் மகள் இலக்கிய அமைப்பு, மல்ரி சிமாட் சொலு'ன் மற்றும் ஆல் இந்தியா புக் ஆ.ஃ.ப் ரெகார்ட்ஸ் இணைந்து வழங்கிய உலக சாதனை நிகழ்ச்சி. உலகச் சாதனையாளர் சான்றிதழ் வாங்குபவராக உலக சாதனையாளர் முனைவர். வெங்கடேசன் அவர்களும், இணைய இணைப்பினை உலகச் சாதனையாளர் ஜோதி மீனாட்சி வழங்கியும், கண்காணிப்பாளராக உலகச் சாதனையாளர் புஷ்பா கிறிஸ்டி அவர்களும் பங்காற்றினார்கள்.

இவர்களால் உலகளவில் உள்ள மக்கள் பார்த்தும் கேட்டும் மகிழ்ந்திட அனைவரையும் வாழ்த்தி வரவேற்றுத், தமிழர் பண்பாட்டோடு தமிழ்த்தாய் வாழ்த்து ஆடல் பாடல் அணிசெய்ய இனிதே சாதனைத் திரை திறந்து வைக்கப்பட்டது.





தமிழ்த்தாய் வாழ்த்து சே.ஜீவிதா (கல்லூரி மாணவி) அவர்களாலும், திருக்குறள் வாழ்த்து மயூரி (கல்லூரி மாணவி) அவர்களாலும், கடவுள் வாழ்த்து கவிஞர் தேசபாரதி ராஜலிங்கம் வேலாயுதர் அவர்களாலும் வழங்கப்பட்டன. திருக்குறள் பாடலுக்கான வரவேற்பு நடனம் காணொளியாக விரிந்தது.

வரவேற்புரையை இலக்கிய மாமணி பேராசிரியர் சே. பானுரேகா அவர்கள் வழங்கினார். செம்மொழி விருதாளர் அருள்.திரு. திருக்குறள் தூயர், முனைவர். பேராசிரியர் கு.மோகனராசு அவர்கள் தலைமையுரை வழங்கினார். முன்னிலை உரையை ஞானப் பீட விருதாளர். கவிமாமணி. முனைவர் குமரி-ச் செழியன் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வில் டில்லி பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சர்மா அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.



பேராசிரியர். முனைவர். பாலசுந்தரம் இளையதம்பி தமிழ்த்துறை, அண்ணாமலைக் கனடா வளாகம். அவர்களால் வாழ்த்துரை வழங்கப்பட்டது. அடுத்து முனைவர், பேராசிரியர், சந்திரபோஸ் (அப்துல் கலாம் விருதாளர், கல்லூரி முதல்வர் ஓய்வு) அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

இந்நிகழ்வில் உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம், சிந்தனைப் பூக்கள் பத்மநாதன், உலக சாதனையாளர் கவிஞர் சரவணன், தமிழ்ப்பூங்கா அதிபர் யோகா அருள்சுப்பிரமணியம், கனடா தமிழ்க் கவி-ஞர் கழகத் தலைவர் கந்த ஸ்ரீ பஞ்சநாதன் ஆகியோரும் வாழ்த்துரைகளை வழங்கினார். கவியரங்கு தொடக்கவுரையை கவிஞர் அகணி சுரேஸ் அவர்கள் வழங்கினார்.

புலவர்கள் கவியுரைக்க, வித்தகர்கள் வாழ்த்துரைக்க பகலோன் முன் ஆரம்பமான சாதனையரங்கு, அவன் மங்கி மறைந்த போதும் சோராமால், வெள்ளி நிலா பவனிவரத் தாரகைத் தோழியர் கண்சிமிட்ட விடி வெள்ளி முளைத்தும் சோராமல் மீண்டும் வந்தான் கதிரோன்.



கண்ணுறக்க மற்றும் கவிஞர்கள் கவி சொல்லச் சோரவில்லை. புத்துணர்வில் பொங்கிய தமிழ் ஆர்வம். பதினெண்கீழ்க் கணக்கில் அடங்கியுள்ள முப்பால் என்னும் திருக்குறள் “அகரம் முதல” என ஆரம்பித்து 1330 குறள்களை, 133 அதிகாரங்கள் மூலம் பல நூறு வருடங்களுக்கு முன்னரே மக்கள் தங்கள்



வாழ்கையில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதனைத் தெளிவாகத் தந்துள்ளார் திருவள்ளுவர். இவர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் எனக் கருதுகிறார்கள். ஈரடிகளில் உலகின் தத்துவத்தைக் கூறி அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் அறத்துப் பால், பொருட் பால், காமத்துப் பால் என வகைப் படுத்தியதை 133 புலவர்கள் 133 மரபுக் கவிதையில் பா புனைந்து அணிவித்தார்கள்.

இன்று சென்னையிலுள்ள முக்கியமான இடம் வள்ளுவ கோட்டம். இங்கு திருவள்ளுவருக்கு ஒரு மணி மண்டபம் உண்டு. அந்த மண்டபத்தில் அனைத்துக் குறள்களும் பதிக்கப்பட்டுள்ளன.

கன்னியா குமரியில் முக்கடல் சங்கமிக்கும் இடத்தில் இவரது சிலை-யானது 133 அடி உயரத்தில் அமைக்கப் பட்டுள்ளது. உலகுவாழ் தமிழ்க் கவிஞரும் ஒருங்கிணைந்து திருவள்ளுவருக்கு அவரது குறளை உள்வாங்கி மரபுக் கவிதையாக யாத்து உலக சாதனை படைத்துள்ளமை வரலாற்று உலக சாதனையாகும். இவ்வகைச் சாதனையால் புலவர்களை உலகறியச் செய்த செயல் மாண்புடையதாகும். அவர்களைப் போற்றி வாழ்த்துவோம்.

இந்நிகழ்வில் இந்தியா கனடா, இலங்கை, மலேசியா, இங்கிலாந்து, டென்மார்க், ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து கவிஞர்கள் பங்குபற்றித் தாம் தெரிவுசெய்த அதிகாரங்களிற்கான கவிதைகளைப் படித்து மகிழ்ந்தனர். குனடா நாட்டிலிருந்து 24 கவிஞர்கள் பங்கு பற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. கனடாக் கவிஞர்கள் பங்குபற்றிய கவியரங்குகளை கவிஞர் மாவிலி மைந்தன் சண்முகராஜா, கவிஞர் அகணி சுரேஸ் ஆகி-யோர் தலைமை தாங்கி நடத்தினர். விழாவில் கவிஞர் முத்தரசன், கவிஞர் படைக்கலப் பாவலர், உலகத் திருக்குறள் மையம் சார்ந்த திரு குமரகுரு கணபதிப்பிள்ளை, மருத்துவர் செல்வி முருகேசன், பேராசிரியர் அரங்கராசன், முனைவர் லலிதா சுந்தரம், திருமதி கௌரி பாபு, பாவலர் புஸ்பா கிறிஸ்டி, முனைவர் ஜோதி மீனாட்சி ஆகியோரும் ஆல் இன்டியா ரைக்கோர்ட்ஸ் நி-றுவனர் முனைவர் வெங்கடேசன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

*கவிஞர் மேரி ஞானப்பிரகாசம் - கனடா*



# சுதந்திரத்திற்குப் பின் பொருளாதார வளர்ச்சிக்கான முன்நிபந்தனைகள் பலவீனமடைதல்

சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும்போது, பெரும்பாலான வர்ணனையாளர்கள், அனைவரும் இல்லாவிட்டாலும், நாட்டின் சாத்தியமான பொருளாதார வளர்ச்சியைக் காட்டிலும் குறைவானதாக இருப்பதையிட்டு வருந்துகிறார்கள்.

குறைவாக அடையாளம் காணப்பட்ட காரணி

கடந்த ஞாயிற்றுக்கிழமை பத்தியானது, நாட்டின் வளர்ச்சியை பலவீனப்படுத்துவதற்கான குறைவாக அடையாளப்படுத்தப்பட்ட காரணிகளில் ஒன்றை மையமாகக் கொண்டது. தீவில் இருந்து அறிவுப்பிழைப்பாளர்கள், அறிவியலாளர்கள் மற்றும் திறமையான ஆட்களின் வெளியேற்றம் தொடர்கிறது.

இந்த இடம்

இன்றைய பத்தி நீண்டகால நிலையான பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டுக்கான பரந்த அளவிலான முன்நிபந்தனைகள் பற்றி விவாதிக்கிறது. வருந்தத்தக்க வகையில், கடந்த ஏழு தசாப்தங்களாக இவை மோசமடைந்துள்ளன. இவை பலப்படுத்தப்பட்ட குறுகிய காலங்களும் உள்ளன. ஆனால் அவை விரைவில் பலவீனமடைகின்றன. ஐயத்திற்கு இடமின்றி, இன்று நாம் வளர்ச்சிக்கான சூழ்நிலையின் உச்சத்தை அடைந்துள்ளோம்.

முன் நிபந்தனைகள்

நீண்ட கால நீடித்த பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான முன்நிபந்தனைகள் ஏராளம். தேசிய ஒற்றுமை, அரசியல் உறுதித்தன்மை, சட்டத்தின் ஆட்சி, ஊழல் ஒழிப்பு, நடைமுறை பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் அவற்றைத் திறம்பட செயல்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும்.

இவை இன்று வெளிப்படையாக இல்லை. இந்தப் பொருளாதாரம் அல்லாத முன் நிபந்தனைகள் இல்லாதது நாட்டின் சாத்தியமான பொருளாதார செயல்திறனுக்குக் கீழே இருப்பதற்கு பெரும்பாலும் காரணமாக இருந்தது. உயர் நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் மனித மேம்பாட்டை அடைவதற்கு இலங்கையின் முன்நிபந்தனைகள் என்ன?

ஐந்து முன் நிபந்தனைகள்

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் குறைந்தது ஐந்து முன்நிபந்தனைகள் தேவை. இவை நாட்டின் நீண்டகால வளர்ச்சி மற்றும் சட்டத்தின் ஆட்சி, இன மத மற்றும் சமூக நல்லிணக்கத்தை அடைதல், ஊழலை ஒழித்தல், உறுதியான மற்றும் நடைமுறைப் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் அவற்றின் தொடர்ச்சி மற்றும் திறம்பட செயல்படுத்துவதில் உறுதிப்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் உறுதியான அரசாங்கமாகும்.

அடிப்படைக் காரணங்கள்

இந்தப் பொருளாதாரம் அல்லாத காரணிகள் மற்றும் பயனுள்ள நடைமுறைப் பொருளாதாரக் கொள்கைகள் இல்லாதது பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியைத் தீர்மானிப்பதற்கான அடிப்படைக் காரணங்களாகும். மக்களின் மதிப்புகள், பணி நெறிமுறைகள், கல்வி மற்றும் அரசியல் கலாச்சாரம் மற்றும் சுற்றுச் சூழல் போன்ற பொருளாதார வளர்ச்சியை பாதிக்கும் பல காரணங்கள் உள்ளன என்பது ஒப்புக்கொள்ளத்தக்கது. பலவீனமான பணி நெறிமுறைகள் மற்றும்
ஒழுக்கமின்மை, குறிப்பாக அரசு துறையில், நாட்டின் குறைந்த பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய காரணங்கள் ஆகும்.

தேசிய ஒற்றுமை மற்றும் சமூக நல்லிணக்கம்

நாட்டின் உயர் பொருளாதார வளர்ச்சியை அடைய இயலாமைக்கான முக்கிய காரணங்களில் ஒன்று அவ்வப்போது இன மற்றும் மத வன்முறை ஆகும். . இந்த நிகழ்வுகள் வெளிநாட்டு முதலீட்டைத் தடுக்கின்றன, மூளை வடிகால் அலைகள் அதிகரித்த பாதுக
ாப்புச் செலவுகள், அதிகரித்த நிதிப் பற்றாக்குறை மற்றும் பொதுக் கடன் ஆகியவை நாட்டின் பொருளாதாரத் திறனை பலவீனப்படுத்தியுள்ளன. அவர்கள் பொருளாதாரத்தை சீர்குலைத்துள்ளனர்.

யூலை “83

இதன் தெளிவான உதாரணம், குறிப்பிடத்தக்க வெளிநாட்டு நேரடி முதலீடுகளுடன் பொருளாதாரம் உயரும் தருணத்தில் யூலை ’83 வன்முறை வெடித்ததாகும்.

தெற்காசியாவில் பொருளாதாரத்தைத் தாராளமயமாக்கிய முதல் நாடு என்பதால், புதிதாக தொழில்மயமாக்கப்பட்ட நாடாக மாறுவதற்கான வாய்ப்பு எங்களுக்கு இருந்தது. நாட்டில் முதலீடு செய்யவிருந்த பன்னாட்டு நிறுவனங்கள் வகுப்புவாதக் கலவரங்களுக்குப் பிறகு மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் பிற தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குத் தப்பி ஓடின.

இது 2009 இல் உள்நாட்டுப் போர் முடிவடையும் வரை பொருளாதாரத்தில் கடுமையான பின்னடைவுக்கு வழிவகுத்தது. இன மற்றும் மத நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவது எதிர்காலத்தில் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு ஒரு தீர்மானிக்கும் காரணியாக இருக்கும்.

சட்டத்தின் ஆட்சி

சட்டம் ஒழுங்கு மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை உறுதி செய்வது பொருளாதார வளர்ச்சிக்கான மிக முக்கியமான முன் நிபந்தனைகளில் ஒன்றாகும். சட்டத்தின் ஆட்சி என்பது சமூகத்தின் அமைதியையும் ஒழுங்கான வாழ்க்கையையும் உறுதிப்படுத்த சட்டத்தை அமல்படுத்துவது மட்டுமல்ல, அனைவருக்கும் சம நீதியையும் குறிக்கிறது. இவை இல்லாமல் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீடுகளுக்கு முதலீட்டுச் சூழல் உகந்ததாக அமையாது என்பதால் பொருளாதாரம் உயராது.

மனித உரிமைகள்

மனித உரிமை மீறல்கள் பன்னாட்டுக் கவனத்தை ஈர்த்துள்ளன, மேலும் பொருளாதார தடைகள் அச்சுறுத்தல்கள் இருக்கும் நேரத்தில் நாங்கள் இருக்கிறோம். இது நடந்தால் நாட்டின் ஏற்றுமதிகள் சிக்கலாக இருக்கும்.

ஒப்பனை மற்றும் முக்கியமற்ற சட்ட மாற்றங்கள் நாட்டில் மனித உரிமைகளை மீட்டெடுப்பதை பன்னாட்டுச் சமூகத்தை நம்ப வைக்க வாய்ப்பில்லை. எதிர்பாராதவிதமா, சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் மக்களின் மோசமான நிலைமைகளை மேலும் மோசமாக்கும்.

ஊழல் ஒழிப்பு

நாடுகளின் வளர்ச்சியின்மைக்கு ஊழல் முக்கிய காரணியாக இருந்து வருகிறது. பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் கூறியது போல், “நாடுகள் ஏழைகளாக இருப்பது வளங்கள் இல்லாததால் அல்ல, ஊழலால்” என்று கூறியுள்ளார். நாடுகளின் வளர்ச்சிக்கு ஊழல் ஒரு முக்கிய காரணியாக உள்ளது. பாகிஸ்தான் பிரதம மந்திரி இம்ரான் கான் கூறியது போல்: “நாடுகள் ஏழைகள், அவர்களுக்கு வளங்கள் இல்லாததால் அல்ல, ஊழல் காரணமாக” ஏழைகளாக இருக்கிறார்கள்.

அரசாங்கம் ஊழலை ஒழித்து ஊழலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். ஊழல் பொருளாதார மற்றும் சமூக முன்னுரிமைகளை சிதைக்கிறது, பொது வளங்களை வீணாக்குகிறது மற்றும் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கும் திறமையின்மைக்கு வழிவகுக்கிறது.

வளர்ச்சியைத் தடுக்கும் திறமையின்மைக்கு வழிவகுக்கிறது

அரசியல் மற்றும் நிர்வாகத்தின் அனைத்து அடுக்குகளிலும் இலஞ்சம் மற்றும் ஊழல் ஊடுருவியுள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. புதிய அரசாங்கத்தின் வெற்றியின் பெரும்பகுதி நாட்டில் ஒப்பீட்டளவில் குறைந்த அளவிலான ஊழலை அடைவதில் தங்கியுள்ளது.

நடைமுறை பொருளாதாரக் கொள்கைகள்

அரசாங்கம் பொருளாதாரத்தின் தற்போதைய நிலையை யதார்த்தமாகப் பார்க்க வேண்டும் மற்றும் பொருளாதார ரீதியாக பகுத்தறிவு மற்றும் நடைமுறைக்குரிய பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். நடைமுறைக் கொள்கைகள் பயனுள்ளவை. எந்தவொரு சித்தாந்தத்தையும் அடிப்படையாகக் கொண்ட பயனற்ற பொருளாதாரக் கொள்கைகள் கடந்த காலத்தைப் போலவே விலை உயர்ந்ததாக எண்பிக்கப்படலாம். நாட்டின் முன்னேற்றத்திற்கு முக்கியமான பொருளாதார சீர்திருத்தங்கள் கருத்தியலை கருத்தில் கொள்ளாமல் செயல்படுத்தப்பட வேண்டும். அரசாங்கம் நடைமுறை பொருளாதாரக் கொள்கைகளை வகுக்க வேண்டும், கருத்தியல் கொள்கைகளால் வழிநடத்தப்படக்கூடாது.

திறம்பட செயல்படுத்துதல்

நாடாளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு பெரும்பான்மை இருந்த போதிலும், இந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது கடினமாக இருக்கும். அரசியல் கலாசாரம் மற்றும் சூழல் மற்றும் அரசியல்வாதிகளின் சொந்த மற்றும் குறுகிய நலன்கள் தேவையான அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை எதிர்க்கலாம்.

அதனால்தான் நாடு குன்றிய நிலையில் உள்ளதுடன் அதன் சாத்தியமான பொருளாதார திறனையும் அடையவில்லை. ஆயினும்கூட, பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான முன்நிபந்தனைகளை செயல்படுத்தும் கடந்த காலத்திலிருந்து ஒரு இடைவெளி இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

கொள்கைகளை திறம்பட செயல்படுத்துவதற்கு திறமையான நிர்வாகம் முக்கியமானது. திறமையான பொது சேவையை உறுதி செய்வதற்கான நிர்வாக சீர்திருத்தங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்இ பல ஆண்டுகளுக்கு முன்பே நிர்வாக சீர்திருத்த ஆணையத்தின் விரிவான அறிக்கை கொடுத்திருந்தும், எந்தவொரு உருப்படியான
பொருளாதார சீர்திருத்தங்கள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை.

முடிவுரை

பொருளாதாரம் அல்லாத முன்நிபந்தனைகள் நிறுவப்பட்டால் மட்டுமே நிலையான உயர் பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும். தேசிய ஒற்றுமை, அரசியல் உறுதித்தன்மை மற்றும் சட்டத்தின் ஆட்சி, ஊழல் ஒழிப்பு ஆகியவை இதில் அடங்கும்.

நடைமுறைப் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் அவற்றை திறம்பட நடைமுறைப்படுத்துதல் மற்றும் பொருளாதார, கல்வி மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள் ஆகியவை நாட்டின் பொருளாதார செயல்திறனை மேம்படுத்துவது இன்றியமையாதவை. இந்த முன்நிபந்தனைகள் நிறுவப்படாத வரையில் நமது பொருளாதார வளர்ச்சி நமது ஆற்றலுக்குக் குறைவாகவே இருக்கும்.

பொருளாதார வளர்ச்சிக்கான முன்நிபந்தனைகளை நிறுவுவதற்கான அரசியல் மற்றும் சமூகக் கட்டமைப்பு நம்மிடம் உள்ளதா?

*(தமிழாக்கம் - கனடா நக்கீரன்)*

**(https://www.sundaytimes.lk/220213/columns/post-independent-weakening-of-pre-conditions-for-economic-development-472258.html)**

இவ்விடத்தில் விளம்பரம்
செய்வதற்கு
எம்மை அழையுங்கள்
416-752-1524


*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 44)*

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

அதற்கு 'தாத்தா என்னால் எதையும் சொல்ல முடியவில்லை நான் போக வேண்டிய கட்டாயம் எனக்கு வீரபாண்டியன் தலை கொண்டேன் அதனால் இந்த நிலை பளுவூர் ராணியிடம் நான் மன்னிப்புக் கோர வேண்டும்' என்றான். அதற்கு மலையமான் மிக்க கோபம் கொண்டவராக 'இது என்ன ஒரு பெண் பிள்ளையிடம் இந்த வீராதி வீரன் மன்னிப்புக் கேடபதா?' என்றார். 'ஆம் தாத்தா பிழை செய்தால் யாராக இருந்தாலும் அதை உணர்ந்து மன்னிப்புக் கோர வேண்டும் அது தான் நியாயம் பிழைகளை மூடி மறைத்து மேலும் மேலும் பிழைகளையும் பொய்களையும் சேர்த்துக் கொள்கிறோம்' என்றான். மலையமான் 'நீ என்ன பிழை செய்தாய்' என்று கேட்க அவனும் அன்று நடந்தவைகளைச் சொன்னான். அதற்கு அவர் 'உன் பாட்டனாரின் தந்தை புகழ் பெற்ற பராந்தக சக்கரவர்த்தி ஏழு பெண்களை மணந்து கொண்டார். அவரைப் போல் நீ எத்தனை பெண்களையும் மணந்து கொள் ஆனால் பெரியபழுவேட்டரையர் மணந்த மாய மோகினியை மட்டும் மணந்து கொள்ளாதே' என்றார். 'சோழ குலத்தாருக்கும் மலையமான் குலத்தாருக்கும் களங்கம் உண்டு பண்ணமாட்டேன் தாத்தா நீங்கள் சமாதானமாக போய் வாருங்கள்' என்றான் ஆதித்தகரிகாலன். திருப்புறம்பயம் கங்க மன்னனின் பள்ளிப் படைக் கோவில் காட்டு வழியே வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் குதிரை மீது பயணம் செய்து கொள்ளிடக் கரை வந்து சேர்ந்தனர். அங்கு படகில் ஏறி வரும் போது வெள்ளப் பெருக்கு காரணமாக படகு நீரில் மூழ்கியது. வந்தியத்தேவன் தன் அரைக் கச்சை சுருளையும், பழுவூர் ராணியின் இலச்சினை மோதிரத்தையும், ஆதித்தகரிகாலனுக்கு கொடுக்க வேண்டிய ஓலைச் சுருளையும், பொன் நாணயங்களையும் இழந்தான். அவனிடம் குதிரை வாங்கப் பணம் எதுவும் இல்லை காஞ்சிக்குப் போவதற்கு குதிரை வேண்டும் என்ன செய்வது என்று எண்ணிய போது கடம்பூர் போகும் எண்ணம் உதயமாகியது. கொள்ளிடத்தின் வட கரையில் உள்ள திருக்காளாட்டுள்ளூர் என்னும் ஊரில் இருந்து கடம்பூர் நோக்கிப் பயணித்தான் சூரியன் அஸ்தமிக்கும் சமயம் கடம்பூரை அடைந்தான். கடம்பூர் அரண்மனை வாசல் தோரணங்களால் நிறைந்திருந்தது. கடம்பூர் சனங்கள் பலவாறு பேசிக் கொண்டார்கள் சம்பூர் சம்பவரையர் மகன் கந்தமாறன் ஆதித்தகரிகாலரை அழைத்து வர காஞ்சி சென்றதாகவும், பெரிய பழுவேட்டரையரும் தன் ராணியுடன் வருகிறாராம் என்றும், இன்று சின்ன இளவரசர் அருள்மொழிவர்மரை கடல் கொண்டு விட்டது இந்த நேரம் ஏன் இந்த விருந்துபசாரம் என்றும் கதைத்துக் கொண்டார்கள். சனங்கள் கதைப்பதற்கு காது கொடுக்காது நகரைக் கடந்து சென்று ஒரு மூங்கில் காட்டுப்பாதையில் உள்ள ஐயனார் கோயிலை நெருங்கிக் கொண்டிருந்தனர். அவ்வேளை கடம்பூர் மாளிகையில் பணியாளனாக இருக்கும் இடும்பன்காரி சதிக் கும்பலைச் சேர்ந்தவன் அங்கு ஒரு சுரங்கப் பாதை வழியாக வெளியே வந்தான். இதை ஆழ்வார்க்கடியானும், வந்தியத்தேவனும் மறைந்திருந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். வெளியில் வந்த இடும்பன்காரி துவாரத்தை அப்படியே விட்டுவிட்டு ஐயனார் கோவிலின் விளக்கை ஏற்றினான்.

அப்பொழுது வந்தியத்தேவன் ஆழ்வார்க்கடியனிடம், 'அவன் வந்த சுரங்கப் பாதை எங்கே போகிறது என்று பார்த்து விட்டு வருகிறேன் நீ இங்கேயே இரும்' என்று சொல்லிவிட்டு அந்த வழியில் இறங்கினான். அந்த இருளடைந்த பள்ளத்தில் மறைந்தான். விளக்கை ஏற்றிவிட்டு வெளியே வந்த இடும்பன்காரி அந்த துவாரத்தை அடைத்தான். அவ்வேளை ரவிதாசன் சோம்பன் சாம்பவன் ஆகியோர் அங்கு வந்தனர் அவர்கள் பேசிக் கொண்டனர். 'ஆதித்தகாரிகாலன் காஞ்சியில் இருந்து புறப்பட்டு விட்டான் அவனை இனி யாராலும் தடுக்க முடியாது எம் வீரதத்தை முடிக்கும் நாளும் நெருங்குகிறது அந்த வந்தியத்தேவனை இன்று கொள்ளிடக் கரையில் எம் எதிரி ஆழ்வார்க்கடியானுடன் பார்த்தேன். இளவரசரது சகோதரி கொடுத்த ஓலையை வந்தியத்தேவன் இன்னும் கொடுக்கவில்லை' என்றான். சுரங்கப் பாதையில் அகப்பட்ட வந்தியத்தேவன் 'இது என்ன தேவையில்லாத காரியத்தில் இறங்கிவிட்டேன் சுரங்கப் பாதையையும் அவன் மூடிவிட்டான் எப்படி நான் வெளியே செல்வது இந்த வழி எங்கே போகிறது என்று தெரிந்து கொண்டு அவர்கள் சதித் திட்டத்தை முறியடிக்க வேண்டும்' என்றபடி இருட்டில் படிக்கட்டுக்கள் மேல் ஏறி வந்தான். அங்கு வேட்டையாடிய மிருகங்களின் தோல்களில் பஞ்சு அடைத்து வைத்திருந்தார்கள் அதை தடவிப் பார்த்து புரிந்து கொண்டான். ஒரு யானையின் தும்பிக் கையைப் பிடித்த போது யானையின் காது அசைந்தது ஒரு பெரிய துவாரம் தெரிந்தது அதில் தலையை வெளியே நீட்டினான் அங்கு ஒரு பெண்ணின் முகம் அது மணிமேகலை இவள் சம்புவரையரின் செல்வப் புதல்வி அவள் அண்ணன் கந்தமாறன். கந்தமாறன் போர்க்களத்தில் இருந்து வீடு திரும்பும் போதெல்லாம் வந்தியத்தேவன் தன் உயிர் நண்பன் அவன் அழகில் மன்மதன் வீரத்தில் அர்ச்சுனன், யுக்தியில் கிருஷ்ணர் என்று மணிமேகலைக்கு கூறுவான். அதனால் மணிமேகலை கற்பனை கொண்டு அவனிடம் காதல் கொண்டாள். சில நாட்களின் பின்னர் கந்தமாறன் வந்தியத்தேவனை வெறுத்தான் தேவையில்லாத பழிகளைச் சுமத்தினான். தஞ்சாவூர் சிம்மாசனத்தில் மதுராந்தகரை ஏற்றி வைப்பதாக தீர்மானம் செய்த பின் தன் தங்கைக்கு வேறு திருமணம் செய்யுமாறு வற்புறுத்தினான். மதுராந்தகரே சின்னப்பழுவேட்டரையர் மகளை ஏற்கனவே திருமணம் செய்தவர். அவர் சிவ பத்தன் பயந்த சுபாவம் கொண்டவர் பெண்களைப் போல் மூடு பல்லக்கில் பயணிப்பவர். இவரை நான் கல்யாணம் செய்ய மாட்டேன் என்று வாதம் செய்தாள் தமையனோ மணிமேகலையை வற்புறுத்தினான். வந்தியத்தேவனிடம் அவள் தன் காதலைக் கூற எண்ணிய போது, அவன் தன் தமையனைக் கத்தியால் குத்தினான் என்று கேள்விப்பட்டு அவள் மனம் மாறியது. மீண்டும் ஆதித்தகரிகாலன் கடம்பூர் வருகிறான் அவனை திருமணம் செய்யுமாறு பெற்றோர் கேட்டதால் மீண்டும் அவள் உள்ளத்தில் உற்சாகம் பொங்கியது. அவள் பரபரப்பானாள். பளுவூர் ராணி இன்று இரவு இங்கு வந்து விடுவாள் அவள் அழகை பார்த்து மயங்காதவர் இல்லை. அத்தனை அழகு அவளைப் பார்க்க மிக்க ஆவலாக இருந்தாள். அந்த சிந்தனையுடன் அவள் கண்ணாடி பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தக் கண்ணாடியில் வந்தியத்தேவன் முகம் தெரிந்தது திடுக்கிட்டு அது எப்படி என்றபடி சிந்தித்தாள். உடனே தன் தோழியுடன் பக்கத்திலுள்ள வேட்டை மண்டபத்திற்கு சென்று பார்த்தாள். அங்கு யாரையும் காணவில்லை திரும்பி வந்துவிட்டாள். பின்னர் அந்த சுரங்கவழியாக ஐந்தாறு ஆட்கள் வந்து சேர்ந்தனர் வந்தியத்தேவன் குகைகளின் பின் மறைந்திருந்தான். மணிமேகலை மீண்டும் விளக்குடன் அங்கு வந்தாள். அப்போது இடும்பன்காரி அங்கு நின்றான் மணிமேகலையைப் பார்த்து 'ஏன் இந்த நேரத்தில் இங்கு வந்தீர்கள்?' என்று கேட்டான். அதற்கு அவள் 'இங்கு ஏதோ சத்தம் கேட்டது அது தான் வந்தேன்' என்றாள். 'அது நீதானா?' என்றான். மீண்டும் அவள் சிறிய துவாரம் ஊடாக வெளியே வந்தாள். வந்தியத்தேவனும் நானும் இப்போதே வெளியேற வேண்டும் அல்லா விட்டால் இந்தச் சூழ்ச்சிக்காரரிடம் அகப்பட்டுவிடுவோம் என்றபடி வெளியேறினாள் அப்பொழுது வந்தியத்தேவன் மணிமேகலையிடம் 'தாங்கள் இளவரசி மணிமேகலையா அம்மணி இந்த ஒரு தடவை மட்டும் என்னை மன்னித்து காப்பாற்றி விடுங்கள் இனி தப்பு செய்ய மாட்டேன் உங்களுக்கு கோடி புண்ணியம் உண்டு' என்றான். மேலும் 'என்னைக் கொலைகாரரிடம் இருந்து காப்பாற்றுங்கள்' என்று கேட்டான். மணிமேகலை விளக்கை ஏற்றினாள். வந்தியத்தேவனைக் கண்டு மெய் மறந்து நின்றாள். மயக்கம் தெளிந்து 'நீ வீராதி வீரன் ஏன் தப்பி வருகிறீர் இங்கு உயிர் தப்ப வந்தீரா அல்லது உயிர் எடுக்க வந்தீரா?' என்று கேட்டாள். 'அம்மணி இது என்ன நான் யார் உயிரை எடுக்கப் போகிறேன்' என்றான் வந்தியத்தேவன். 'என் தமையனை நீர் முதுகில் குத்தி கொல்ல முயன்றாய் அல்லவா உம் சிநேகிதத் துரோகம் எல்லோரும் அறிந்ததே' என்றாள். 'இது யார் சொன்னது?' என்று மணிமேகலையைப் பார்த்துக் கேட்டான்




வந்தியத்தேவன். அதற்கு மணிமேகலை 'என் அண்ணன் சொன்னான்' என்றாள். 'அத்தனையும் பொய் உண்மை என்ன என்பதை சொல்கிறேன் கேளுங்கள். நான் தஞ்சை பாதாள சிறையில் இருந்து தப்பும் போது யாரோ அவனை முதுகில் குத்தி தஞ்சாவூர் மதில் சுவர் அருகில் போட்டிருந்தார்கள். அவனை நான் தூக்கிக் கொண்டு போய் சேந்தன் அமுதன் குடிசையில் சேர்த்துக் காப்பாற்றினேன்' என்றான். அதற்கு மணிமேகலை 'இல்லை என் அண்ணன் சொன்னான் நீ என்னை என் அழகைப் பழித்தீராம் அதனால் தான் அவன் உம்மிடம் சண்டை செய்தானாம் அப்போது நீ முதுகில் குத்திவிட்டு ஓடினீராம்' என்றாள். 'பொய் பொய் பெரிய பொய் தாங்கள் எத்தனை பேரழகி இராஜ்ஜியம் ஆளும் பேரரசர்கள் தங்களை மணக்க இருப்பதால் தங்களை மறந்துவிடுமாறு என்னிடம் கூறினான்' என்றான் வந்தியத்தேவன். 'சரி நான் இப்பொழுது அந்த கோட்டை அறைக்குள் சென்று உம்மை கொல்ல வந்தவர்கள் யார் என்று பார்த்து வருகிறேன் நீ இங்கே ஒழித்துக் கொள்ளும்' என்றாள் மணிமேகலை.

அப்பொழுது மணிமேகலையின் பணிப் பெண் அங்கே வந்தாள் 'அம்மா தஞசாவூர்க்காரர் கோட்டை அருகே வந்து விட்டார்களாம் மகாராணி உங்களை அழைத்து வரச் சொன்னார்கள்' என்றாள். இதைக் கேட்ட வந்தியத்தேவன் ஒழிந்து கொண்டான் பின்னர் அங்கிருந்து மேல் உள்ள படிகளில் ஏறினான். முன்னொரு முறை நான் கடம்பூர் வந்த போது இங்கு தானே படுத்துத் துாங்கினேன் மீண்டும் அதே இடத்திற்கு வந்து சேர்ந்தேனே சரி எப்படியாவது இங்கிருந்து தப்பியாக வேண்டும் என்று ஒருவாறு மதில் சுவர்களிற்கருகில் போய்விட்டான். மணிமேகலையை ஏமாற்றி விட்டு போக வேண்டியுள்ளது என்று கவலை கொண்டான். மணிமேகலையும் இராஜ உபசாரத்தில் ஈடுபட்டிருந்தாள் வந்தியத்தேவன் மதிலில் ஏறினான் குதிப்பதற்கு ஆயத்தமானான் அப்பொழுது ஒரு நாய் அவனைப் பார்த்து குரைத்தது. கீழே குதிக்க முடியாமல் விழித்தான்.. அங்கு பாண்டிய ஆபத்துதவிகளில் ஒருவனான தேவராளன் அவனைப் பார்த்துச் சிரித்தான். 'இங்கு மறைந்திருக்கும் வீர வைஷ்ணவனைப் பிடிக்க நீ உதவினால் உன்னை விட்டு விடுகிறேன் அல்லது நீ இந்த நாயின் பிடிக்கு அகப்பட்டு விடுவாய்' என்றான். வந்தியத்தேவன் 'அவன் என் அருமை சிநேகிதன் அவனுக்கு ஒரு போதும் துரோகம் செய்ய மாட்டேன் அவனுக்கு பதிலாக என்னைப் பலி கொடுத்து விடு' என்ற மறு கணம் வந்தியத்தேவன் தேவராளன் மீது பாய்ந்தான். அவன் அந்த அதிர்ச்சியை எதிர் பார்க்கவில்லை அவன் நாய் தன் எஜமானைத் தாக்குகிறவனைத் தாக்க வந்தது உடனே ஆழ்வார்க்கடியான் வெளிப்பட்டு அதன் முகத்தில் தன் துணியை போட்டு இழுத்து மரத்தில் கட்டினான். தேவராளனின் கையும் காலும் கட்டப்பட்டது. பின் மதில் மேல் ஏறினான். அப்பொழுது மாளிகை வாசலில் யானை மீது வரும் பழுவேட்டரையரையும் பளுவூர் ராணியையும் பார்த்தான். பளுவூர் ராணியும் இவர்களைப் பார்த்தாள். மதில் மீது யாரோ போகிறார்கள் அபாயம் என்று இரு குதிரை வீரர்களை அனுப்பினார். வந்தியத்தேவனும், ஆழ்வார்க்கடியானும் வந்த குதிரை வீரர்களைத் தாக்கி விட்டு குதிரைகளைப் பறித்துக் கொண்டு விரைந்து சென்றனர். ஆதித்தகரிகாலர் காஞ்சியில் இருந்து புறப்பட்டு கடம்பூர் வருவதாக அறிந்து கொண்டனர். இதனால் ஆதித்தகரிகாலரைத் தேடி பயணமானார்கள் மணி முத்தா நதி வெள்ளாற்றில் கலக்கும் வரை வாய்த்த இடத்தை தாண்டி ஆதித்தகரிகாலரும், அவர் நண்பர்களும் குதிரையில் வந்து கொண்டிருந்தனர். இவர்களுக்கு எதிர் திசையில் இருந்து ஆழ்வார்க்கடியானும் வந்தியத்தேவனும் வெகு வேகமாக வந்தார்கள் ஆதித்தகரிகாலரைக் கண்டவுடன் தம் குதிரைகளை தடால் என்று பிடித்து இழுத்து நிறுத்தினார். வந்தியத்தேவன் தன் குதிரை மேல் இருந்து குதித்தான் ஆதித்தகரிகாலனும் குதுாகலத்துடன் குதித்தான் வந்தியத்தேவனைக் கட்டியணைத்தான். இதனைக் கண்டு கந்தமாறனும் பார்த்திபேந்திரனும் பொறாமை கொண்டு தம் குதிரைகளை முன் நோக்கிச் சென்று நிறுத்தினார்கள். கந்தமாறன் 'கோமகனே இவன் எனக்கு சிநேகித துரோகி என்னை முதுகில் குத்தி காயப்படுத்தி விட்டு ஓடியவன் தாங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று எச்சரிப்பது என் கடமை.' என்றான். இதைக் கேட்ட ஆதித்தர் பெரும் சிரிப்பு சிரித்தார். கந்தமாறன் 'இவன் முதுகில் குத்த நீ ஏன் முதுகைக் காட்டினாய்?' என்றார். அதற்கு கந்தமாறன் 'இது சிரிப்பதற்கான விடயமா?' என்றான். 'சிரிப்பது மனிதனுக்கு மட்டும் கிடைத்த கொடை சிரிப்பின் அழகு சிரிப்பின் ஒலி மனித ஆயுளின் நீட்டம் நீ சிரிப்பை நிறுத்து என்றால் என் ஆயுளைக் குறை என்கிறாய்' என்றான். 'ஐயா நான் எதிர் பாராத சமயம் பின்னால் மறைந்து இருந்து என்னைக் குத்தினான் இறை அருளாலும் நந்தினியின் அன்பான சிகிச்சையாலும் நான் பிழைத்தேன் நியாயம் கேளுங்கள் தண்டனை கொடுக்க அனுமதி கொடுங்கள்' என்றான் கந்தமாறன். 'நண்பனே செம்பியன் குலத்து மன்னனிடம் நியாயம் சொன்னால் மனுநீதிச் சோழன் பசுவுக்கு நியாயம் சொன்னான். நான் உனக்கு கட்டாயம் நியாயம் சொல்வேன்' என்றபடி வந்தியத்தேவனைப் பார்த்து 'பின்னால் இருந்து குத்தியதற்கு காரணம் என்ன?' என்றான். வந்தியத்தேவன் 'இளவரசே நான் இந்த வீராதி வீரனை குத்தவும் இல்லை அதுவும் பின்னால் மறைந்திருந்து குத்தவுமில்லை முதுகில் குத்தப்பட்டு நினைவிழந்து இரத்த வெள்ளத்தில் கிடந்தவனை தோளில் தூக்கிக் கொண்டு போய் சேந்தன் அமுதன் வீட்டில் விட்டு காப்பாற்றினேன் இன்று அதற்காக வருந்துகிறேன். ஆனால் இவன் எப்படிப் பட்ட துரோகி என்று கேளுங்கள் எங்கே எந்த சந்தர்ப்பத்தில் குத்தப்பட்டார் தஞ்சாவூர் கோட்டை இரகசிய சுரங்க வழியாக இவனை யாரோ பழுவேட்டரையர் மாளிகையில் கொண்டு போய் விட்டுத் திரும்பினான். கடம்பூர் மாளிகையில் என்ன கூட்டம் நிகழ்ந்தது என்று கேளுங்கள்' என்றான். இதைக் கேட்ட கந்தமாறன் நடுங்கிப் போய் தன் வேலை எடுத்தான். உடனே ஆதித்தகரிகாலர் அதைப் பிடுங்கி ஜாக்கிரதை என்றான். பார்த்திபேந்திரன் குறுக்கிட்டு 'அரசே இவனைத் தீப்பிடித்த கப்பலில் இருந்து காப்பாற்றவே உங்கள் சகோதரன் கடலில் குதித்தார் பின்னர் பொன்னியின் செல்வர் மீண்டு வரவில்லை இவன் இங்கே முளைத்து நிற்கிறான் எப்படி என்று கேளுங்கள்' என்றான். அதற்கு வந்தியத்தேவன் 'பொன்னியின் செல்வன் இவனுடைய கப்பலில் ஏற்றினார் இவனுடைய கப்பலில் இருந்து கடலில் குதித்தார் இவன் ஏன் அவரைப் பாதுகாப்பாக உங்களிடம் கொண்டு வரவில்லை என்று கேளுங்கள்' என்றான். பார்த்திபேந்திரன் பதில் சொல்ல முடியாது திண்டாடினான். இளவரசரோ 'நீங்கள் மூவரும் என் நண்பர்கள் ஒருவருக்கொருவர் சண்டை செய்தால் அது எனக்கு அதிருப்தி தரும்' என்றார். பின்னர் அவர் பார்வை ஆழ்வார்க்கடியான் மீது விழுந்தது அப்பொழுது ஆழ்வார்க்கடியான் நான் முதல் மந்திரியிடமிருந்து வருகிறேன் செய்தியை கேளுங்கள்' என்றான்.

*(தொடரும்...)*

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன

# கியூபெக் மாநிலம், Dollar – Des – Ormeaux நகர பிதா Alex Bottausci அவர்களுக்கு கனடா தமிழ் பண்பாட்டுக் இயக்கம் பாராட்டுப் கேடயம் வழங்கியது



கனடா-வாழ் தமிழர்கள் ஆண்டுதோறும் தைத்திங்கள், பொங்கல் நாளை "தமிழர் மரபு தினம்" எனக் கொண்டாடி வருவதும், தை மாதத்தை கனடா-வில் உள்ள மத்திய அரசாங்கம் மற்றும் பல மாநில அரசாங்கங்கள் மற்றும் உள்ளாட்சி அமைபப்புக்கள் ஆகியன தமிழர் மரபு மாதமாக அங்கீகரித்தன. அத்துடன் ஒன்றாறியோ மாநில அரசும் இந்த மாதத்தை விசேடமாக அறிவிப்புச் செய்யதுள்ளமை நாம் அறிந்த செய்தியாகும்.

கியூபெக் மாநில நகரங்களில் ஒன்றான **DDO** என்று சுருக்கமாகச் சொல்லப்படும் நகரமான **Dollar-des-Omeaux** நகர பிதாவான உயர்திரு. அலெகன்ஸ் பொட்டாச்சி அவர்களது நகரசபை அங்கத்தினர்கள் அனைவரும் இந்நகரில் வாழும் தமிழர் சமூகத்தின் வேண்டுகோளை ஏற்று தமிழர் மரபு நாளை நகரசபை நிர்வாகம் அங்கீகரித்தமை பெருமை தரும் நிகழ்வாகும்.



இதன் பொருட்டு நகரபிதா அவர்களுகு கடந்த பெப்ரவரி சனிக்கிழமை, 12.02.2002, மாலை மொன்றியால் அருள்மிகு திருமுருகன் கோயில் கல்யாண மண்டபத்தில் பாராட்டு நிகழ்வு நடைபெற்றது. (கோவயில்) சைவ மகாசபை செயலாளர் திரு.நடராஜா வாகீசர் அவர்கள் தலைமையில் இவ்விழா ஒழுங்கேறியது.

விழாவில் பிரதம சிவாச்சாரியார் ஸ்ரீ வெங்கடேஸ்வரக் குருக்கள் வாழ்த்துரை வழங்க, ரொரன்ரோவிலிருந்து வெளியாகும் "உதயன்" வார இதழின் பிரதம ஆசிரி-யரும் கனடா உலகத் தமி-ழர் பண்பாட்டுக் கழகத்தின் கனடாக் கிளையின் தலை-வருமாகிய திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் அ வ ர ் க ளு டை ய சிறப்புரையுடன், பண்பாட்டுக் இயக்கத்தின் சார்பாக நக-ரபிதா அவர்களுகுக சிறப்பு நினைவுக் கேடயம் ஒன்று வழங்கி கௌரவம் செய்யப்பட்ட இந்நிகழ்வை பல தமிழ் அன்பர்கள் கலந்து பெருமை சேர்த்தார்கள்.

**Quebec's Dollar - Des - Ormeaux City's Mayor was honored with Award of Appreciation by the International Tamil Cultural Association of Canada**

Tamils living in Canada every year celebrate Pongal Celebrations and "Tamil Heritage Month in Month of January. It is also celebrated by the Federal Government of Canada and several Provincial Gov-ernments and Local bodies in January. which is be-ing proclaimed as Tamil Heritage Month. And the Government of Ontario. very recently has made a Special Announcement about Month of January.

Dollar-des-Omeaux City's Mayor, His Worship Alex Bottausci and their City Council members heard and recognized the request of the Tamil Com-munity. Finally, the Municipal Council, proclaimed January as the 'Tamil Heritage Month
An event of appreciation was hosted on last Sunda, February 12.02.2002, at Arulmigu Thirumurugan Temple Hall in DDO City.

அங்கு உரையாற்றிய நகர பிதா **Alex Bottaus-ci** தனது உரையில் "எமது நகரசபை எல்லைக்குள் வசிக்கும் தமிழ் மக்களும் கியுபெக் மாநிலத்தில் ஏனைய பிரதேசங்களில வாழும் தமிழ் மக்களும் இந்த மாநக சபைக்கும் மாநிலத்திற்கு அரிய சேவையாற்றி வருகின்றனர். அவர்களின் வேண்டுகோளை ஏற்று எமது நகரசபையின் அங்கத்தவர்கள் அனைவரும் தங்கள் ஆதரவை வழங்கியுள்ளனர். அத்துடன் கனடாவிலும் மொன்றியால் மாநகரிலும் தமிழ்ப் பண்பாட்டு முறைகள் மற்றும் தமிழ்க் கலை-களை வளர்த்து வரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளை எனக்களித்த பாராட்டுக்களை நான் நன்றியுடன் ஏற்றுக்கொள்கின்றேன். அத்துடன் இனிவரும் காலங்களிலும் இங்கு வாழும் தமிழ் மக்கள் எம்மிடம் விடுக்கின்ற வேண்டுகோள்கள் அனைத்தையும் நாம் நிறைவேற்றித் தருவோம் என்று உறுதி கூறுகின்றேன்" என்றார்.

தமிழ் அன்பர் "வீணைமைந்தன", திரு. கே.ரி. சண்முகராஜாவின் வேண்டுக்கோளாக இனிவரும் காலங்களில் 'மரபு திங்கள் நினைவு' கொண்டாட்ட நிகழ்வுகள் **DDO** நகரசபை கலையரங்களில் நடைபெற வேண்டும் எனும் விருபத்தை
திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் நகர பிதாவிடம் எடுத்துரைக்க, நகரபிதா அக்கோரிக்கையை ஏற்றுப் பதில் வழங்கியது அங்கு கூடியிருந்தோர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

*Journalists:- . Veenaimainthan and Arjune*

# கடந்தவையும் கடப்பவையும் (23)

**- உமா மோகன் -**

*ஒல்லாந்தர் காலத்திலும் எம்மவர் கொண்டிருந்த*
*கல்விச் சிறப்பைப் பார்த்தவாறு கடக்கின்றோம்*

*மதம் பரப்ப வந்தவர்கள் பெண்களுக்கு - நல்ல*
*தனம் அளித்த அவ்விடத்தை நெருங்குகின்றோம்*

*யாழ்ப்பாண அரசிலும் இருக்கவில்லை - பெருமளவில்*
*போத்துக்கேய அரசிலும் இருக்கவில்லை - ஏன்*

*ஒல்லாந்தரும் கல்வி கொடுக்கவில்லை - அங்கு*
*எல்லோருக்கும் கல்வி இல்லையெனினும் - இருந்ததுவாம்*

*திண்ணைப் பள்ளிகள் ஆண்களுக்காய் - அதுவும்*
*நல்ல இடத்தில் பிறந்தவர்தான்*

*எல்லா இடத்திலும் வல்லவராய் இருந்ததுண்டாம்*
*நல்லகாலம் ஆங்கிலேயர் வந்ததனால்*

*எல்லோரும் கல்வி பெற்றார் என்பதோடு,*
*சொல்லவெண்ணாப் பெரு மாற்றம் பெண்களில்த்தான்*

*மதம் மாற்றும் பயத்தினாலும் - அவரவர்*
*பெயர் மாற்றும் பயத்தினாலும்*

*படிக்க மறுத்த நிலை கண்டு,*
*'எழுத்தைப் படியுங்கள் முதலில் பின் அறியுங்கள் உங்கள் மதத்தை' என்று*

*தொடங்கினாராம் பூவர் அம்மையார் - அவர்*

*உண்டி கொடுத்து, உடை கொடுத்து*
*தங்கிப் படிக்க இடம் கொடுத்து - என*

*அத்தனையும் கொடுத்ததோடு யாழ்ப்பாணத்துச்*
*சீதனமும் தான் கொடுத்து (ரூபா75/-)அங்கு*

*சாதிமத பேதமற்ற திருமணமும் செய்துவைத்த*
*போதகராய் இருந்தாராம் அந்த ஊரில்.*

*உவின்லோ அம்மையார் என்றொருவர்*
*அவர் வீட்டில் மூன்று பெண்கள்*

*படிப்பதற்காய் போயிருக்க அன்று பார்த்து*
*இடிமுழக்கம் அதிகமாக அதில் ஒருவர்*

*அம்மையார் வீட்டில் உணவுண்டார் என்பதற்காய் - அவள்*
*தந்தை அவர் இப்படிச் சொல்லியுள்ளார்*

*'இவள் உங்கள் வீட்டில் உண்டதனால்*
*இவளை எங்கள் இனத்தில் அண்டமாட்டார் - இனி*

*உங்களோடு வைத்திருங்கள்' என்று சொல்லி*
*அங்கேயே விட்டுவிட்டுப் போய்விட்டாராம்*

*உடுவில் பெண்கள் தங்கும் இடப் பாடசாலை உருவான வரலாறு இது எனவும்,*
*இதைத் தொடர்ந்தே*

*ஆங்காங்கே மேலும் பல வந்தனவாம்*
*தென்னாசியவின் முதலப் பெண்கள்*

*தங்குமிடப் பாடசாலை அமைந்துள்ள*
*அந்தப் பாடசாலை பாதை வழி போவதுவும் பெருமகிழ்ச்சி எங்களுக்கும் - ஆனாலும்*

*அங்கும் தான் நிற்கின்றார்கள் - அன்றைய*
*காந்தியின் கைப் பொம்மைகள் ஆங்காங்கே*

*நேந்துவிட்ட ஆடுகளின் நிலைமாறி - திரும்பிப்*
*போகப் போறோம் என்ற பூரிப்போடு போலும்...*

**(தொடரும்)**

# சூரிய புயலில் சிக்கி 40 செயற்கைகோள்கள் சாம்பலாகின..! வெளியான அதிர்ச்சி தகவல்



பூமியின் சுற்று வட்டப்பாதையில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் சுமார் 2 ஆயிரம் ஸ்டார்லிங்க் செயற்கை கோள்கள் சுற்றி வருகின்றன. அதன் மூலம் உலகின் தொலை தூர இடங்களுக்கு இணைய வழி சேவை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த செயற்கைகோள்கள் பூமியை 340 மைல்களுக்கும் அதிகமான உயரத்தில் சுற்றி வருகின்றன. இந்நிலையில், அமெரிக்காவின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் விண்வெளிக்கு அனுப்பிய 40 செயற்கைகோள்கள் சூரிய புயலில் சிக்கி எரிந்தன. கடந்த 4ஆம் தேதி வளிமண்டலத்தில் சூரியபுயல் ஏற்பட்டது. இந்த சூரிய புயலால் வளிமண்டலம் அடர்த்தியானது. இதன் காரணமாக கடந்த வாரம் விண்வெளியில் செலுத்தப்பட்டிருந்த 49 சிறிய செயற்கைகோள்களில் 40 செயற்கைகோள்கள் புவி வட்டப்பாதையில் இருந்து விலகி மீண்டும் வளி மண்டலத்திற்குள் நுழைந்தன. இதனால், அவை தீப்பிடித்து எரிந்தன. இன்னும் சில செயற்கைகோள்கள் புவி வட்டப்பாதையில் இருந்து விலகும் நிலையில் உள்ளன. மேலும், இந்த விபத்தை தவிர்க்க மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் தோல்வியில் முடிந்தன. இந்த சம்பவத்தால் புவி வட்ட பாதையிலோ பூமியிலோ எந்த ஆபத்தும் ஏற்படவில்லை என ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# ஈழத்துத் திருக்கோவில்கள் 986



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## புலோலி பர்வதவர்த்தினி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தானம் (பருத்தித்துறை சிவன் கோயில்)

*"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்*
*பெருங்கோயில் எழுபதினொ டெட்டு மற்றும்*
*கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற்கோயில்*
*கருப்பறில் பொருப்பனைய கொகுடிக் கோயில்*
*இருக்கொதி மறையவர்கள் வழிபட் டேத்தும்*
*இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்*
*திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து*
*தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே"*

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்றார் திருமூலர். நம்முடைய உள்ளத்திலே இறைவன் குடிகொண்டு விளங்குகின்றான் என்பதை அப்பர் பெருமானும் "காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக" என அழகாக எடுத்துரைத்துள்ளார். இவ்வாறு அகத்தே குடிகொண்டிருக்கும் இறைவன், புறத்தே கோயில் கொண்டு விளங்கும் இடமே திருக்கோயில்களாக விளங்குகின்றன. இத்தகைய திருக்கோயில்கள் அமைந்துள்ள இடத்தில் வாழ்வதே பெருமை என்பதை "கோயில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்" "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்னும் பழமொழிகளாக நம் முன்னோர்கள் உணர்த்தியுள்ளனர்.

திருக்கோயில்கள் நம் வாழ்வின் மையப்பொருளாகத் திகழ்கின்றன. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என ஐந்தொழில்கள் புரியம் இறைவன் எங்கும் நிறைந்த பரம்பொருளாகக் காணப்படுகின்றான். இவ்வாறான பரம்பொருள் ஆங்காங்கே கோயில்கொண்டுள்ள மூர்த்திகளில் எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். ஊனுடம்பு ஆலயம் என்ற ரீதியில், ஆத்மார்த்தமாக இறைவனை உள்ளத்திருத்தி வழிபடுவோர் உள்ளத்திலும், ஆகமநெறிகளிலே கூறப்பட்டுள்ள மந்திரபூர்வமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள மூர்த்திகளிலும் உருக்கொண்டு, சகல உயிரினங்களுக்கும் இறைவன் அருள்புரியும் இடமாக திருக்கோயில்கள் காணப்படுகின்றன.

உலகிலுள்ள உயிரினங்களுக்கு உடல் ஆரோக்கியம், மனஅமைதியும் மற்றும் அனைத்து அருட்கொடைகளையும் வழங்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கு, மனித சமுதாயம் சமர்ப்பிக்கும் நன்றிக்கடனாக, கோயில்களும், வழிபாடும் அமைந்து காணப்படுகின்றது. கோயில்களைக் கட்டி, கும்பாபிஷேகம், நிகழ்த்தி, திருவிழாக்கள், வழிபாடுகளை நடத்தி மகிழ்கின்றோம். இந்த வழிபாட்டிலே நாம் உண்பதை முன்கூட்டியே இறைவனுக்கு நைவேத்தியம் செய்வதான மரபு காணப்படுகின்றது. அவ்வாறே நாம் அணியும் ஆடை ஆபரணங்கள்போல ஆண்டவனுக்கும் அணிவிக்கின்றோம். இவையெல்லாம் எமது மனதிற்கு அமைதியையும், ஆறுதலையும் அளிப்பதற்காக முன்னோர்களால் வகுக்கப்பட்டவையாகக் காணப்படுகின்றன.

வேதங்களும், இதிகாசங்களும், புராணங்களும் பல்வேறு பக்தி இலக்கியங்களும் மக்களை நல்வழிப்படுத்துகின்றன. ஈழத்திலுள்ள கோயில்களினால் மக்கள் மனஅமைதியையும், வாழ்க்கையின் நிதர்சனத்தையும் உணர்ந்து வாழ்ந்துகொள்ளும்நிலை காணப்படுகின்றது கோயில் கட்டுமானங்கள், அமைப்பு முறைகளில் பல்வேறுவிதமான வேறுபாடுகள் காணப்படலாம். இறைவனின் திருவுருவங்களும், அமைப்புக்களும் பலவிதமாக அமைந்திருக்கலாம். ஆனால் வழிபடும்நோக்கமும், மன ஒருமைப்பாடும் எல்லா இடங்களிலும் ஒரேமாதிரியாகவே போற்றப்படுகின்றது. ஆன்மீக எண்ணமே நாட்டுமக்களை நல்வழிப்படுத்தி, அன்பை நிலைநாட்டும் பெருஞ்சக்தியாக விளங்குகின்றது. ஈழமெங்கும் இவ்வாறான திருக்கோயில்கள் பரந்து காணப்படுகின்றன.

இக்கோயில்களிலே பரம்பொருளான சிவனின் பல்வேறு அம்சங்களாகவும், அவதாரங்களாகவும், பல்வேறு நிலையிலே திருவுருவங்களாக நிறுவி வழிபாடியற்றுகின்றனர். பரம்பொருளாகிய சிவவழிபாடு ஈழத்தின் தொன்மை மிகுந்த வழிபாடாகக் காணப்படுகின்றது. இவற்றின் வெளிப்பாடாக வரலாற்றுக்கு முந்திய காலப்பகுதியில் அமைந்த பஞ்சஈஸ்வரங்கள் காணப்படுகின்றன. இவற்றோடு சிவாலயங்கள் பல ஈழமெங்கும் பரவிக் காணப்படுகின்றன.

இவ்வாறான சிவன் கோயில்களுள் வடமராட்சி பருத்தித்துறை புலோலி கிழக்கில், பர்வதவர்த்தினி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தானம் என அழைக்கப்படும், பருத்தித்துறை சிவன்கோயில் காணப்படுகின்றது. இக்கோயில் அமைந்துள்ள பிரதேசத்தின் பண்டைக்காலப் பெயர், வென்றிவாகு தேவர் குடியிருப்பு என வரலாற்றிலே கூறப்பட்டுள்ளது.. இவ்வாலயம் அமைந்துள்ள பருத்தித்துறைப் பிரதேசம், இலங்கையின் வடகரையில் துறைமுகமும், நகரும் இணைந்த இடமாகக் காணப்படுகின்றது.

பருத்தித்துறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பெரிய நிலப்பரப்பாக புலோலி விளங்குகின்றது. அக்காலத்திலே புகழ்பெற்ற பல புலவர்களும், கற்றோரும் மற்றோரும் இங்கு வாழ்ந்த காரணத்தினால், புலவர் - ஒலி = புலோலி என பெயர் ஏற்பட்டதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இத்தகைய புகழ்பெற்ற பிரதேசத்திலே அமைந்துள்ள பர்வதவர்த்தினி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தானத்தின் தோற்றம், பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியைக் கொண்ட தொன்மையுடையதாக விளங்குகின்றது.

*தொடரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்னது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077



ALL DEBT SOLUTIONS CRP PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# அன்பின் தொனி - 642

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள் -** Be Holy

**பரிசுத்தம் அடைவதற்கான வழி**
**கிருபையினால் இரட்சிப்பு**

பாவிகளாகிய நாம் நமது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு இயேசு அண்டை அவருடைய மன்னிப்பைப்பெற விசுவா சத்தோடு வரும்போது, தேவன் தமது மாபெரும் கிருபையினால், மன்னிப்புக்கு தகுதியற்ற எம்மை மன்னிக்கிறார். அதனால் நாம் இயேசு கிறிஸ்து மூலமாய் இரட்சிப்பைப் பெற்று நித்திய ஜீவனின் நிச்சயத்தோடு வாழ ஏதுவாய் இருக்கிறது.

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு, ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல, **- எபேசீயர் 2: 8**

இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள், **- ரோமர் 3: 24**

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே நாமும் இரட்சி க்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோமே என்றான். **- அப்போஸ்தலர் 15: 11**

எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்து வின் மூலமாய் உண்டாயின. **- யோவான் 1: 17**

**விசுவாசியின் வாழ்க்கையில் கிருபை**

இரட்சிப்பைப் பெற்ற நாம் ஆண்டவரோடுள்ள நமது உறவில் ஒவ்வொரு நாளும் நாம் அவரோடுகூட நடக்கும்போது, எம்மை மேற்கொண்டு வீழ்த்தக்கூடிய தருணங்களைத் தொடர்ந்து சந்திக்கவேண்டி வரும். ஆப்பொழுது சூழ்நிலை எப்படிப்பட்டதாய் இருந்தாலும் நாம் தேவனுடைய வார்த்தையில் நம்பிக்கை வைத்து விசுாசத்தோடு தேவனிடம் ஜெபத் திலே தயிரியத்தோடு போவோமாயின், தேவன் தமது கிருபையால் எந்தச் சூழ்நிலையிலும் நாம் வெற்றிபெற வழிசெய்வார்.

ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிரு பாசனத்தண்டையிலே சேரக்கடவோம். **- எபிரேயர் 4: 16**

மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிற வர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார். **- 2 கொரிந்தியர் 9: 8**

**ஞானஸ்நானம்**

ஒருவர் தனது பாவத்திலிருந்து மனந்திரும்பி, இயேசு தனக்காக மரித்தார் என்பதை விசுவாசிக்கும்போது அநேக சாட்சிகளுக்கு முன்பாக முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கவேண்டுமென்பது தேவ நீதி. ஆண்டவராகிய இயேசு தாமே, இந்த நீதியை யோவான் ஸ்நானகனிடம் யோர்தான் நதியில் ஞானஸ்நாம் பெற்று நிறைவேற்றினார். மேலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, மரித்து உயிர்த்து பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுப் போவதற்குமுன், அவரில் விசுவாசிப்பவர்கள் அனைவரும் ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று கட்டளையிட்டார்.

அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசு த்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, **- மத்தேயு 28: 18-19**

கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞான ஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். **- ரோமர் 6: 3-4**

**ஞானஸ்நானம் அல்லது திருமுழுக்கு**

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். இத்திருவசனத்தின்படி ஒருவன் இரட்சிக்கப்பட கர்த்தர்மேல் விசுவாசம் வைத்தால் போதாது, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வது அவசியம். மேலும் நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று எழுதியிருக்கிறபடி, மனந்திரும்பி பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொண்டவர்களுக்கே ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டுமென்பது உண்மை.

தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பதே சரியான முறை என்பதை பரிசுத்த வேதாகமம் விளக்கிக் காட்டுகிறது. ஞானஸ்நானம் பெறுகிறவர் தண்ணீரில் மூழ்கும்போது கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்பட்டதாகவும், தண்ணீரை விட்டு எழும்போது கிறிஸ்துவுடன் எழுந்திருப்பதாகவும் விசுவாசிக்கிறோம். கிறிஸ்துவோடுகூட மரித்தேன், கிறிஸ்துவோடுகூட அடக்கம் பண்ணப்பட்டேன், கிறிஸ்துவோடுகூட உயிரோடு எழும்பினேன் என்பவைகளாகிய முக்கியபான ஆவிக்குரிய உண்மைகளை, ஞானஸ்நானம் என்னும் அடையாளச் செய்கையின் மூலம் வெளிப்படுத்துகிறோம்.

தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார், கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். **- எபேசியர் 2: 4-5**

*தொடரும்...*

A1 AC TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

கியூபா சுற்றுலா



ஒவ்வொரு மாதங்களிலும், முதலாவது கிழமைகளிலும்,
வேறு மாவட்டங்களுக்கும் வேறு நகரங்களுக்கும்
2022ம் ஆண்டு தை, மாசி, சித்திரை, வைகாசி, ஆனி,
புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களிலும்

7 நாட்களுக்கு யாவும் உள்ளடக்கப்பட்டது

| 3 star ★★★ | 3½ star | 4 star ★★★★ | 4½ star | 5 star ★★★★★ |
|---|---|---|---|---|
| REGULAR C$1,000 | REGULAR C$1,250.00 | REGULAR C$1,500.00 | REGULAR C$1,750.00 | REGULAR C$2000.00 |
| 25% OFF C$ 750.00 | 25% OFF C$ 1,000.00 | 25% OFF C$ 1,250.00 | 25% OFF C$ 1,500.00 | 25% OFF C$ 1,750.00 |

நல்ல சேவைக்கு விளம்பரம் தேவையில்லை. மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஒருமுறை மட்டும் தான் வரும் விளம்பரத்தை எடுத்து வைக்கவும்.
a1actour.com@gmail.com

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு (7 நாட்கள்) ஒரு கிழமை சுற்றுலாவுக்கு இந்த விலை

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது
விமான சீட்டு | தங்குமிட வசதி | விமான நிலையத்திற்கும் தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை
காலை உணவு | மதிய உணவு | இரவு உணவு | மது பானம் | குளிர்பானம் | சுடுபானம்

3 மாதத்திற்கு முன்பு முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்
சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guideமொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8
FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER
www.a1actour.com
facebook.com/Allcountriestour
416 644 7273 | 416 857 5252 | Cuba Cell: +53 555 915 57

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

LOOKING FOR YOUR Dream House?
Call SEYON CHANDRAKUMAR
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
RE/MAX ROYAL PROPERTIES
BUYING SELLING INVESTING

உதயம் 1350 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 18, 2022

# ‘ஆன்மீகக் குரு’ மேல்மருவத்தூர் ‘அருள்மிகு அடிகளார்’ அவர்களின் 82வது அவதாரப் பெருவிழா



தமிழ்நாட்டின் மேல்மருவத்தூர் ஸ்ரீ ஆதிபராசக்தி ஆலயத்தை நிறுவி சக்தி வழிபாட்டின் பெருமைகளை உலகெங்கும் பரப்பி வருகின்ற ‘ஆன்மீகக் குரு’ அருள்மிகு அடிகளார் அவர்களின் 82வது அவதாரப் பெருவிழா எதிர்வரும் 03-03-2022 அன்று தமிழ்நாட்டின் மேல்மருவத்தூர் ஸ்ரீ ஆதிபராசக்தி ஆலயத்திலும் மற்றும் உலகெங்கும் உள்ள வழிபாட்டு மன்றங்களிலும் நடைபெறும் என்ற செய்தியை கனடாவில் உள்ள மேல்மருவத்தூர் ஸ்ரீ ஆதிபராசக்தி அலயம் சார்பான சக்திகள் தெரிவித்துக்கொள்கின்றார்கள் அடிகளாரின் அவதாரத் திருநாளை முன்னிட்டு திட்டமிட்டவண்ணம் தமிழ்நாட்டின் ஆலயத்தில் சிறப்பான நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பெற்றுள்ளன.

# ஆறு கட்சிகளுக்கும் இந்தியாவின் பதில் என்ன?

***யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்***



அடுத்த மாதம் நடுப்பகுதியளவில் இந்திய பிரதமர் மோடி கொழும்பில் நடக்கவிருக்கும் பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கைக்கு வர இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கட்டுரை எழுதப்படும் இந்நாள் வரையிலும் இந்திய அரசாங்கம் அதனை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தி இருக்கவில்லை.

அவ்வாறு நரேந்திர மோடி இலங்கைக்கு வருவாராக இருந்தால் இங்கே,அவர் தனக்கு ஒரு கூட்டுக் கோரிக்கையை முன்வைத்த ஆறு கட்சிகளையும் சந்திப்பாரா? *(தொடர்ச்சி உள்ளே 10ம் பக்கத்தில்)*

# கனடாவின் கியூபெக் மாநிலத்தில் அமைந்துள்ள திரிவேணிசங்கமம் Trois – Rivieres



கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று ‘உதயன்’ வார, இதழின் செய்தியாளர்கள் குழுவினருடன் ‘ரூபம்’ இணைய ஊடகத்தின் செய்தியாளர்களும் இணைந்து கியூபெக் மாநிலத்தின் முக்கிய வரலாற்று நகரங்களில் ஒன்றான **Trois – Rivieres** நகருக்குப் பயணம் செய்யும் வாய்ப்புக் கிட்டியது. அன்று ஒரு ஞாயிறுதினம். விடுமுறைநாளாக இருந்தது
ஆனால் உல்லாசமாகவோ – உற்சாகமாகவோ பயணிப்பதற்குக் கவர்த்தியநிலை சாதகமாக அமையவில்லை. காற்று வீச்சுடன் 27 **C** அல்லது 30 **C** குளிர் வெப்ப நிலையை உணர்ந்தோம். சுமார் இரண்டு மணிநேரப் பயணத்தின் பின் கியூபெக் மாநில **(Maurice Region) Reginal** தலைநகரமாகிய **Trois -Rivieres** (தமிழில் “மூன்று நதிகள்” கூடும் இடம் என்று பொருளாகும் நகரைச் சென்றடைந்தோம். *(தொடர்ச்சி உள்ளே 17ம் பக்கத்தில்)*

# CORNWALL நகரில் வாழும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளோடு ஊடகவியலாளர் நடத்திய சந்திப்பு




கியுபெக் மாநிலத்தையும் ஒன்றாரியோ மாநிலத்தையும் பிரிக்கும் எல்லையில் ஒன்றாரியோ மாகாணத்தில் அமைந்திருக்கும் கோர்ன்வால் நகரத்தில் பல்வேறு சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர். கனடாவின் மூத்த குடிகளான பழங்குடி சமூகத்தினரும் பெருமளவில் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் புலம் பெயர்ந்த தமிழ் மக்களும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் இங்கு வாழ்ந்த வண்ணம் ஏனைய சமூக மக்களோடு தொடர்புகளைக் கொண்டு வாழ்ந்தாலும் தனித்துவமான தமிழர் பண்பாடு கல்வி மற்றும் கலைகளில் ஈடுபாடு கொண்டு அவற்றையும் பின்பற்றி வாழ்ந்து வருகின்றனர்.
இவ்வாறு தமிழ் அமைப்புக்களையும் நடத்திய வண்ணம் கல்வி நிறுவனங்களையும் வர்த்தக நிலையங்களையும் நடத்துகின்றவர்களாக எமது தமிழ் மக்கள் கோர்ன்வால் நகரில் வாழ்ந்து வருகின்றனர். அவர் அந்த நகரில் வாழும் சிறார்களின் தமிழ்க் கல்விக மற்றும் நுண்கலைகள் ஆகியவற்றிலும். ஈடுபாடு கொண்டு தமிழ்ச் சமூகத்திற்கு பங்காற்றி வருகின்றனர்.
*(தொடர்ச்சி உள்ளே 6ம் பக்கத்தில்)*

# “கணக்கியதுறையில் ஆழமான அறிவும் அளவற்ற செல்வமும் கொண்டிருந்தாலும் ஆர்ப்பாட்டம் இல்லாத வாழ்வை மேற்கொண்டவர் சீலா சுகுமார் அவர்கள்”

## 31ம் நாள் நினைவஞ்சலி நிகழ்வில் பலரும் புகழாரம்



“கனடாவில் நன்கு அறியப்பெற்ற வர்த்தகப் பிரமுகராகவும் மனிதநேயம் கொண்டவராகவும் அரசியல் ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கிவரும் கணேசன் சுகுமார் அவர்களின் துணைவியார் சீலா சுகுமார் அவர்கள், கணக்கியதுறையில் ஆழமான அறிவும் அளவற்ற செல்வமும் அடுத்தவர்களுக்கு உதவிடும் பண்பையும் கொண்டிருந்தாலும் ஆர்ப்பாட்டம் இல்லாத வாழ்வை மேற்கொண்டவர் அவரது அற்புதமான வாழ்வின் காலம் ஈடு செய்ய முடியாதது”

இவ்வாறு கடந்த சனிக்கிழமையன்று ஸ்காபுறோவில் நடைபெற்ற சீலா சுகுமார் அவர்களது 31ம் நாள் நினைவஞ்சலி நிகழ்வில் பலரும் அஞ்சலி உரையாற்றியபோது புகழாரம் சூட்டினார்கள். இங்கே காணப்படும் படத்தில் ஸ்காபுறோ வைத்தியசாலைகளுக்கு சுகுமார்-சீலா தம்பதியினரின் புத்திரச் செல்வங்கள் சஞ்சய், சோபியா ஆகியோர் மறைந்த தாயாரின் நினைவாக நிதி வழங்குவதைக் காணலாம். *(தொடர்ச்சி உள்ளே 15ம் பக்கத்தில்)*

JOGO
DIGITAL THERAPEUTICS + DIGITAL CLINIC
MAKING MUSCLE AND BRAIN WORK TOGETHER
2900 Markham Rd, Majestic City Mall, Unit A9, Scarborough, Ontario, M1X 1E6 Canada
Phone: +1 (416) 723-2000
Toll Free : +1 (877) 569-8282
Fax: +1 (647) 946-6480
Web: www.jogohealth.com
Email: torontoclinic@jogohealth.com

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்த வேண்டாம் என்கிறார் கோட்டாபாய



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்த வேண்டாம் என்றும் பயங்கரவாதத்துடன் தெளிவான தொடர்புகள் இருந்தால் மாத்திரம் பயன்படுத்துமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் விசாரணைகளை கைவிடுவதற்கு பயங்கரவாத தடைச்சட்டத்தை தவறாக பயன்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி பொலிஸாரிடம் கூறியதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.
பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாக பொறுப்பற்ற பயன்பாடு நிறுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகவும் அது நடக்கிறதா இல்லையா என்று ஒரு வாய்ப்பு கொடுத்துப் பார்ப்போம் என்றும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.
*(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)*

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H.Selvanayagam Broker